# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 64 தை 16ஆம் நாள் திங்கட்கிழமை 29 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# தமிழருக்கு எதிரான சுத்திகரிப்பு வடக்கில் இன்னும் தொடர்கிறது!

## ஐ.நாவின் முன்னாள் அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29
இல்கையின் உள்நாட்டுப் போரில், 25 வருடங்களாகத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகள் இனச்சுத்திகரிப்பே என்று ஐ.நாவின் முன்னாள் பணியாளரான பென்ஜமின் டிக்ஸ் கூறியுள்ளார்.

இன்றும் கூட தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசத்தின் இனத்துவப் பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிப் பகுதியில், 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையான நான்கு வருடங்கள், ஐ.நாவின் தொடர்பாடல் முகாமையாளராக பென்ஜமின் டிக்ஸ் பணியாற்றியிருந்தார். ஒரு சிறந்த ஒளிப்படக் கலைஞருமான டிக்ஸ், இந்தியாவின் ஜெய்பூர் நகரில் நடந்த ஜெய்பூர் இலக்கிய விழாவில் பங்கேற்றிருந்தார். அங்கு பிரிஜ செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த செவ்வியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையில் இரண்டு தரப்பிலுமே கொடூரமான குற்றங்கள் இழைக்கப்பட்டன. இராணுவம் போர்க்குற்றங்களை இழைத்தது. ஆனால் உள்நாட்டுப் போரின் கடைசி 10 வருடங்களில் தமிழ்த் தலைமை தோல்வியடைந்தது.

தாங்கள் கொடுமைகளை இழைத்ததாக இலங்கை இராணுவம் நம்பவில்லை. தமிழ்த் தலைமையிடம் இருந்து » 06

# தேர்தல் பிற்போடப்படுமா? வேண்டாம் – தேசப்பிரிய

கொழும்பு, ஜன. 29
உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்தமாதம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும் அது நடைபெறும் திகதியில் மாற்றம் வரலாம் என்று கூறப்படுகிறது.

ஆனால், எது எவ்வாறிருந்தாலும் தேர்தலைப் பிற்போடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

பிணை முறி சம்பந்தமான விவாதத்தை நாடாளுமன்றில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடத்தத் தலைமை அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். அந்த விவாதம் குறித்த திகதியில் இடம்பெறுமாக இருந்தால் தேர்தல் திகதி மாற்றப்படலாம் என்று கூறப்படுகிறது. பரப்புரைகள் எதிர்வரும் 7அல்லது 8ஆம் திகதி நள்ளிரவுடன் நிறுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கும் நிலையில் இந்த விவாதம் எப்படிச் சாத்தியமாகுமென்று கேள்வியெழுப்பப் பட்டுள்ளது.

தேர்தல் நடத்தும்போது பிரச்சினைகள் ஏற்பட்டால் உள்ளூராட்சித் தேர்தல் சட்டவிதிக்கு அமைய தேர்தல் ஆணைக்குழு அரசிதழின் கட்டளைக்கு அமைய அவசியமான எல்லாவிதமான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் பின்பற்றும். தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் தேர்தல் பரப்புரைகளை நிறுத்துவதும் இதனுள் அடங்கும். இந்த விவாதம் நடந்தால் ஆணைக்குழு சட்டப்படி இந்தத் தேர்தலை பின் போடமுடியும். » 06

# காளியம்மனின் கண்கள் திருட்டு

கொழும்பு, ஜன. 29
அநுராதபுரம், புனித பூமியில் பத்திரகாளியம்மன் ஆலயத்திலுள்ள காளியம்மன் சிலையில் தங்கத்தால் பொறிக்கப்பட்டிருந்த கண்கள் களவாடப்பட்டுள்ளன.

கோவிலில் வைக்கப்பட்டிருந்த பத்திரகாளியம்மன் சிலையானது 100 வருடங்கள் பழைமையானது என்று பக்தர்கள் தெரிவிக்கின்றனர். பக்தர் ஒருவரால் வழங்கப்பட்ட நன்கொடை மூலமே தங்கக் கண்கள் பொருத்தப்பட்டன.

பத்திரகாளியின் கண்கள் களவாடப்பட்டுள்ளதால் பக்தர்கள் கடும் சீற்றத்தில் இருக்கின்றனர். திருடர்கள் விரைவில் இறை சாபத்துக்கு உள்ளாவார்கள் என்றும் நம்புகின்றனர்.

இது தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-5)

# வடக்கு, கிழக்கு இணைந்த கூட்டாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு இணைப்பைக் கைவிட்டுள்ளது. ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு இணங்கி விட்டது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்துக்குள் கூட்டாட்சிக் (சமஷ்டி) கட்டமைப்புக்குள்ளே அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள » 06

# தோல்வியின் வெளிப்பாடே மைத்திரியுடைய அறிவிப்பு

## சு.கவுடன் சேரும் எண்ணம் இல்லை என்கிறது கூட்டு எதிரணி

கொழும்பு, ஜன. 29
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு காலம் கடந்த ஞானம் வந்துள்ளது என்று விமர்சித்துள்ளது மகிந்த அணி.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 96 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தம்முடன் இருந்தால், நாளை வேண்டுமானாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசை அமைக்கத் தயார் என்று அரச தலைவர் அறிவித்திருந்தார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் டி சொய்சா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியல் ரீதியாக தான் அநாதையாக்கப்பட்டுவிட்டார் என்பதையே அரச தலைவரின் கருத்து எடுத்துக்காட்டுகின்றது.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால, மகிந்த அணியுடன் இணைந்து சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசை அமைப்பதற்கு தயார் என்று குறிப்பிட்டிருந்தார்.

2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அரச தலைவர் மைத்திரிக்கு நாம் இதைத்தான் கூறி » 06

# கொள்ளையை மறைக்க முயற்சிக்கிறார் ரணில்

## மகிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 29
கொள்ளைச் சம்பவத்தை மேலும் மூடிமறைப்பதற்காகவே 8ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் » 06

# மகிந்தவுடன் கூட்டுச் சேர்ந்தால் மைத்திரிக்குப் பாடம் புகட்டுவோம்

## பழனி திகாம்பரம் சூளுரை

யாழ்ப்பாணம், ஜன. 29
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனிஆட்சி கொண்டு வந்தால், சு.க.வினருக்குத் தகுந்த பாடம் புகட்டுவோம். 2 வருடங்களில் தற்போதைய தலைமை அமைச்சர் ரணிலை அரச தலைவராக்கிக் காட்டுவோம்.

இவ்வாறு சூளுரைத்தார், தொழிலாளர் தேசிய சங்கத்தின் » 06

# கடலில் குளித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்

## முல்லைத்தீவில் சோகம்

முல்லைத்தீவு, ஜன. 29
முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரைக் கடலில் குளித்த இளைஞன் ஒருவர் கடல் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது. உதயநகர் கிழக்கு கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெயசங்கர் மயூரன் (வயது -27) என்பவரே உயிரிழந்தார்.

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு, சுதந்திரபுரம், மற்றும் உடையார் கட்டு பகுதிகளைச் சேர்ந்த எட்டு இளைஞர்கள், இளம்பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து முச்சக்கரவண்டி யிலும் உந்துருளியிலும் முல்லைத்தீவுக் குச் சென்றுள்ளனர். முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரையில் கடற்குளயலில் ஈடுபட்டுள்ளனர். இந்த கடற்கரை குளிப்பதற்கு பாதுகாப்பற்ற கடற்கரை என்று பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏழுபேர் கடலில் இறங்கிக் குளித்துள்ளார்கள். கடல் அலை அதிகரித்ததால், ஒவ்வொருவராகக் கரையேறியுள்ளார்கள். » 06

# பெப். 8ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கைகள் மீதான விவாதம்

## கட்சித் தலைவர்களின் ஆதரவைப்பெற இன்று சந்திப்பு நடத்துகிறார் மைத்திரி

கொழும்பு, ஜன. 29
மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் மகிந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பெரிய ஊழல், மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கை ஆகியவற்றின் மீதான விவாதம் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அறிக்கைகள் மீது எதிர்வரும் பெப்ரவரி 20, 21ஆம் திகதிகளிலேயே விவாதம் நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தேர்தலுக்கு முன்னர் முடிந்தால் விவாதத்தை நடத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரி சவால் விடுத்திருந்தார். அந்தச் சவாலை ஏற்று எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளு மன்றத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரணில் அறிவித்திருந்தார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி நள்ளிரவுடன் அரசியல் கட்சிகளின் அறிவிப்பு » 06

# வாக்குரிமையை ஆயுதமாக பயன்படுத்துவது அவசியம்

## வலியுறுத்துகின்றது வேலைதேடும் பட்டதாரிகள் சங்கம்

மட்டக்களப்பு,ஜன.29

வாக்குரிமையை போராட்ட ஆயுதமாக பயன்படுத்த முடிவெடுத்துள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"எங்களுக்கான தொழிலுரிமை மறுக்கப்படுகின்ற போது எங்களுக்குள்ள ஒரேயொரு உரிமை வாக்குரிமையாகும். அந்த வாக்குரிமையை நாங்கள் எங்களுடைய போராட்ட ஆயுதமாகப் பயன்படுத்த முடிவெடுத்துள்ளோம்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எங்களுடைய தொழிலுரிமைப் பிரச்சினை தொடருமாயின் கிழக்கு மாகாணத்திலுள்ள ஒட்டுமொத்த பட்டதாரிகளும் எந்தவொரு அரசியல் கட்சியினதும் பின்பலம் இல்லாமல் தன்னிச்சையான குழுவாக செயற்பட்டு அரசியலையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம்.

நாங்கள் போராட்டம் நடத்திய காலப்பகுதியில் பல அரசியல் பிரமுகர்களை நாங்கள் நாடியிருந்தோம். அவர்கள் எங்களுடைய போராட்ட களத்துக்கு வருகைதந்து பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர்.

ஆனால் அவர்கள் எங்களுடைய பிரச்சினையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று பேசி எந்தவொரு முடிவையும் பெற்றுத் தரவில்லை.

ஆகையால் நாங்கள் எங்களுடைய வாக்குரிமையை அவர்களுக்கெதிராக பயன்படுத்த முடிவெடுத்துள்ளோம்" - என்றார். (ற - ரி5)

# மு.கா.வின் போராட்டமானது அரசியல் விடுதலைக்கானதே

## மு.காவின் பிரதித் தலைவர் நஸீர் அஹமட் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.29

முஸ்லிம் காங்கிரஸினுடைய போராட்டம் என்பது இந்த சமூகத்தின் அரசியல் விடுதலைக்கான போராட்டமாகவே என்றும் செயலாற்றி வந்தள்ளது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார். ஏறாவூர் நகரில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எந்தவித நோக்கமோ குறிக்கோளோ இலக்கோ இல்லாமல் தேர்தல் காலத்தில் மட்டும் வீராவேசப் பேச்சுக்களை பேசுவதால் சமூகம் ஒரு போதும் அரசியல் விடுதலையைப் பெறப்போவதில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கென்று ஒரு இலக்கு உண்டு. அது சமூகம் சார்ந்த அரசியல் விடுதலையும் அபிவிருத்தியும் சுதந்திரமும் கொண்ட இலக்கு. ஆகவே, தேர்தல் கால வெற்றுப் பேச்சும், வெறும் வெட்டிப் பேச்சும் பேசி இந்த சமூகத்தை இனி எவரும் ஏமாற்ற முடியாது.

நாட்டிலே வரப்போகின்ற அரசியல் மறுசீரமைப்பில் முஸ்லிம் காங்கிரஸ் காத்திரமான அரசியல் அதிகார சக்தியாக இருந்து இந்த சமூகத்துக்கு முழுமையான அரசியல் அதிகாரத்தைப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்காக மக்கள் என்றும் எம்முடன் இருப்பார்கள்.என்றார். (ற.ரி4.46)



இலங்கைத் தமிழ் அரசு கட்சி சார்பில் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் இம்மனுவேல் ஆனல்ட் தனது தேர்தல் பரப்புரையை புனித அந்தோனியார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பித்தார். இதில் கிராம பெரியோர்கள். ஆதரவாளர்கள் இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற,ரி4,23)

# கொடுத்ததை வாங்குவதற்கு ஒரு கூட்டம் இருக்கின்றது

சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜன.29

தமிழ் மக்கள் பலவீனப்பட்டுவிட்டார்கள் புலிகள் மௌனிக்கப்பட்டுவிட்டார்கள் கொடுத்ததை வாங்கிக் கொள்ளுங்கள் என கூறக் கூடிய ஒரு கூட்டம் உள்ளது. அந்த கூட்டத்தின் தலைவராக சம்பந்தனை நான் நம்புகின்றேன்.

இவ்வாறு ஈழ மக்கள் விடுதலை புரட்சிகர முன்னணி கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை குட்குடியிருப்புவட்டாரத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்துதமிழ் மக்களுக்குரிய ஒரு தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொடுக்காமல் அரசால் கொண்டுவரப்பட்ட அரைகுறை தீர்வுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. அரைகுறைத் தீர்வுத் திட்டத்துக்கான ஆணையைக் கேட்டுத்தான் இந்த தேர்தல் நடைபெறுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு மக்கள் வாக்களிப்பதன் மூலம் அரைகுறைத் தீர்வுத் திட்டத்தை வடகிழக்கில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என அரசாங்கத்திடம் மாத்திரமல்ல பன்னாட்டிடமும் எடுத்துக் கூறி எமக்கு வழங்குவதற்கு முற்படலாம்.என்றார். (ற.ரி4)



# அனைவரும் ஒன்றிணைந்து வீட்டுக்கு வாக்களியுங்கள்

## பிரதேச சபை உறுப்பினர் நடனேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஜன.29

யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை பிரதிநிதியாக இருந்த உறுப்பினர்களில் நான் மட்டுமே வலி.மேற்கில் மக்கள் குறைகேள் அலுவலகத்தை ஸ்தாபித்து பொதுமக்களின் 240 க்கும் மேற்பட்ட பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்தேன்.

இவ்வாறு வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினரும் சமூக வீடமைப்பு குழு தலைவருமான தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார். வலி. மேற்கு அராலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உண்மையான மக்கள் சேவகனை அராலி மக்கள் நெஞ்சினில் நிலை நிறுத்தியுள்ளனர். அவர்களை ஏனையவர்கள் எப்படி பரப்புரை செய்தும் வெல்ல முடியாது. தெற்கு அராலி மக்கள் கடந்த காலத்தில் நான் செய்த சேவைகளை மனதில் நிலைநிறுத்தியுள்ளேன்.

ஆசிரியர்கள், அலுவலர்கள் பொதுமக்களது ஏகோபித்த பிரச்சினைகள் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் ஊடாகவும், நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஊடாகவும் உதவிகளை பெற்று அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வந்தேன்.

மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்த அடிப்படையில் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து அடுத்த 2018 முதல் நான்கு வருடத்துக்கான கருவில் இருந்து கல்லறை வரை என்ற மகுட வாக்கியத்தில் சேவை செய்ய மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கி உதவுமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ற.ரி4,50)

# மக்களின் உரிமைக்காக போட்டியிடுகின்றோம்

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.29

எமது மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்துவைத்து அதனூடாக அவர்களின் வாழ்க்கையை முன்கொண்டு செல்வதற்கு நாம் எமது அரசியல் பயணத்தில் தொடர்ந்தும் பயணிக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கிளிநொச்சி ஜெயபுரம் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நாங்கள் தேர்தலில் போட்டியிடுவது நாங்கள் ஆளவேண்டும் என்ற ஆசையில் அல்ல, எமது மக்கள் உரிமையோடு வாழவேண்டும் என்பதற்காகவே. மக்களின் எதிர்கால வாழ்வுக்காக கடந்த காலங்களில் நாம் அயராது உழைத்து வந்திருக்கின்றோம். எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி பலரும் தமது அரசியல் பிழைப்புக்களை முன்னெடுத்துவந்துள்ளார்கள்.

வீதிகளை புனரமைப்புச் செய்வது மட்டுமன்றி இங்கு மக்களால் கூறப்பட்டுள்ள அத்தனை சேவைகளையும் நாம் முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகாண்பதற்கு மக்களாகிய ஒவ்வொருவரும் தமது கடமைப்பொறுப்புக்களை உணர்ந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்வதனூடாகவே சாத்தியமாகும் - என்றார். (ற.ரி4)



# கட்சி அலுவலகம் திறப்பு

முல்லைத்தீவு.ஜன.29

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பல்வேறு வட்டாரங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அலுவலகங்கம் திறக்கும்நிகழ்வும் மக்கள் சந்திப்பும் அண்மையில் நடைபெற்றன. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் காதர் இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதன் மூலம் எமது பிரதேசத்தை 'சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து முன்னேற்றமடையச்செய்ய முடியும். வன்னி மாவட்டம் அபிவிருத்தியில் பின்னடைவில் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் அரசியல் அதிகாரமின்மையே என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

இந்தத்தேர்தலில் நாம் காணும் வெற்றியிலே தான் இந்தப் பகுதிகளின் அபிவிருத்தி தங்கியிருப்பதால் எமது வாக்குகளை வீணாக்காமல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடும் எமது வேட்பாளர்களுக்கு அளிக்க வேண்டும் - என்றார். (ற.ரி4)

# தேர்தல் பரப்புரைக் கூட்டம்

ஹற்றன்.ஜன.29

ஐக்கிய தேசியக்கட்சியின் உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஹற்றன் டன்பார் மைதானத்தில் நடைபெற்றது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவ்ரும் மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்டஉட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் ஆரம்பமானது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில்விக்கிரமசிங்க கலந்து கொண்டதுடன் அமைச்சர் பழனி திகாம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் திலகராஜ், வடிவேல் சுரேஸ், வேலுகுமார் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற.ரி4)

# கூட்டமைப்பை உடைக்க யாராலுமே முடியாது

## வட மாகாண சபை உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு

வவுனியா,ஜன.29

பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பை உடைக்க வேண்டும் என்று யார் நினைத்தாலும் அது முடியாதென முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செந்தில் நாதன் மயூரன் தெரிவித்தார்.

வவுனியா சாஸ்திரிகூளாங்குளத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பு வேட்பாளர் மருத்துவர் பத்மநாதன் சத்திய நாதன் தலைமையில் அண்மையில் நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இன்று பல கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைபுக்குள்ளேயே இருக்கின்றோம். ஆனால் எங்களுக்குள்ளேயே பல கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் தமிழ் மக்களினுடைய எதிர் பார்ப்புக்காக, உரிமைக்காக, எதிர்காலத்துக்காக, எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்காக நாங்கள் ஒற்றுமையாக பயணிக்கின்றோம். நாங்கள் உங்களுடைய கைகளிலே இருக்கின்ற வாக்குப் பலத்தை நீங்கள் சரியாக பயன்படுத்துகின்ற பொழுது நாங்கள் என்னும் தமிழ்தேசிய கூட்டமைப்பை தமிழ் மக்களினுடைய விடிவுக்காக ஒரு ஜனநாயக வழியிலே போராடுகின்ற தமிழ் மக்களினுடைய பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்றுக்கொள்கின்றோம் என்று சிங்கள வல்லாதிக்கத்துக்கு பறைசாற்றுகின்ற வகையிலே உங்களுடைய வாக்குப்பலத்தை சரியான முறையிலே பயன்படுத்த வேண்டும். இங்கே உறங்கிக் கொண்டிருகின்ற வீர மறவர்களுடைய கனவுகள் நனவாக வேண்டும் என்றால் நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நீங்கள் உங்கள் வாக்குகளை இட வேண்டும்.என்றார். (ற.ரி4)



# வடக்கு, கிழக்கு இணைப்பானது முஸ்லிம்களுக்கு பாதிப்பானதே

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.29

நாங்கள் செலவு செய்து அரசியலுக்கு கொண்டு வந்து அரசியல் அடையாளத்தைப் பெற்றுக்கொடுத்த பின்னர் எமக்குத் துரோகம் செய்து விட்டுச் சென்றவர்களுக்கு பாடம் புகட்டுவதற்கு சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும். என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி பதுறியா பள்ளி சதுக்கத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தேர்தல் நெருங்கும் போது எமக்கு எதிராக எங்களைத் தோற்கடிப்பதற்கு பல சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் போட்டியிட்டு கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரே ஒருவர் அலி சாஹிர் மௌலானா மாத்திரமே. அவருக்கும் அவரது கட்சியின் பிரதித் தலைவர் முன்னாள் முதல்வர் நஸீர் அஹமட்டுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டிய கட்சித் தலைவர் ஹக்கீம் பிரச்சினைக்கு உரம் சேர்த்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்பு கோருகின்றனர். அது அவர்களுக்கு சாதகமாக இருந்தாலும் முஸ்லிம்களுக்கு அது பாதிப்பாகவே அமையும். இந்த விடயம் பற்றி தெளிவாக பேச வேண்டிய ஹக்கீம் மௌனமாகவே இருக்கின்றார். இது எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கு பாதிப்பான சூழலை ஏற்படுத்தும் என்றார். (ற.ரி4.46)

# தமிழரசு கட்சியின் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்.ஜன.29

வரணி பிரதேச தமிழரசுக்கட்சியின் கட்சி அலுவலகம் திறப்பு விழாவும் மக்கள் சந்திப்பும் அண்மையில் வரணி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கட்டடத்தில் இடம்பெற்றது.

தமிழரசுக்கட்சியின் செயலாளர் நாயகம் மாவைசேனாதிராசா அலுவலகத்தைத் திறந்தார். இதில் ரெலோமுக்கியஸ்தர் ஸ்ரீகாந்தா வட மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் இவரும் கலந்து கொண்டனர். (ற.ரி4.122)

# நிலையானதொரு தீர்வே போராளிகளின் நோக்கம்

## நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவிப்பு

அம்பாறை.ஜன.29

இணைந்த வடகிழக்கில் தாங்களே தங்களை ஆளுகின்ற சுயாட்சியுடன் கூடிய சகல அதிகாரங்களையும் கொண்ட ஒரு நிலையான தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஈழவிடுதலை போராட்டத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட போராளிகளின் நோக்கம்.

இவ்வாறு தமிழ்தேசியக்கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அம்பாறை பெரிய நீலாவணையில் த.தே.கூட்டமைப்பின் கட்சி அலுவலகம் திறக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தமிழ்த்தேசிய கூட்டமைப்பை உடைப்பதற்காக பெரும்பான்மை கட்சிகளும், புதிதிகா முளைத்திருக்கும் சுயேச்சைக்குழுக்களும், சர்வதேசத்தில் இருந்து செயற்படும் சில அமைப்புக்களும் மிகவும் முனைப்புடன் இருந்து செயற்படுவதை

அண்மைக்காலங்களில் அவதானிக்க முடிகின்றது இதனை கருத்திற் கொண்டு த.தே.கூட்டமைப்பையும், அதன் தலைவர் இரா.சம்பந்தனையும் பலப்படுத்த வேண்டியது எமது கடமையாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை வாழ் தமிழ் மக்களை பொறுத்தவரை கடந்த காலங்களில் பல வலிகளை சந்தித்தவர்கள் இதற்கான தீர்வை வழங்க வேண்டியவர்களாக நீங்கள்தான் இருக்கின்றீர்கள் நிதானமாக சிந்தித்து த.தே.கூட்டமைப்புக்கு உங்களது வாக்குப்பலத்தை அளியுங்கள் - என்றார். (ற.ரி4)

# கட்சி அலுவலகம் திறப்பு

சாவகச்சேரி.ஜன.28

சாவகச்சேரி நகரசபையின் கோயிற்குடியிருப்பு தன்ரைப் பகுதி வட்டாரத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. கட்சி வேட்பாளர் குமாரசாமி திருமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் யாழ்மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் கட்சி அலுவலகத்தைத் திறந்தார். இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற.ரி4.9)



# தமிழர்களின் ஒற்றுமையே பேரம் பேசுவதற்கான பலம்

## வேட்பாளர் பாஸ்கரா தெரிவிப்பு

கொழும்பு.ஜன.28

தேர்தலில் கொழும்பிலும் மலையகத்திலுமுள்ள எம்மவர்கள் ஒருமித்த முற்போக்கு கூட்டணியின் ஏணி சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் தேவையென உணர்ந்து செயற்பட வேண்டும். இவ்வாறு - வேட்பாளர் சின்னத்தம்பி பாஸ்கரா தெரிவித்தார். கொழும்பு மாநகர சபையில் பாமன் கடை வட்டாரத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஒருமித்த முற்போக்கு கூட்டணி தலைவர் மனோகணேசன் தலைமையில் அமைக்கப்பட்டு கொழும்பிலும் மலையகத்திலும் போட்டியிட்டோம். இதற்கு காரணம் தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டுமென்பதற்கேயாகும்.

மக்கள் கூட்டணிக்கு தந்த அங்கீகாரத்தால் வெளிநாட்டு அமைச்சர்களும் சரி இராஜதந்திரிகளும் சரி இலங்கை வரும் போது கூட்டணியை அழைத்து பேசுகின்றனர். இவ்வேளையில் நாட்டிலுள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரச்சனை குறித்து எடுத்துக்கூறினோம். இதன் மூலம் அரசாங்கத்துக்கு அழுத்தமும் ஏற்பட்டன. கொழும்பு நகர் மக்கள் தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக ஒருமித்த முற்போக்கு கூட்டணியின் ஏணிச் சின்னத்துக்கு வாக்களித்து எமக்கு பலம் சேர்க்க வேண்டும். இது காலத்தின் தேவை. என்றார். (ற.ரி4)

# கூட்டமைப்பின் வெற்றியாலே உரிமைகளை பெற முடியும்

## தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஞான குணாளன் தெரிவிப்பு

திருகோணமலை.ஜன.29


நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் நாம் எமது உரிமைகளை இழந்து தவிக்க வேண்டி ஏற்படும். இந்தத் தேர்தல் மத்திய அரசாங்கத்தின் ஆட்சியை மாற்றும் தேர்தல் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் எண்ணங்கள் எவ்வாறு உள்ளது என்பதை இத்தேர்தல் முடிவு ஒரு கணம் உலகுக்குச் சொல்லும்.இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர் வைத்திய கலாநிதி ஞான குணாளன் தெரிவித்தார்.

திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகம்அண்மையில் திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தமிழர்கள் மாற்றுக் கட்சிகளுக்கு வாக்களித்தால் திருகோணமலைத் தமிழர்களின் இருப்பு எதிர்காலத்தில் கேள்விக் குறியாகிவிடும் என்பதை ஒரு கணம் மனதில் கொள்வது அவசியமாகும்.

நமது வெற்றியின் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திட்டங்களை தயாரித்து அவற்றுக்கு பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்படுவதுடன் வெளிப்படைத்தன்மையும் பேணப்படும். நமது கன்னியா நகருக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், அபிவிருத்தி திட்டங்களையும் உறுதிப்படுத்துவோம் என்றார். (ற.ரி4)



# பத்திரிசியார் கல்லூரி அதிபராக அருட்திரு திருமகன் அடிகளார்

யாழ்ப்பாணம். ஜன.29

புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக அருட்திரு திருமகன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை காலை ஆயர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்து பணி பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.

இதுதொடர்பாக யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் மறைமாவட்ட குருக்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றினார்கள்.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தலைமையில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு, அதிபருக்கான பணிப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ய-37)

# தமிழர்கள் தேவையானவற்றைப்பெற கூட்டமைப்புடன் இணைந்து போட்டி

## புலிகளின் முன்னாள் போராளி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.29

தமிழ் மக்களுக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் அன்று நாம் ஆயுதம் ஏந்திப் போராடினோம். ஆனால் 24 நாடுகள் ஒரே நேரத்தில் தாக்கியதால் நாம் தோல்வியடைந்தோம். ஆனால் பொதுமக்களுக்குத் தேவையானவற்றைப் பெற வேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுகிறோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் போராளியான செழியன்.

தமிழ் அரசுக் கட்சி சார்பாக உடுவில் பிரதேசத்தில் போட்டியிடும் தி.அன்ரனின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரை உடுவிலில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தமிழ் தேசியத்துக்காகவும் மக்களுக்காகவும் இருக்கும். அதனால்தான் அன்று தலைவரின் காலத்தில் அது தோற்றம் பெற்று இன்றுவரைக்கும் உள்ளது. நாம் போராடவேண்டும் என்பதற்காக அன்று தலைவரின் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்றது. அது இன்றுவரை மக்களின் குரலாக இருக்கிறது. தமிழ் மக்களின் தேவைகள் பற்றித் தெரியாதவர்கள் இன்று தமிழ்த் தேசியம் பற்றியும் கூட்டமைப்புப் பற்றியும் பேசிக் கொண்டு திரிகின்றார்கள். அவர்களுக்கு ஒன்று தெரிய வேண்டும். மக்கள் எல்லோரையும் நன்கு அறிந்து விட்டார்கள். அவர்களை யாரும் ஏமாற்ற முடியாது. எங்களுக்கு என்ன வேண்டுமோ அதை எப்படி பெற வேண்டுமோ அதற்கு யார் தேவை என்று அவர்கள் அறிவார்கள். கட்சி பிரிந்துவிட்டது. அவர்கள் கொள்கையுடன் செயற்படவில்லை என்று கூறுபவர்கள் அநேகர் உள்ளார்கள். அவர்களுக்கு இந்தத்தேர்தல் முடிவு பதில் சொல்லும். ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் இருந்தால் அவை ஒன்றாக; ஒரே மாதிரி இருப்பதில்லை. அதேபோலத்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இருப்பதில்லை. அவர்களுக்கு உரிய பதிலைத் தங்களது வாக்கின் மூலம் மக்கள் காட்டுவார்கள். ஒருவர் கூறுவதை வைத்து உங்களது சக்தியை இழந்து விடாதீர்கள். அவர்களைக் கேள்வி கேட்கும் காலம் வரும். அப்போது நீங்கள் கேளுங்கள் என்ன செய்தீர்கள் என்று. உங்களுக்கு தேவை தேர்தலில் போட்டியிடுபவர்கள் எங்களுக்கு நல்லது செய்வாரா இல்லையா என்பதே. அதைத் தெரிந்து வாக்களியுங்கள். மக்களுக்கான அபிவிருத்தி என்னவோ அதைத்தான் இந்தத் தேர்தலின் மூலம் பெறமுடியும். மக்களுக்காகத் தோற்றம் பெற்ற கூட்டமைப்பை நாம் சரியான கொள்கைப் பிடிப்போடு வைத்திருக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. கூட்டமைப்பு எங்களுக்கானது. அவர்களின் நகர்வுகள் எங்களுக்கு வேண்டும். ஆயுதப் போராட்டம் தோற்றாலும் இந்த ஜனநாயகப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் - என்றார். (4-ரி)

# மகா கும்பாபிசேகம்

சாவகச்சேரி.ஜன.29

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட திரிதள ராஜகோபுர மகா கும்பாபிசேகம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கும்பாபிசேகக் கிரியைகள் இன்று காலை ஆரம்பமாகுமெனவும் கிரியைகள் சிவஸ்ரீ கு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறுமெனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# ஆன்மீக சாதனைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.27

பருத்தித்துறை சத்யசாய் சேவா நிலையத்தில் விநாயகர் ஷீரடி சாய்பாபா திருவுருவச்சிலை பிரதிஸ்டையும் ஆன்மீக சாதனைப் பெருவிழாவும் நடைபெறவுள்ளது. நிகழ்வு பருத்தித்துறை சத்யசாய் சேவா நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

# வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெறும் போட்டியில் முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சின் செயல்திட்டப் பணிப்பாளர் க.பத்மானந்தன், சிறப்பு விருந்தினர்களாக மா.பாலச்சந்திரன், ச.அகிலன் மற்றும் மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தலைவர் இ.ஜனக்குமார், மா.சுரேந்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (எ-4)

****************************

யாழ்ப்பாணம்.ஜன.29

நவாலி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் கி.கிருஷ்ணானந்தா தலைமையில் இடம்பெறும் போட்டியில் முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா கலந்து கொள்ளவுள்ளார்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச்சமூகம் தெரி வித்துள்ளது. (50)

****************************

தென்மராட்சி ஜன. 29

மிருசுவில் அ.த.க.பாட சாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் எதிர்வரும் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

****************************

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணிக்கு நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் எல்.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ-4)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம் விக்டோறியா கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.சிவகுமார் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு நிகழவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலாளர் பிறேமினி பொன்னம்பலம் மற்றும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி நிர்வாக அமைச்சின் நிர்வாக அதிகாரி எல்.விஷ்வநா தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது. (எ-4)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம்.ஜன.29

அருள்மிகு வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகா சிவ ராத்திரி மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி தேர்த்திரு விழாவும் ,இரவு மகாசிவராத்திரி சிறப்பு பூஜைகளும் ஆன்மீக சமய, கலாசார பக்தி இசை நிகழ்ச்சிகளும் 14ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆதின கர்த்தா இராஜ ஸ்ரீ நகுலேஸ்வரச் சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார். (எ-36)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

யாழ்ப்பாணம்.ஜன.29

நவாலி கிழக்கைச் சேர்ந்த பேரின்பநாதன் பத்மாகரன் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி வி. ராமக்கமலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்தார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார் என்பது குறிப்பிடதக்கது. (எ-ரி)

# காரைநகரில் பரப்புரை சூடுபிடிப்பு

காரைநகர், ஜன.29

காரைநகர் பிரதேசத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பரப்புரை பணி சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. பிரதேச சபையின் பத்து ஆசனங்களுக்காக 13 கட்சிகளைச் சேர்ந்த 104 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்கள் தினமும் வீடுவீடாகச் சென்று பரப்புரை செய்து வருகின்றனர். சாலைகள் எங்கும் பல வர்ணப் பிரசுரங்களை இரவிரவாக ஒட்டி வருகின்றனர். ஆனாலும் இந்தப் பிரசு ரங்கள் காலையில் அகற்றப்பட்டு விடுகின்றன. (ய-250)

# இல்ல மெய்வன்மைப் போட்டி



யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்ப்பாணம் கச்சாய் அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை முதல்வர்.கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் நா.சிறிகாந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-ரி)

# தெய்வீக பேருரைகள்

யாழ்ப்பாணம்.ஜன.29
கைதடி அருள்மிகு ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் 'தெய்வீக பேருரைகள்' நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். தலைமையுரையை நயினாதீவு தாகசாந்தி நிலைய தர்மகத்தா சோ.சபாநாதன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து ஆலய முதன்மைக் குரு பிரம்மஸ்ரீ யோ.குருசாமிக்குருக்கள், பிரதம குரு கயிற்றசிட்டி முருகன் தேவஸ்தான பிரம்மஸ்ரீ முத்து கணேசக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

அனைத்து அடியார்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

# நாடக ஆற்றுகை

மீனோடைக்கட்டு.ஜன.29
பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சி எனும் நாடகம் மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் இன்றும் நாளையும் ஆற்றுகை செய்யப்படவுள்ளது என நிறுவகத்தின் நாடக விரிவுரையாளர் ஏ.விமலராஜ் தெரிவித்தார்.

கல்லடி அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் இடம்பெறவுள்ள இந்த நாடகம் நான்கு காட்சிகளாக இரு தினங்களும் காட்சிப்படுத்தப்படும்.

இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கும், மாலை 6 மணிக்கு பொதுமக்களுக்கும் காட்சிப்படுத்தப்படும். நாளை காலை 10 மணிக்கும், 02 மணிக்கும் பாடசாலை மாணவர்களுக்காகவே காட்சிகள் நடைபெறும். என்று அவர் மேலும் தெரிவித்தார். (ய-4)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்.ஜன.29
யாழ்ப்பாணம் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி அருமைத்துரை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் கு.திலீபன் தலைமையில் இடம்பெறும் போட்டியில் வித்தியாலய முதன்மை விருந்தினராக பழைய மாணவன் களுபோவல போதனா வைத்தியசாலை யோ.கலாநிதி யோ.தர்மேந்திரா பிரதம விரந்தினராக கலந்து சிறப்பிக்கவள்ளார்.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (எ-4)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி.ஜன. 29
யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதியின் ஏற்பாட்டில் மலேசியா கோலாலம்பூர் மகா கருணை பௌத்த சங்கத்தினரால் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்புப் படையின் தலைமைப்பீட பிரிகேடியர் அஜித் அல்வத்த தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மலேசியா மகா கருணை பௌத்த சங்கத்தின் மகாநாயக்கர்களும் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் 523ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் திகிரி திஸாநாயக்கா, 522ஆவது படையணியின் கட்டளைத் தளபதி கேணல் பத்ம பின்னவல, 52ஆவது படையணியின் கேணல் தினேஸ் உடுகம, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயகுமாரன் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-9)



# புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் வாகன பாதுகாப்பு நிலையம் அமைக்குக

## பிரதேச மக்கள் கோருகின்றனர்

வவுனியா. ஜன. 29
வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு அருகில் வாகன பாதுகாப்பு நிலையத்தை அமைப்பதைவிடுத்து புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் வாகனப்பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அனைத்து தனியார் மற்றும் இ.போ.சபை பேருந்து சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டு சீராக இரவு பகலாக இடம்பெற்றுவருகிறது. வவுனியா நகரத்திலிருந்து தூர இடங்களிலிருந்து துவிச்சக்கரவண்டிகளில் வருகை தருவோர் மோட்டார் சைக்கிள்களில் வருகைதருவோர் வெளிமாவட்டங்கள் மற்றும் செட்டிக்குளம் உட்பட உள்ளூர் பகுதிகளில் தனியார் மற்றும் அரச திணைக்களங்கள், பாடசாலைகளுக்கு வேலைக்குச் செல்வோர் கொழுத்தும் வெயிலில் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டு சென்று வருகின்றனர். இதனால் வாகனங்கள் பழுதடைகிறன. பாதுகாப்பும் இல்லை. வீதிகளில் வாகனங்கள் நிறுத்துவதற்குப் பொலிஸார் தடைவிதித்துள்ளனர். இந்த நிலையில் பயணிகள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர். வவுனியா நகரசபையினர் பழைய பேருந்து நிலையத்துக்கு அருகில் வாகன பாதுகாப்பு நிலையத்தை அமைத்து வருகின்றனர். இதற்கு முன்னோடியாக அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அங்காடி வியாபாரிகள் அகற்றப்பட்டுள்ளனர். கொட்டகைகளும் போடப்பட்டு வருகிறன. எனவே இவ்வாறு அமைக்கப்படும் புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் தமது வாகனங்களின் பாதுகாப்புக் கருதி வாகனப் பாதுகாப்பு நிலையம் ஒன்றை விரைவாக அமைத்து தருமாறு பிரதேச மக்கள் உட்படப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4402)

# சுவாமி விவேகானந்தர் விழா



யாழ்ப்பாணம்.ஜன.29
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் விவேகானந்தர் விழா கல்லூரியின் தம்பையா மண்டபத்தில் கல்லூரியின் இந்து மன்றத் தலைவர் மதுராங்கி நந்தகோபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் கலந்து கொண்டார். விவேகானந்தரை மையப்படுத்தி மாணவிகள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு என்பன இடம்பெற்றன. (எ-4)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் மதியம் 1.30 மணிக்கு தெரிவித்துள்ளார். கல்லூரஜ அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் போட்டியில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ தலைவரும் பழைய மாணவனுமான வி.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ-4)



# யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வீதியோட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜன.29
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வீதியோட்ட நிகழ்வில் சுந்தரர் இல்லத்தைச் சேர்ந்த பி.அபினேஸ் இரண்டாவது தடவையாகவும் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஈ.எஸ்.பி.நாகரட்னத்தின் அனுசரணையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த வீதியோட்ட நிகழ்வானது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு இடம்பெற்றது. கல்லூரியின் முதல்வர் எம்.இந்திரபாலா தலைமையில் ஆரம்பித்து போட்டி சுதுமலை அம்மன் கோவிலடியூடாக தாவடிச்சந்தியை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாக குளப்பிட்டி சந்தியை அடைந்து ஆனைக்கோட்டை சந்தியூடாக மூத்தவிநாயகர் ஆலயத்தை அடைந்து கல்லூரி முன்றிலில் நிறைவடைந்தது.

போட்டியில் இரண்டாம் இடத்தை வாகீசர் இல்லத்தைச் சேர்ந்த தர்சிகனும் மூன்றாம் இடத்தை வாகீசர் இல்லத்தைச் சேர்ந்த யதுர்சனும் பெற்றுக்கொண்டனர். (எ-4)

# மலர் வெளியீடும் ஆண்டு நிறைவு நிகழ்வும்

முல்லைத்தீவு.ஜன.20
முல்லைத்தீவு தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 75ஆம்ஆண்டு நிறைவும் பவளமலர் வெளியீட்டு நிகழ்வும் பாடசாலை முதல்வர் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் என பாடசாலை அபி விருத்தி சங்க செயலாளர் வே.தயாபரன் தெரிவித்தார். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு.மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதய குமார் கலந்து கொள்வார். அன்றை.யதினம் பாடசாலை ஸ்தாபகர் அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் உடையாரின் ஞாபகார்த்தமாக மைதானத்தில் அமைக்கப்பட்ட அரங்கத் திறப்பு நிகழ்வும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-500)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜன.29
வரணி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் செயல்பட்டுமகிழ்வோம் நிகழ்வு பாடசாலை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை முதல்வர் ஞ.வசந்தரூபன் தலைமையில் இடம்பெறும் போட்டியில் சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா முதன்மை விருந்தினராக கலந்து கவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச்சமுகம் தெரிவித்துள்ளது. (எ-122)

# கெற்பேலி பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி. ஜன.29
மிருசுவில் கெற்பேலி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.அரியநாயமும் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# தோட்டத் தலைவர்களுக்குச் சீன நாட்டுப் பெண்கள் ஊடாக விருந்து

## நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 29

மலையகத் தோட்ட தலைவர்களுக்கு சீனா நாட்டு பெண்கள் ஊடாக விருந்தளிக்கப்பட்டு பணம் திணிக்கப்படுகின்றது. உங்களிடம் (மலையக மக்களிடம்) கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் உங்களுக்குத் விருந்து வைக்கின்றார்கள்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் காங்கிரஸ் சார்பில் "சேவல்" சின்னத்திலும், சிறிலங்கா சுதந்திர கட்சியின் "வெற்றிலை" சின்னத்திலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடும் முகமாக நேற்று இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நமது பெண்களை மதுபானசாலைகளில் வேலைக்கு அமர்த்தி விருந்தளிக்கப்படுகின்றது. இது அவர்களின் கட்சிக்கு பொருந்தும் ஆனால் இ.தொ.காவின் கொள்கை அடிப்படையில் எமது தலைவர்கள், தலைவிகள் சோரம் போக மாட்டார்கள்.

மலையக மக்கள் தேயிலை காணிகளுக்கு சொந்தகாரர்களாக ஆக வேண்டும் என்றால் அரச தலைவரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். இன்று உங்கள் மத்தியில் பலர் வந்து வாக்குகளை கேட்கின்றார்கள். நான் கேட்பது ஒரே கேள்வி தான் உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்ததா? எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அரச தலைவருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கைகோர்த்துள்ளது. கொட்டகலையில் அரச தலைவர் தோட்ட அதிகாரிகளைச் சந்தித்தார். பல விடயங்கள் அங்கு வினவப்பட்டன. இதன்போது நான் முன்வைத்த கோரிக்கைகளுக்கு தேர்தலின் பின் கொழும்பில் வைத்து ஆராய்ந்து பேசுவோம் என்று அரச தலைவர் எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். பல தோட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட பரப்புரைகளின்போது நான் கூறிய நாட்டு தோட்டத்தில் தேயிலை பராமரிப்பு போல் எமது மக்களுக்கும் பிரித்துக் கொடுக்கும் விடயம் தேர்தலுக்கு பின் கலந்தாலோசித்து தீர்வு எட்டப்படும். (4)

## கொள்ளையை....

நடத்தப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குரிய பரப்புரை நடவடிக்கைகள் எதிர்வரும் 7ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வரும். அதன்பின்னர் ஊடகங்களில் எதையும் தெரிவிக்கமுடியாது. அதனால்தான் 8ஆம் திகதியை தலைமை அமைச்சர் தெரிவுசெய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் என்ன விவாதம் நடக்கின்றது என்பதை மக்களால் தெரிந்துகொள்ள முடியாமல் போகும். கொள்ளைகளை மேலும் மூடிமறைப்பதற் கான நடவடிக்கையாகவே இது இருக்கின்றது. முடியுமானால் எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோருகின்றோம் - என்றார். (ந-5)

## வடக்கு...

உள்ளூராட்சித் தேர்தலுக்கான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வவுனியாவில் நேற்று வெளியிடப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகிய கட்சித் தலைவர்களின் கையெழுத்துடன் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தனித்துவமிக்க தேசிய இனம், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களது பூர்வீக வாழ்விடங்கள், தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர், கூட்டாட்சி (சமஷ்டி) கட்டமைப்புக்குள்ளே ஒன்றுபட்ட வடக்குக் கிழக்கு அலகைக் கொண்ட அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டும். தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் பகிரப்படும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளின் மூலம் நன்மைகளைப் பெற உரித்துடையவர்.

பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப் பகிர்வானது நிலம், சட்டம் ஒழுங்கு, சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழ் மக்களின் பாதுகாப்பு, சமூக பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, உயர்கல்வி, தொழிற்பயிற்சி, விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், கால்நடை அபிவிருத்தி, மொழி, பண்பாடு முதலியவற்றின் மீதும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் திரட்டிக் கொள்ளும் வளங்கள் மற்றும் நிதி அதிகாரம் மீதான ஏனைய விடயங்கள் தொடர்பானதாகவும் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

### ஒஸ்லோ உடன்பாடு

தேர்தல் அறிக்கையில் ஒஸ்லோ உடன்பாடு தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தல் அறிக்கையிலும், 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலும் கூறப்பெற்ற இந்தக் கொள்கைத் திட்டமானது 2002ஆம் ஆண்டு ஒஸ்லோ(நோர்வே) கொள்கைப் பிரகடனத்துக்கு ஒப்பானது ஆகும்.

'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியிலான வாழ்விடப்பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கைப் பிரகாரம் கூட்டாட்சி (சமஷ்டிக்) கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல்' என்பதாகும்.

### இடைக்கால அறிக்கை

புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில், இடைக்கால அறிக்கையானது, இணக்கம் காணப்பட்ட விடயங்கள், இணக்கம் காணப்படாத விடயங்கள் மற்றும் இணக்கத்துக்காகப் பேச வேண்டிய விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது. இது, இறுதித் தீர்வுத்திட்டமல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அப்படியிருக்கையில் இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வேண்டுமென்ற கூக்குரல் அறிவுடைமையானது அல்ல.

இடைக்கால அறிக்கை தொடர்பில் எழுப்பப்படும் வினாக்கள், விமர்சனங்கள் உண்மைக்கு மாறாகப் புனையப்பட்டவை. இவை ஒருபுறமும், 'இடைக்கால அறிக்கை நாட்டைப் பிளவுபடுத்தப் போகின்றது' என்ற கூச்சலோடு தென்னிலங்கையில் தேர்தல்காலப் பரப்புரைகள் மறுபுறமும் இடம்பெறுகின்றன.

இலங்கையில் நிலவி வரும் இனப்பிரச்சினைக்கோ, பிற பிரச்சனைகளுக்கோ தீர்வு காணக்கூடிய திட்டம் எதுவும் இல்லாத சிலர், 'தலைமையை மாற்றவேண்டும்' என்ற கூச்சலை முன்வைத்து வருகின்றனர். இவர்கள் தமிழர் விடுதலைக்காக அர்த்தமுள்ள செயற்பாடுகளோ திட்டங்களோ பங்களிப்போ அற்றவர்கள் என்பதை மக்கள் இணங்கண்டு கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் அரசுக் கட்சி 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மற்றும் கொள்கை அறிக்கைகளிலிருந்து ஒரு போதும் விலகியோ, விட்டுக் கொடுத்தோ செயற்படாது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தக் கொள்கைத் திட்ட இலக்கை அடைவதற்கு அனைத்து முயற்சிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவிக்கின்றோம், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### மக்கள் ஆணை

தேர்தல் அறிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பும் கடமையும் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், ஒருமித்த நாட்டில், கூட்டாட்சிக் கட்டமைப்பில் தன்னாட்சி அலகுகள் உருவாக்கப்பட்டு, அதிகாரங்கள் போதிய அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டு, அவை எவ்வகையிலும் மீளப் பெறமுடியாத பாதுகாப்போடு அரசமைப்பில் இடம்பெறவைப்பது முதன்மையான கடமையாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பில் தமிழ் மக்களுக்கு உரித்தான இறைமை, சுயநிர்ணய உரிமை, கூட்டாட்சிக் (சமஷ்டி) கட்டமைப்பில் கொழும்பு அரசால் திரும்பப் பெறமுடியாத, பாதுகாப்பான அடிப்படையில் பகிரப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட முழுமையான அதிகாரங்கள் காணி, சட்டம் ஒழுங்கு, பொருளாதார, சமூக, கலாசார விடயங்கள், நிதி சம்பந்தமான அதிகாரங்கள், வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்கள் இணைக்கப்படுதல், கூட்டாட்சிக் கட்டமைப்பில்; வடக்கு கிழக்கு மாகாணம் அல்லது மாநிலங்களுக்கு முழுமையான பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் கொண்ட தன்னாட்சி என்பன முக்கியமானவை ஆகும்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் போர் முடிவடைந்த பின்னர் 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தங்களது ஆணையை வழங்கி வந்துள்ளனர். ஒருமித்த நாட்டுக்குள் தங்களது இறையாண்மையின் வெளிப்பாடாகவும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் கூட்டாட்சிக் கட்டமைப்பிலான அரசமைப்பை உருவாக்குவதே அந்த ஆணையாகும்.

### ஆதரவு தேவை

இந்த ஆணையை நிறைவேற்றும் பணியில் நாம் நீண்ட தூரம் கடந்து வந்திருக்கிறோம். முத்லில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் பின் உருவாக்கப்பட்ட கூட்டு அரசு புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளை ஆரம்பிப்பதற்கான அனைத்து அழுத்தங்களையும் உள்நாட்டிலும் பன்னாட்டு ரீதியாகவும் ஏற்படுத்தினோம்.

இப்பொழுது வெளியாகியிருக்கும் ஏழு உபகுழுக்களின் அறிக்கைகளும் வழிகாட்டுக் குழுவின் இடைக்கால அறிக்கையும் ஆட்சி முறையில் ஏற்படுத்தப்பட இருக்கும் அடிப்படையான மாற்றங்களை எடுத்தியம்புகின்றன. இவை அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதியான முயற்சியால் அடையப்பட்டவை என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. இம்முயற்சிகள் தொடரப்பட வேண்டும். அதற்குத் தொடர்ந்தும் மக்களது ஆணையும் ஆதரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இருக்கின்றன என்பது இந்தத் தேர்தலிலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றுள்ளது. (ந-5)

## பெப்.8 ஆம்...

களை வெளியிடுதல், ஒளிபரப்புதல் ஆகியவற்றுக்கு ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளன. 8 ஆம் திகதி விவாதம் நடைபெற்றால் தேர்தலை ஓரிரு தினங்களுக்கு ஒத்திவைக்க வேண்டிய சூழ்நிலையேற்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை தலைவர்களை இன்று சந்திப்பதற்குரிய அழைப்பை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ளார். அரச தலைவர் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

8 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி அறிக்கைகள் தொடர்பில் விவாதம் நடத்துவது சம்பந்தமாக இதன்போது முடிவொன்று எடுக்கப்படவுள்ளது என்றும், சுதந்திர தினம் முடிவடைந்த பின்னர் 8ஆம் திகதிக்கு முன்னரான திகதியொன்றில் அது நடைபெறும் என்றும் அறிய முடிகின்றது. அதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்காகவே இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் எட்டப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நாடாளுமன்றத்தை அவசரமாக கூட்டுவதற்குரிய ஆலோசனையை ரணிலுக்கு, மைத்திரி விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

## தோல்வியின்...

னோம். அன்று அவர் அதைக் கண்டுகொள்ளவில்லை. பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரச தலை வர் விடுத்த அறிவிப்பு காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியைச் சந்திக்க நேரிட்டது. மைத்திரிபால சிறிசேன நடுநிலையாக இருந்திருந்தால் இந்த நிலமை ஏற்பட்டிருக்காது.

அரசியல் ரீதியாக மைத்திரி இன்று தோல்வியடைந்துள்ளார் என்பதையே அவரது உரை எடுத்துக்காட்டுகின்றது. அரச தலைவர் மீது எமக்கு நம்பிக்கைவரும் வகையில் அவர் செயற்படவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை விரட்டியடித்துவிட்டே எமக்கான அழைப்பை அவர் விடுத்திருக்கவேண்டும். தற்போது பிறந்திருக்கும் ஞானம் காலம் கடந்ததொன்று - என்றார். (ந-5)

## தமிழருக்கு...

அவர்கள் தமிழர்களை விடுவித்ததாக, மேற்கொள்ளப்படுவது வெறும் பரப்புரை தான். அது விடுதலை அல்ல, தமிழ்ச் சமூகத்தின் அழிவு. இராணுவம் இனப்படுகொலைகளை செய்தது என்று கூறுவதே நியாயமானது. நிகழ்ந்த கொடுமைகள் நிச்சயமாக இனச் சுத்திகரிப்பை நோக்கி நடத்தப்பட்டவைதான். மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தமிழர்கள் இலங்கையில் இருப்பதை விரும்பவில்லை. நாட்டை விட்டு வெளியேற்ற முயன்றிருக்கின்றனர்.

தமிழர்களை வரலாற்றில் இருந்து அகற்றும் கொடுமை அல்லது பெயர்களை மாற்றுவது. அல்லது வடக்கில் இல்கை இராணுவம் சுற்றுலா விடுதிகளையும், சுற்றுலாவையும் நடத்த அனுமதிப்பது இன்னமும் தொடர்கிறது. வடக்கில் தமிழர்களை வென்று விட்டதான உணர்வு இன்னமும் உள்ளது. வடக்கில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் பெரும் நடவடிக்கைகள் இன்னமும் தொடர்கின்றன. ஆனால் கடந்த காலத்தில் இருந்த நிலைமைகளுடன் ஒப்பிடும் போது, இப்போது குறிப்பிடத்தக்களவு தளர்வுகள் ஏற்பட்டுள்ளன." என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## மகிந்தவுடன்...

தலைவரும், மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பழனி திகாம்பரம்.

நுவரெலியாவில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் ஐக்கிய தேசிய கட்சியின் பரப்புரைக் கூட்டம் ஹற்றன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே திகாம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்களின் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் வாக்குகளாலுமே இன்றைய அரச த்லைவர் மைத்திரிபால சிறிசேன ஆட்சிபீடம் ஏறினார். மைத்திரிக்கு எதிராக வாக்களித்தவர்கள் என்று தெரிந்தும் மைத்திரிபால சிறிசேன, அவர்களுடன் கைகோர்த்து தலவாக்கலையில் ஒன்று சேர்ந்துள்ளார். எம்மை மறந்து விட்டார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பரப்புரைக் கூட்டத்தில், 99 பேர் தன்னுடன் இருந்தால் புதிய அரசை உருவாக்குவேன் என்று சவால் விட்டிருக்கிறார். எம்மிடம் 108 அங்கத்தவர்கள் இருந்தும் தனி ஆட்சியை நாம் செய்யவில்லை. மக்களுக்காக ஒதுக்கிய ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவை ஏப்பமிட்டவர்கள் இன்று அரச தலைவருடன் கைகோர்த்துள்ளனர். இவர்கள் தொடர்பாக நிதி மோசடி குற்றப் பிரிவுக்கு அறிவித்துள்ளோம். ஆனால் இதற்கு பதிலளிக்கும் சிலர் நிதி மோசடிப் பிரிவுக்குச் செல்ல தாம் தயார் என்று வீர வசனம் பேசுகின்றனர். உப்பைத் தின்றவர்கள் தண்ணீர் குடிக்கத்தான் வேண்டும். அதேபோல் குற்றம் செய்தவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும் -என்றார். (4)

## கடலில்...

குறிப்பிட்ட ஒரு இளைஞன் கரையேறமுடியாது தத்தளித்து தண்ணீரில் மூழ்கியுள்ளார். அவரை ஏனைய இளைஞர்கள் மீட்டு மாவட்ட மருத்துவமனையில் முச்சக்கரவண்டியில் கொண்டு சென்று சேர்த்தனர். எனினும் அவர் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று பரிசோதனையில் கூறப்பட்டது.

சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-ரி3)

## தேர்தல்...

ஆணைக்குழுவின் தலைவர் சபாநாயகருடன் தொடர்பு கொண்டு இது தொடர்பில் உரையாடியுள்ளார். குறித்த தினத்தில் தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது அரசு நிதி மோசடி பற்றிய விவாதம்குறித்தான முடிவிலேயே தாங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். தாவது, குழப்ப நிலை ஏதாவது ஏற்பட்டால் தேர்தலை சில நாள்களுக்குத் தள்ளிப்போட வேண்டி வரலாம். எனவே தேர்தல் பிற்போடப்படும் எண்ணத்தை விடுத்துக் குறித்த திகதியில் தனை நடத்த வேண்டும் என்று ஆணையாளர் கூறியுள்ளார். (4)

# இனத்தைக் கூறுபோடாமல் ஒற்றுமையை நிரூபியுங்கள்

## கூட்டமைப்பு தேர்தல் அறிக்கையில் வலியுறுத்து

*யாழ்ப்பாணம், ஜன. 29*

*போரினால் பாதிக்கப்பட்ட மக்களினதும் பிரதேசத்தினதும் மீளக் கட்டியெழுப்பும் திட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமன்றி லட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்தும் அங்கங்களையிழந்தும் வாழ்வாதாரமன்றியும் அவலத்தில் வீழ்ந்து கிடக்கும் மக்களின் இதய தாக லட்சியத்தை நிறைவு செய்யவும், கிடைத்துள்ள ஜனநாயக சந்தர்ப்பங்களை தொடர்ந்தும் திடசங்கற்பத்துடன் எதிர்கொண்டு வெற்றி பெறுமாறு அன்போடும், அர்ப்பணிப்போடும் ஆத்ம பலத்தோடும் வேண்டுகின்றோம். இனத்தைக் கூறுபோடாமல், பிளவுபடுத்தாமல் அனைவரும் ஒன்றுபட்டுத் தமிழர் ஒற்றுமையை பலத்தை நிரூபிக்கும் வகையில் வீட்டுக்கு வாக்களிக்குமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

தேர்தல் அறிக்கையில் முக்கியமாக கூறப்பட்டுள்ளதாவது.

**தீர்வு காணுதல்**

தமிழினத் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணுதல். போரால் ஏற்பட்ட விளைவுகளுக்கும் பாதிப்புக்களுக்கும்; அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுதல், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், சிதைந்து போன மக்களது வாழ்க்கையையும் மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றை கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது.

இவற்றை அடைவதற்கு, காணி உரித்தை உறுதிப்படுத்தி, வீட்டுத் திட்டங்;களை உருவாக்குதல், மறுவாழ்வு பெற்ற போராளிகளது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை சமூக நீரோட்ட்த்தில் இணைத்தல், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தல், அதற்கான வேலைவாய்ப்பு, வாழ்வாதார வலுவூட்டல், கல்வி வழங்கல், பயிற்சி அளித்தல் அதற்கான தொழில் துறைகளையும் வேலைத் திட்டங்களையும் உருவாக்குதல் என்பனவாகும்.

அழிந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக கூட்டமைப்பு இதுவரை முன்னெடுத்த நடவடிக்கைகளும் தேர்தல் அறிக்கையில் விலாவாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அபிவிருத்தி**

அதில் தற்போதுள்ள நிலப்பரப்பிலேயே பலாலி வானூர்தி தளத்தை பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றுதல் முதன்மையாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அரசுடன் பேச்சு நடத்தி 50 ஆயிரம் வீடுகளைப் பெற்றமை, இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்கு அமைவாக 5 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் வடக்கு - கிழக்கில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியில் வடக்கு கிழக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளது. மக்களின் வாழ்வாதாரத்துக்காக 2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு ஏற்ப வடக்கு ஒருங்கிணைந்த திட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று பல நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக, வரவு -செலவுத் திட்டத்தில்; 10 லட்சம் பெறுமதியான 50 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு 750 மில்லியன் ஆரம்ப ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளுக்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. வடக்கிலுள்ள மாற்றுத் திறனாளிப் பெண்களுட்பட பாதிக்கப்பட்ட பெண் குடும்பங்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி, பெண்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கும் சமூக உட்கட்டமைப்புக்களுக்கும் 2 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வடமாகாணம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சிறிய கைத்தொழில்களை வலுவூட்டுவதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி மீன்பிடித்துறைமுக மேம்பாட்டுக்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கான சிறு வியாபாரத்துக்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மறுவாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 12 ஆயிரத்து 600 பேருக்கு நிரந்தர வாழ்வாதாரம், வேலை வாய்ப்புக்காக 525 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**காணி விடுவிப்பு**

காணி விடுவிப்புத் தொடர்பிலும் கூட்டமைப்பின் பங்கு பற்றி தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கூட்டமைப்பு சட்டத்தரணிகளால் வாதாடப்பட்டு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, விடுவிக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருந்த காங்கேசன்துறை, மயிலிட்டி மீன்பிடித் துறை முகம் விடுவிக்கப்பட் டுள்ளது. கிளிநொச்சிப் பிரதேசத்தில் பரவிப்பஞ்சான், இரணைதீவு மற்றும் மன்னாரில் முள்ளிக்குளம்விடுவிக்கப்படநடவடிக்கை எடுத்துள்ளோம். முல்லைத் தீவில் கேப்பாபிலவு மக்களின் கணிசமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன் னும் நிலங்கள் விடுவிக்கப் பட வேண்டி உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர் மூலம் சம்பூர், தென்னைமரவாடி உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களிலும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் வாழ்வாதாரத்துக்கான திட்டங்களை செயற்படுத்துவதற்கும் கூட்டமைப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் சம்பந்தமாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாகவும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் கைதிகளாக இருப்பவர்கள் சம்பந்தமாக உள்ள பிரச்சினைகளில் பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பன்னாட்டுச் சமூகத்துடன் இணைந்து அரசின் மீது தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றோம் என்று தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (5)

# பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் 28 உப நிறுவனங்களுக்கும் தடைவிதிப்பு

## நிதி முகாமைத்துவம் பாதிக்கப்படுமா?

கொழும்பு, ஜன. 29

மத்திய வங்கியின் பிரதான நேரடி முதலீட்டாளர்களாக இருந்த பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் 28 துணை நிறுவனங்களினதும் வங்கி மற்றும் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய்யவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பிணைமுறி மோசடிகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் மற்றும் அதன் நிர்வாக பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் சார்ந்த அனைத்து நிதிக் கொடுக்கல் வாங்கல்களும் மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப்பிரிவு முடக்கவுள்ளது.

இதற்கென பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்துடன் தொடர்புகளை வைத்திருந்த 28 துணை நிறுவனங்களினதும் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மத்திய வங்கியால் பரிசீலிக்கப்படவுள்ளன.

இதன்போது அந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான சம்பளம், சட்டமுறையான நிதிப் பரிமாற்றங்களும் ஆய்வுக்குட்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை உடனடியாகத் தடை செய்வதால் நிதிச்சலவை மற்றும் மத்திய வங்கியின் நிதி முகாமைத்துவம் பாதிக்கப்படுமா என்பது தொடர்பில் ஆராய்ந்து நாட்டுக்குப் பாதிப்பேற்படாத வகையில் உடனடியான தீர்மா னங்கள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# இயலாமையால் போரில் தோற்றுவிட்டு என்னைத் துரோகி என்று சொல்லலாமா?

## தேர்தல் பரப்புரையில் கருணா அம்மான்

கொழும்பு, ஜன. 29

இயலாமை காரணமாக போரில் தோற்றுவிட்டு என்னைத் துரோகி என்பதில் என்ன நியாயம் உள்ளது. இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) கேள்வி எழுப்பியுள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் என்னால் நிறுத்தப்பட்டதாலேயே இன்று இளைஞர்கள் மிகவும் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். போர் செய்ய முடியாது என்று போராட்டத்தில் இருந்து விலகவில்லை. இளைஞர்களின் நன்மை கருதியே நான் விலகியிருந்தேன். இதனையே கருணா துரோகி என்று கூறுகின்றனர். துரோகிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்குள்தான் உள்ளனர்.

நாங்கள் விடுதலைப் போராளிகளாகப் போராடினோம். சிறிது காலத்தின் பின்னர் வெளிநாடுகள் எங்களை பயங்கரவாத இயக்கமாக்கியது. இதே நேரத்தில் எங்களுக்குத் தெரியாமல் தலைவரும் பொட்டம்மானும் முடிவெடுத்து தமிழ் நாட்டில் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தனர். இதனால் இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்தனர். அதனைத் தொடர்ந்து 26 நாடுகள் பயங்கரவாத இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்திருந்தன.

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் உலகில் எந்தவொரு பயங்கரவாத இயக்கமும் இருக்க கூடாதென அமெரிக்கா உள்பட உலக நாடுகள் முடிவெடுத்தன. இந்தக் கால கட்டத்தில் தான் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் பேச்சு இடம்பெற்று வந்தது. இதில் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டமையாலேயே என்னுடன் தலைவர் முரண்பட்டுக் கொண்டார். இதன் பின்னர் நான் ஒதுங்கிக் கொண்டேன்.

இயலாமை காரணமாக போரில் தோற்றுவிட்டு என்னைத் துரோகி என்பதில் என்ன நியாயம் உள்ளது. மட்டக்களப்பில் இன்று பார்த்தால் தமிழரின் நிலை பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இதனைத் தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லை பணத்தை வாங்கி விட்டு முதலமைச்சர் பதவியை விற்றுள்ளனர்.

உலகத்திலே ஒரு எதிர்க்கட்சி வரவு -செலவுத் திட்டத்துக்கு வாக்களித்த வரலாறு உண்டா? அது இங்குதான் நடந்துள்ளது. அனைத்துக்கும் கை உயர்த்திக் கொண்டு இருக்கின்றனர். இப்படி அரசுக்கு முட்டுக்கொடுப்பதை விட அமைச்சு பதவி எடுத்துக்கொண்டு மக்களுக்கு அபிவிருத்தியைச் செய்யுங்கள் - என்றார். (5)



### எல்லாம் தேர்தல் நாடகம்தான்

மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சி அரசு அமைப்பதற்கு தயார் என்று திடுதிடுப்பென அறிவிப்பை விடுத்திருந்தார். கூட்டு அரசின் ஆயுள் முடிந்து விடுமோ என்று பலரும் கலக்கமடைந்தனர்.

இந்த அறிவிப்பெல்லாம் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்கைப் பெற்றுக் கொள்வதற்குத்தான் என்று அரசின் உயர்மட்டங்களில் பேச்சடிபடுகின்றது. மகிந்த அணியை வீழ்த்துவதற்காகவே மைத்திரி இந்த 'ஸ்ரன்ட்' எடுப்பதாகக் கூறப்படுகின்றது. தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான உறவு எந்தச் சேதாரமும் இன்றித் தொடரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் குடியரசு தின நிகழ்வில் கலந்து கொண்ட மைத்திரி, முக்கிய பிரமுகர் ஒருவருக்கு இந்த விடயத்தை சாடைமாடையாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

இதனை விட, பெப்ரவரி 8ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு ரணில் தயார் என்று அறிவித்திருந்தார். மைத்திரியின் சவாலை ஏற்பதுபோல அவரது அறிவிப்பு அமைந்திருந்தது. தேர்தல் பரப்புரைக் காலம் முடிந்த பின்னர் நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது என்று ரணிலுக்குத் தெரிந்திருந்தும் அவர் இந்தத் திகதியை அறிவித்திருந்தார்.

ரணிலின் இந்த 'ஸ்ரன்ட்' ஐக்கிய தேசியக் கட்சிக்கான வாக்கு வங்கியைச் சரிய விடாது பேணுவதற்கானது என்று அரசியல் உயர்வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

# காங்கேசன்துறை மாளிகை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு?

கொழும்பு, ஜன. 29

வடக்கு மாகாண சபை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் கோரிக்கைகளைப் புறக் கணித்து, காங்கேசன்துறையில் மகிந்த ராஜபக்சவால் அமைக்கப்பட்ட சொகுசு மாளிகையை வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் கையளிக்கும் முனைப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



சொகுசு மாளிகையின் ஒரு பகுதி

காங்கேசன்துறையில் முன்னைய ஆட்சிக்காலத்தில் சொகுசு அரச தலைவர் மாளிகை அமைக்கப்பட்டது.

20 சிறப்பு அறைகள், சொகுசு வசதிகள், இரண்டு நீச்சல் தடாகங்கள் மற்றும் வதிவிட வசதிகளுடன் அமைக்கப்பட்ட இந்த மாளிகை பற்றிய இரகசியங்கள், 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்குப் பின் அம்பலமாகின.

இந்தச் சொகுசு மாளிகையை தமது தேவைக்குப் பயன்படுத்தப் போவதில்லை என்று அரச தலைவராகப் பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

இந்த நிலையில், காங்கேசன்துறை சொகுசு மாளிகையை, தம்மிடம் கையளிக்குமாறு வடக்கு மாகாணசபை கோரிக்கை விடுத்திருந்தது. கல்வி மையமாகப் பயன்படுத்துவதற்கு அதனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காங்கேசன்துறை சொகுசு மாளிகையை நாட்டுக்கு வருமானம் தேடித் தரும் நட்சத்திர விடுதியாக மாற்றப் போவதாகத் தெரிவித்தார்.

கேள்விப் பத்திரங்களுடன் பல பன்னாட்டு முதலீட்டாளர்கள், தமது செயலகத்தை அணுகியுள்ளனர் என்றும், இதனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். (5)

# மீண்டும் பிரேரணை

## அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29



காங்கேசன்துறை அரச தலைவர் மாளிகைளை வடக்கு மாகாண சபையிடமே ஒப்படைக்கவேண்டும் எனக் கோரும் பிரேரணை மீளவும் சபையில் கொண்டுவரப்படும். இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இந்த மாளிகையைத் தமக்கு வழங்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபை கடந்த 2016ஆம் ஆண்டு பிரேரணை நிறைவேற்றியிருந்தது. இந்தப் பிரேரணைக்கு அரச தலைவரால் பதில் வழங்கப்படாத நிலையில் கடந்த மாத இறுதியில் நினைவூட்டல் கடிதமும் வடக்கு மாகாண சபையால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், காங்கேசன்துறையில் மகிந்த ராஜபக்சவால் அமைக்கப்பட்ட சொகுசு மாளிகையை வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் கையளிக்கும் முனைப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞான[illegible] கேள்வி எழுப்பியபோது, "இது தொடர்பில் சபையில் ஆலோசித்தே முடிவு எடுக்க முடியும். இதனை வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்குமாறு கோரும் பிரேர்ணையை மீளவும் நிறைவேற்றி அனுப்பவுள்ளோம்" என்று குறிப்பிட்டார். (5)



# புதிய பாதத் தடங்கள் தொடர்பில் தொல்பொருள் சான்றுகள் இல்லை

கொழும்பு, ஜன. 29

சிவனொளிபாத மலையில் கண்டுபிடிக்கப்பட்ட பாத அடையாளங்கள் இரண்டு தொடர்பில் எவ்வித தொல்பொருள் சான்றுகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தொல்பொருளியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை தற்போது கிடைத்துள்ளதாக அதன் இயக்குநர் பி.பீ.மண்டாவல தெரிவித்துள்ளார்.

ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகள், இவ்வாறான பாத அடையாளங்கள் அந்த கற்பாறையின் அனைத்து இடங்களிலும் அவதானிக்க முடிவதாக குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பாத அடையாளங்களின் சிறப்புத் தன்மை, இரண்டு அடையாளங்களும் ஒரே இடத்தில் உள்ளமையாகும். எப்படியிருப்பினும் இந்த இடத்துக்கு அருகில் எந்தவித தொல்பொருள் சான்றுகளையும் காண முடியவில்லை என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். அதற்கமைய இந்த பாத அடையாளங்கள் தொடர்பில் மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (5)

# வடக்கு - கிழக்கு ரூபா 2 கோடி

## சில்லறை வழங்குகிறது மத்திய வங்கி

கொழும்பு, ஜன. 29

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலமாக நிலவிவரும் நாணயத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான நாணயங்களை அந்தப் பிரதேசத்திலுள்ள வர்த்தக வங்கிகள் பெற்றுக்கொண்டிருப்தாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பத்து ரூபா, 5 ரூபா, 2 ரூபா நாணயக் குற்றிகளே வடக்கிலுள்ள வங்கிகள் பெற்றுக் கொண்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (5)

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 29

பொலிஸாருக்கு எதிராகக் கடந்த ஓராண்டில் ஆயிரத்து 448 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலையங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படாமை, சட்டத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை, பக்கச் சார்பாகச் செயற்பட்டமை, பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கைது செய்யப்பட்டமை, லஞ்சம் பெற்றமை போன்ற அடிப்படையிலேயே பொலிஸாருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் 30 தாக்குதல் சம்பவங்களும், கைது செய்யப்பட்டு பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்தபோது இடம்பெற்ற இரண்டு உயிரிழப்புச் சம்பவங்களும் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரால் விசாரணை செய்யப்படவில்லை என்று 368 முறைப்பாடுகளும், சட்டத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் 286 முறைப்பாடுகளும், பக்கச்சார்பாகச் செயற்பட்டமை குறித்து 210 முறைப்பாடுகளும், பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இடம்பெற்றதாக கூறப்படும் கைதுகள் குறித்து 71 முறைப்பாடுகளும் மற்றும் இலஞ்சம் பெறல் உள்ளிட்ட ஊழல் மோசடிகள் குறித்து 10 முறைப்பாடுகளும் தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் அடங்கியுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (5)

# மாரப்பன குழுவின் அறிக்கை இன்று பிரதமரிடம் ஒப்படைப்பு

பிணைமுறி மோசடியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற தொடர்புகள் பற்றி ஆராய்வதற்காக அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி விநியோகத்தில் இடம்பெற்ற மோசடிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்புபட்டுள்ளனரா என்பது குறித்து விசாரணை செய்யும் நோக்கில், அந்தக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்தக் குழுவுக்கு அயலுறவு அமைச்சர் திலக் மாரப்பன தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைக் கருத்திற்கொண்டும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (5)

# எம்மை விமர்சிப்போர் வரலாற்றை மறந்துவிட்டனர் தேர்தலில் தமிழ் மக்கள் அதனை நினைவுபடுத்துவர்

## கூட்டமைப்பின் வியூகங்களை விளக்கி சம்பந்தன் சாட்டை

கொழும்பு, ஜன. 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சனம் செய்யும் சிவசக்தி ஆனந்தன் அவர்களது வரலாற்றை மறந்துவிட்டு தரம் குறைந்த தாழ்வான விதத்தில் பேசுகிறார். நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அந்த வரலாற்றை அவர்களுக்கு நினைவுபடுத்துவார்கள். அரசின் வரவு - செலவுத் திட்டத்தை நாங்கள் ஓர் அரசியல் வியூகத்துக்காகவே ஆதரித்தோம். அவற்றைப் பகிரங்கமாகச் சொல்ல முடியாது. ஆனால், நாடாளுமன்றத்துக்கு தகுதியில்லாத வகையில் பேசுபவர்களுக்கு உரிய பதிலை எமது மக்கள் வழங்குவார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்க அரசிடம் இரண்டு கோடி ரூபா நிதியைப் பெற்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் குற்றச்சாட்டு குறித்து கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிவசக்தி ஆனந்தன் கூறுவது போல கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அந்த நிதி கிடைக்கவில்லை. கூட்டு எதிரணியைத் தவிர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அது வழங்கப்பட்டது. நான் இந்த நிதியைப் பெறவில்லை. ஆனால், அபிவிருத்தித் திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தான் இந்த நிதி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. இதில் கையூட்டோ அல்லது வேறெந்த அர்த்தமோ கிடையாது.

வரவு - செலவுத் திட்டத்தை நாங்கள் ஆதரித்தமைக்கு ஓர் உள்நோக்கம் உள்ளது. ஒரு வியூகம் உள்ளது. அரசமைப்புத் திருத்தமொன்றை எதிர்நோக்கி அது தொடர்பான கருமங்களை ஆற்றிவரும் எங்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொள்ளும் அதிகாரம் உள்ளது என்பதைக் காட்ட வேண்டிய தேவை உள்ளது. அந்த அதிகார வல்லமை எங்களிடம் இருப்பதைக் கண்டு எதிர்தரப்புக்கள் பதற்றமடைய வேண்டும். அந்த அதிகாரத்தைக் கொண்டு எமது மக்களுக்குத் தேவையான தீர்வை சரியான நேரத்தில் எடுக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் எங்களுக்கு உள்ளது.



இந்த வியூகத்தை அல்லது எமது நுட்பமான அரசியல் நடவடிக்கைளைப் பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

ஆனால், அரசியல் ஞானம், தரம் குறைந்த வகையில் சக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேவலமாகப் பேசுவது நாடாளுமன்ற தகுதியின் மாண்பைக் குறைக்கும் வகையில் கேவலமாகப் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படிப் பேசுபவர்களின் சரித்திரம் என்ன என்பது பற்றி மக்களுக்கு நாங்கள் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இவற்றுக்கான பதிலை மக்கள் தேர்தலில் அவர்களுக்கு வழங்குவார்கள் - என்றார். (5)

# முன்னாள் அமைச்சர் விரைவில் கைது!

கொழும்பு, ஜன. 29
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் முக்கிய அமைச்சராக இருந்தவர் விரைவில் கைது செய்யப்படவுள்ளார். கண்காணிப்பு அமைச்சராக பதவிவகித்தவரே கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அரச தலைவர் செயலகத்துக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது இடம்பெற்ற 2.5 கோடி ரூபா நிதி மோசடி தொடர்பில் இவர் கைது செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.
இது தொடர்பில் கடந்த 25ஆம் திகதி அரச தலைவர் செயலகத்தின் முன்னாள் மேலதிக செயலர் ஒருவரும் கணக்காளர் ஒருவரும், பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# கோத்தா தகுதியற்றவர்

## மகிந்த அணியின் தலைவர் தெரிவிப்பு



*கொழும்பு, ஜன. 29*
*2020ஆம் ஆண்டு நடக்கும் அரச தலைவர் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தகுதியானவர் அல்ல என்று மகிந்த அணியான கூட்டு எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.*

அவர் மேலும் தெரிவித்ததாவது,
அமெரிக்க குடியுரிமையைக் கொண்டுள்ள கோத்தாபய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது. அவர் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றால், அமெரிக்க குடியுரிமையைக் கைவிட வேண்டும்.
ஆனால், எந்தவொரு சூழ்நிலையிலும், அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிடத் தாம் விரும்பவில்லை என்று அவர் ஏற்கனவே எம்மிடம் கூறியுள்ளார்.
அரச தலைவர் தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்று பொருத்தமான நேரத்தில் முடிவெடுக்கப்படும் - என்றார். (5)

## நிதி விடயத்தில்

# ஆபத்தான பட்டியலில் இலங்கையும் அடக்கம்

கொழும்பு, ஜன. 29
பணச்சலவை தொடர்பாக, ஆபத்தான 11 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளதாக நாடுகளுக்கிடையிலான நிதி நடவடிக்கை செயலணி தெரிவித்துள்ளது.
பணச்சலவை குறித்த அதிக ஆபத்துள்ள மற்றும் கண்காணிப்பு அதிகார வரம்புக்குட்பட்ட 11 நாடுகளை நாடுகளுக்கிடையிலான நிதி நடவடிக்கை செயலணி பட்டியலிட்டுள்ளது.
இலங்கை, பொஸ்னியா ஹெர்சகோவினா, வடகொரியா, எதியோப்பியா, ஈரான், ஈராக், சிரியா, ரினிட்டாட் அன்டுபாகோ, துனிசியா, வனாட்டு, மற்றும் யேமன் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.
இந்தப் பட்டியல் நாடுகளுக்கிடையிலான நிதி நடவடிக்கை செயலணியின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
இந்த நாடுகள் தீவிரவாதத்துக்கான நிதியிடல் மற்றும் பன்னாட்டு நிதி முறைமைக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. (5)

# வாக்குச்சீட்டை படம் பிடித்த ஆசிரியர் கைது!

கொழும்பு, ஜன. 29
தபால் வாக்களிப்பின்போது வாக்குச்சீட்டை ஒளிப்படம் எடுத்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.
ஹொரவபொத்தான பகுதியில் வைத்தே 44 வயதான ஆசிரியர் கைது செய்யப்பட்டார். வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய ஆசிரியர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
தபால் வாக்களிப்பை காணொலியாக்கிய 4 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# குப்பைப் பிரச்சினைக்கு தீர்வு கண்ட மைத்திரி

## நன்றி கூறுகிறார் சந்திரிகா





கொழும்பு, ஜன. 29
கம்பகா மாவட்டத்தில் நிலவிய குப்பைப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொடுத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றி கூறுவதாக முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
கம்பகா மாவட்டத்தில் டடகமுவ பிரதேசத்தில் குப்பைகளால் சீர்கேடு நிலவி வந்தது. பல இடங்களிலிருந்தும் கொண்டு வரப்படும் குப்பைகள் டடகமுவ பிரதேசத்தில் உள்ள தனியாரின் காணியில் கொட்டப்பட்டு வந்தது. குப்பைகளைக் கொட்டுவதற்கு இடத்தை வழங்கிய தனிநபர் வாடகையாகப் பெருமளவு பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.
இதனால் அந்தப் பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டிருந்தது. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அந்தப் பகுதியை நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அரச தலைவர் மைத்திரிபாலவின் கவனத்துக்கு நேரடியாகக் கொண்டு சென்றிருந்தார்.
இதனையடுத்து அரச தலைவர் மைத்திரி, குப்பைகளை மீள்சுழற்சி செய்யக் கூடிய நவீன இயந்திரத் தொகுதிகளுடன் ஓர் இடத்தை தெரிவு செய்து கொடுத்துள்ளார். இதற்காக முன்னாள் அரச தலைவர் சந்திரிகா, மைத்திரிக்கு நன்றி தெரிவித்துள்ளார். (5)

# 10ஆம் திகதி சாவு நிச்சயம்

## கூட்டரசுக்கு பீதியை கிளறி விடுகிறார் வாசுதேவ

கூட்டரசின் மூச்சு ஊசலாடிக் கொண்டிருக்கின்றது என்றும், எதிர்வரும் 10ஆம் திகதி அது இறந்துவிட்டதென்ற செய்தி நிச்சயம் வெளியாகும் என்றும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
மத்திய வங்கியில் கை வைத்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சி தடுமாறிக் கொண்டிருக்கின்றது. விவாதத்தை எதிர்வரும் 8ஆம் திகதி நடத்துவதற்கு முடிவெடுத்துள்ளதன் மூலம் தமது தரப்பில் குற்றம் உள்ளது என்பதை அந்தக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. 8ஆம் திகதி நடப்பவற்றை ஊடகங்கள் பிரசுரிக்க முடியாது. அதனால்தான் மேற்படி திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எது எப்படியோ கூட்டரசு மூச்சு இழுத்துக் கொண்டிருக்கின்றது. 10ஆம் திகதி சாவுச் செய்தி வெளிவருவது நிச்சயம்- என்றார். (5)

# குடியுரிமையைப் பறித்தாலும் போராட்டத்தைக் கைவிடேன்!

## மகிந்த சூளுரை



கொழும்பு, ஜன. 29
எனது குடியுரிமையை இல்லாமல் செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனக்கு என்ன நடந்தாலும் மக்களுக்கான எனது போராட்டத்தைக் கைவிடமாட்டேன். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
தற்போது அரச தலைவருக்கு கடும் கோபம் ஏற்பட்டுள்ளது. எனது கூட்டத்தைப் பார்த்தவுடன் அவரது கோபம் மேலும் அதிகரிக்கின்றது.
எனது குடியுரிமையைப் பறிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாம்.
எனது குடியுரிமை பறிக்கப்பட்டாலும், மக்களுக்கான போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை - என்றார். (5)

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்க அமைச்சரவைப் பத்திரம்

## அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29
உள்ளூராட்சி சபைத் தேர்தலில், தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ள கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகளுக்காக 74 கோடி ரூபா பணம் செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாகவே இந்தப் பெருந்தொகை நிதி தேவைப்படுவதாகவும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் தொகை 4 ஆயிரத்துக்கும் அதிகமாகியுள்ளதால், அதிகரிக்கவுள்ள உறுப்பினர்களது கொடுப்பனவு உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்கான பணத்தை பெற்றுக் கொள்வது தொடர்பில் எதிர்வரும் இரு வாரங்களில் அமைச்சரவையில் பத்திரமொன்று சமர்ப்பிக்கவுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.
அந்தந்தத் தொகுதிகளில் கூட்டங்களை நடத்த கேட்போர்கூடங்களை அவர்களே ஒழுங்கு செய்துகொள்ள வேண்டியுள்ளதாகவும் அவ்வாறான தேவையுடைய தொகுதிகளுக்கு நிதியை வழங்கவேண்டியுள்ளதாகவும் அத்தோடு பிரதேசசபை உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 15ஆயிரம் ரூபாவும் நகர மற்றும் மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 20ஆயிரம் ரூபாவும் வழங்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (5)

## மைத்திரி தலைமையிலான

# கட்சித் தலைவர்கள் கூட்டம்: தமக்கு எதுவும் தெரியாதாம்

## அமைச்சர் கயந்த கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 29
பிணைமுறி மோசடி தொடர்பில் இன்று திங்கட்கிழமை அரச தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் ஆளும் கட்சியின் பிரதம கொரடாவுமான அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் விவாதம் நடத்த வேண்டும் என்று அரச தலைவர் கருத்து வெளியிட்டிருந்தார். இதுதொடர்பில் அரச தலைவரின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு இன்று சிறப்புக் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்நிலையிலேயே மேற்படி கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்றும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 8ஆம் திகதியன்று நாடாளுமன்றைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டுள்ளமையால், அதற்கு முன்னர் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறலாம் என்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் காணி அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (5)

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பன்

**பொன்னையா மோகனராஜன்**

**(கமலக்கண்ணன்)**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு
ஆழ்ந்த கவலையடைவதோடு அவரது
குடும்பதினருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**த.குணசிங்கம் குடும்பத்தினரும், ஊழியர்களும்,**
**உரிமையாளர் - கோபிகா ஆடையகம்,**
**யாழ்ப்பாணம்.**

(cs 13390) (13.17)

## மரண அறிவித்தல்கள்

## சுப்பையா இராசரத்தினம்



பிறப்பு 09.10.1935 இறப்பு 28.01.2018

கொக்குவில் மேற்கைப் (பள்ளத்தடி) பிறப்பிடமாகவும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசரத்தினம் நேற்று(28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் திரவியம் தம்பதிகளின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ரவிக்குமார், ஜெயக்குமார், றமேஸ்குமார் (றமேஸ் - துர்க்கா பந்தல்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மஹாலட்சுமி, தயாமதி ஆகியோரின் மாமனாரும், பவினா, துவாரகன், துலோஷன், காருண்யன் ஆகியோரின் பேரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் கமலாதேவி, மகாலக்ஷ்மி, சின்னராசா ஆகியோரின் சகோதரனும், பொன்னம்பலம், சுந்தரலிங்கம், நகுலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**RDS லேன், மாரியப்புலம்,**
**தாவடி வடக்கு.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

(CS/13392)(11.17)

**077 979 3359**

## திருமதி குணமணி நடேசு



தோற்றம் 12.03.1935 மறைவு 27.01.2018

மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணி நடேசு 27.01.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-இளையபிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சுவகிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நடேசுவின் பாசமிகு மனைவியும், கருணாவதி (சுவிஸ்), நற்குணமூர்த்தி, உதயகுமாரி (றொபி), விஜயகுமாரி, கமலகுமாரி, உதயகுமார் (சுவிஸ்), சாந்தகுமாரி (ஜேர்மனி), விஜயகுமார் (சாந்தன் - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரன், ஞானசேகரம், கனகரத்தினம் மற்றும் யோகேஸ்வரன், தர்மராசா, தங்கமலர், சகீலா, பிருந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அப்புலிங்கம், குணபாலசிங்கம், பாலையா, தம்பிஐயா, தேவசந்திரன் மற்றும் தேவி, அம்பிகாவதி, தேசிகாவதி, இராசகுலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மயிலணி வடக்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS/13386)(11.17)

## திருமதி நந்தினி சிவலோகநாதன்

## (அளவெட்டி)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நந்தினி சிவலோகநாதன் 25.01.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.முருகேசம்பிள்ளை மல்லிகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சுப்பிரமணியம் சிவலோகநாதன் (Teacher Uduvil Girls College) இன் அன்பு மனைவியும் கபிலன் (Faculty of Engineering Sri Venkadeshwara University, India), குணேசன் (Faculty of Engineering University of Moratuwa) ஆகியோரின் அன்புத்தாயாரும் இந்திராதேவி, சுவீந்திரன்(Canada), ரவீந்திரன் (District Manager, NHDA, Jaffna) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஸ்ரீலோகநாதன் (Canada), வாமாதேவி (Canada), சத்தியலோகநாதன், சந்திரகாந்தன்(Retired Manager, People's Bank), பிறேமாவதி(Canada),ரஞ்சினி (Teacher Sandilipay Hindu Colllege) ஆகியோரின் அன்புமைத்துனியும் சந்திரவதனா (Canada), நடராசா (Canada), வான்மதி (Teacher Chulipuram Victoriya Colllege) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்கன், மாவிட்டபுரம், தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 13384) (14.17)

**077 623 9879/ 071 866 5126**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 11 . 02 . 1977

இறப்பு 02 . 01 . 2018

கடந்த (02.01.2018) செவ்வாய்க்கிழமை சிவபதப்பேறு அடைந்த,
எமது குடும்பத்தலைவர்

**அமரர்**

## இந்திரசித்து விக்கினேஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.01.2018) செவ்வாய்க்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (01.02.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.32/A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.32/A பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(C 31515)(14.17)

## மரண அறிவித்தல்



## சோழங்கர் யோகேஸ்வரன்

(உறுதி எழுதுநர் - மாசேரி, வரணி)

மாசேரி, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோழங்கர் யோகேஸ்வரன் கடந்த 26.01.2018 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோழங்கர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், விஜயலஷ்மி (லண்டன்), ஜெயலஷ்மி, செல்வலஷ்மி (அபிவிருத்தி உத்தியோகத்தர் , கமநல அபிவிருத்தி திணைக்களம் - வவுனியா), ரமணன் (லண்டன்), தேவசுதன், கேசவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம் (லண்டன்), சிவரூபன் (சட்டத்தரணி - சாவகச்சேரி), தயாபரன் (செயலாளர் நகரசபை - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும், கவின், கபிஷா, ஜெயருக்ஷன், அக்ஷயா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பொற்பத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவம்.

**மாசேரி, வரணி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**சுதன் - 076 5411306,**
**கேசவன் - 077 135 2688**

(254)(13.17)

துணுக்காய் வலய தபால் மூல வாக்களிப்பில்

# 75 வீத வாக்குகளே பதிவு



துணுக்காய்,ஜன.29
துணுக்காய் வலய தபால் மூல வாக்கு நிலையத்தில் 75 வீத வாக்குகளே பதிவு செய்யப்பட்டன.
துணுக்காய் வலயத்துக் குட்பட்ட பகுதிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அடங்களாக 446 உத்தியோகத்தர்கள் தபால்மூலம்வாக்களிக்கத்தகுதிபெற்றனர். 3 நிலையங்களில் 2 நாள்களாக நடைபெற்ற வாக்களிப்பின் அடிப்படையில் 108 உத்தியோகத்தர்கள் வாக்களிக்கவில்லை என அறிய முடிகிறது. இது 75 வீத வாக்களிப்பையே காட்டுகிறது. அரச உத்தியோகத்தர்களே இவ்வாறு வாக்களிப்பை தவிர்த்துவருவது கவலை தரும் விடயமாகும். (எ-72)

அனுமதிப்பத்திரம் இன்றி

# மணல் ஏற்றிய டிப்பர் வாகன சாரதி கைது

கிளிநொச்சி.ஜன.29
அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார் என கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதிபெரலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.
கிளிநொச்சி ம்ாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலோப்பளை பகுதியில் தொடர்ச்சியாக மணல் கொள்ளை இடம்பெறுவதாக பொலிசாருக்கு கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற சிறப்புப் பிரிவினர் பதுங்கியிருந்து மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தை கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரும் வாகனமும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். என கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் சிறப்பு பிரிவினர் மேலும் தெரிவித்தனர. (எ-6)

தேர்தல் கண்காணிப்பு பிரிவினரால்

# தேர்தல் விளம்பரங்கள் அகற்றப்படுகின்றன

முல்லைத்தீவு,ஜன.29
முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் தேர்தல் விதிமுறைகளைமீறிஒட்டப்பட்டுள்ளவிளம்பரங்களை அகற்றும் நடவடிக்கையில் தேர்தல் கண்காணிப்பு பிரிவினர் ஈடுபட்டுள்ளார்கள்.
மாங்குளம் பகுதியில் வீட்டுச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தனது விளம்பரத் துண்டுகளை மக்களின் வீடுகளின் கதவுகள் மற்றும் பாலம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் ஒட்டியுள்ளார் இவற்றை மாங்குளம் பொலிஸாரின் உதவியுடன் அகற்றும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.
எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சில இடங்களில் இவ்வாறான விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளமையை பொலிஸார்கண்டும்காணாமலும்இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-ரி3)

# நெடுங்கேணி பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகள்

வவுனியா, ஜன.29
நெடுங்கேணி சின்னடம்பன் பகுதியில் முதிரை மரக்கடத்தல்களும், சட்டவிரோத மண்அகழ்வுகளும், கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகின்றன என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.
சின்னடம்பன் பகுதியில் காட்டுத்துண்டத்தில் பெருமளவான முதிரை மரங்கள் அழிக்கப்பட்டு, மரக்குற்றிகள் கடத்தப்பட்டு வருகின்றன. காட்டை அண்மித்த பகுதியில் சட்டவிரோதமாக மண்அகழ்வுகளும் இடம்பெற்று வருகிறன. பெருமளவான மரக்குற்றிகள் பாடசாலையொன்றில் இரவுவேளைகளில் வைக்கப்பட்டு கடத்தப்படுகின்றன. குறித்த பகுதியில் மதுப்பிரியர்களின் நடமாட்டமும் இருக்கின்றது. இதனால் பாடசாலைச் சமூகத்தினரும் அச்சம் தெரிவிக்கின்றனர். இச்செயற்பாடுகளால் சுற்றுசூழல் பாதிக்கப்படுவதுடன் சாலைளும் சேதமடைகின்றன என்றனர். (ய-402)

சபையின் அமைச்சு மட்ட

# ஆலோசனைக்குழு கூட்டத்துக்கு உறுப்பினர்கள் செல்வதில்லை

## வடமாகாண அவைத்தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜன.28
வடக்கு மாகாண சபையின் அமைச்சு மட்ட ஆலோச னைக்குழுக் கூட்டத்துக்கு உறுப்பினர்கள் செல்வதில்லை என வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் குற்றம்சாட்டியுள்ளார்.

'வடக்கு மாகாண சபையின் அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக்க ளுக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நிய மிக்கப் பட்டுள்ளனர். எனினும் ஆலோசனைக்குழு கூட்டம் இடம் பெறுகின்றபோது நியமிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர் கள் செல்வதில்லை என முறைப்பாடு கிடைத்துள்ளது. எனவே ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் செல்லவேண்டும்' என அறிவுறுத்தினார்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மாகாண சபை அமர்வு நாள்களில் முழுமையாககலந்துகொள்வ தில்லை என குற்றம் சாட்டப்பட்டு வருகின்ற நிலையில் இப்போது அமைச்சரவைக் கூட்டத்தில் கூட உறுப்பினர்கள் கலந்து கொள்வ தில்லை என கூறப்படு கின்றது. (எ-4,8)

# விளையாட்டுப் போட்டிகளில் துறைசார் அதிகாரிகளை அழைப்பது பயனுடையது

மாங்குளம், ஜன. 29
பாடசாலைகளில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் அரசியல்வாதிகளை அழைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அதனால் துறைசார் கல்வி அதிகாரிகளை அழைப்பதன் மூலமாக மாணவர்கள் பெரும்பயனைப் பெறமுடியும் என்று ஆசிரியர்களால் கூறப்படுகிறது.
இதுவரை காலமும் பெரும்பாலும் விருந்தினர்களாக அரசியல் தலைவர்களை அழைப்பதே வழமையாக இருந்தது. பாடசாலைகளின் தேவைகளைக்கூறி பணம் பெறுவதும் அவர்களை அழைப்பதன் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.
உரிய விழா சம்பந்தமாக தேர்ச்சி பெற்றவர்கள் மாணவர்களுக்குச் சிறப்புரை ஆற்றுவது முக்கியமானது. இந்தமுறை தேர்தல் காரணமாக பாடசாலைகள் அரசியல் தலைவர்களை விருந்தினராக அழைக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் கல்விசார் அதிகாரிகளே பாடசாலைகளுக்கு விருந்தினர்களாக அழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பொருத்தமான துறை சார்ந்த அதிகாரிகளை அழைப்பதன் பொருட்டு மாணவர்களும் நினைத்த விடயங்களை அவர் தம் அனுபவங்கள் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டது. (எ- 4,72)

# சாரதிக்கு தண்டம்

கிளிநொச்சி, ஜன.28
தெளிவற்ற வாகன இலகத்தைப் பொருத்திக்கொண்டு கவனயீனமாக வாகனம் செலுத்திய சாரதிக்கு 4 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று.
பளை பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (ய-6)

# கிளிநொச்சியில் பிரமிட் வியாபார நடவடிக்கை

கிளிநொச்சி,ஜன.29
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களின் முன்னால் நிற்கும் சிலர் அங்குள்ள அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்களை பிரிமிட் அமைப்புக்குள் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
தினமும் மாலை வேளைகளில் அலுவலகங்களுக்கு முன்னால் காணப்படும் நபர்கள் கடமைமுடிந்து வெளியேறும் அலுவலர்களுடன் இலாவகமாகப் பேசி அவர்களது முகவரிகளைப் பெற்று பின்னர் வீடுகளுக்குச் சென்று பிரிமிட் நடவடிக்கையில் பங்குபற்றுமாறு கேட்டு வருகின்றனர. அவர்களின் வாக்குஜாலத்தில் மயங்கும் பெண் அலுவலர்கள் பிரமிட் அமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
கடந்த மாதங்களில் சாவகச்சேரி பகுதியில் உள்ள கட்டடமொன்றில் பிரமிட் அமைப்பின் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டபோது பெருமளவான பொதுமக்கள் வாகனங்களில் அழைத்து வரப்பட்டு மூளைச் சலவை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். இது தொடர்பாக நகரப் பகுதி மக்கள் செய்த முறைப்பாட்டையடுத்து சர்வகச்சேரி நீதிமன்றின் உத்தரவின் பேரில் தென்மராட்சி பிரதேசத்தில் பிரமிட் அமைப்பின் பரப்புரை நிறுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்களைக் குறிவைத்து வியாபாரம் நடத்தி வருகின்றனர் எனவும் அரச அலுவலர்கள் பலர் தெரிவித்தனர். (எ-9)



# கடத்தப்படவிருந்த 2 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி,ஜன.29
கிளிநொச்சியில் இருந்து புகையிரதம் மூலம் கொழும்புக்கு கடத்தப்படவிருந்த இரண்டு கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ்மா அதிபரின் உடனடி முறியடிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இருந்து கொழும்புக்கு கடத்துவதற்காக பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ கஞ்சா மீட்டுள்ளதுடன் கடத்தி வந்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் உடனடி முறியடிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கல்யாணதுங்க தெரிவித்தார். (எ-6)

# கம்பியால் தாக்கியதில் ஒருவருக்கு காயம்

சாவகச்சேரி,ஜன.29
உணவகத்தில் உணவருந்த வந்தவரை அங்கு நின்றவர் இரும்புக் கம்பியால் தாக்கியதில் தலையில் காயமேற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.
ஒட்டிசுட்டான் பெரிய இத்தியடிய்ச் சேர்ந்த கட்டடக் கலைஞர் திருநெல்வேலியில் பணியை முடிந்துக் கொண்டு மீசாலையில் உள்ள உறவினர் வீட்டுக்கு வருகை தந்துள்ளார். வரும்வழியில் சாவகச்சேரியில் உள்ள உணவகமொன்றில் உணவருந்துவதற்காக மோட்டார் சைக்கிளை நிறுத்தியபோது இரும்புக் கம்பியுடன் வந்த ஒருவர் தலையில் கம்பியால் தாக்கியுள்ளார்.
காயமடைந்த ஒட்டிசுட்டான் பெரிய இத்தியடியைச் சேர்ந்த 30 வயது நபர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
தாக்குதல் நடப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன்னர் அந்தப் பகுதியில் இருபகுதியினருக்கிடையில் மோதல் நடைபெற்றதெனவும் மோதலுடன் தொடர்புடைய ஒருவரே அங்கு காத்திருந்து இவர் மோட்டார் சைக்கிளால் இறங்கியபோது தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# சிரார்த்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.29

அகில இலங்கை காந்தி.சேவா சங்கம் நடத்தும் மகாத்மா காந்தியடிகளின் 70ஆவது சிரார்த்த தின நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலையடியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் இடம்பெறும் நிகழ்விும் முதன்மை விருந்தினர்களாக யாழ் இந்திய துணைத்தூதுவர் ஆ. நடராஜன் தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)




முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ரி.தர்சிகா என்ற மாணவி மாகாண மட்டப் பளுத்தூக்கல் விளையாட்டில் முதல்நிலை பெற்று அகில இலங்கை மட்டத்தில் முதல்நிலை பெற்று ஆசிய இளைஞர் மன்றத்தின் போட்டியிலும் முதல் இடத்தைப் பெற்று, சாதனை படைத்தார். தரம் 9 இல் கல்வி கற்கும் இம்மாணவி 13 வயதுப் பிரிவில் பங்குபற்றி 90 கிலோ நிறை தூக்கி சாதனை படைத்தார். அவருக்கான மதிப்பளிப்பு நிகழ்வு வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஏற்பாட்டில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்றது. நிகழ்வில் மாணவிக்குப் பயிற்சி வழங்கிய ஆசிரியர் ப.பிரதீபன், பாடசாலை முதல்வர் த.அருமைநாயகம் மற்றும் ஏனைய வெற்றியாளர்கள் ஆகியோரும் மதிப்பளிக்கப்பட்டனர். (எ-72)




வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியலாயத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்களால் சிரமதானப்பணி நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

## கூரையில் நின்று பட்டம் ஏற்றியவர் கீழே வீழ்ந்ததால் என்பு நொருங்கியது

சாவகச்சேரி, ஜன. 29

வீட்டுக்கூரை மீது ஏறி பட்டம் விட்ட 16 வயதுச் சிறுவன் கூரையிலிருந்து தவறி வீழ்ந்ததில் தோள்மூட்டு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது. அந்தச் சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச்சம்பவம் சாவகச்சேரி வீரசிங்கம் சாலையில் நேற்று மாலை இடம்பெற்றது. கூரையில் நின்று பட்டம் ஏற்றிக் கொண்டிருந்த வேளையில் கால் தடுக்கி நிலத்தில் தலைகீழாக வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனை செய்த மருத்துவர்கள் தோள் எலும்பில் பாதிப்பு ஏற்பட்டுதெனத் தெரிவித்தார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த மதிகரன் நிலக்ஸன் (வயது 16) என்பவரே காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-9)



வல்லை வெளிச் சந்தியில் நேற்றுமாலை மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவரும் காயத்துக்குள்ளாகினர். அவர்கள் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (4,64)

### வடக்கு மாகாணத்தில்

# 6 உள்ளூராட்சி சபைகளில் 3 வருடத் திட்டம் விரைவில்

## சபைகளின் உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் ஆறு சபைகளில் சிறப்புச் செயறதிட்டங்கள் 2018–2020 ஆகிய மூன்று ஆண்டுத்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தப்பா இதற்கான துரித நடவடிக்கைகளை அமைச்சரின் செயலாளர் எச்.ரி.கமல் பத்மசிறி ஊடாக முன்னெடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் வருமானம் மிகக்குறைந்த ஈட்டத்தினைக் கொண்ட பின்தங்கிய உள்ளூராட்சி சபைகளான வவுனியா வடக்கு பிரதேச சபை, கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை, முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, பூநகரிப் பிரதேச சபை, என்பவற்றுக்கு மூன்று வருடத்துக்கு 20 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் வெற்றிடங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேற்படி உள்ளூராட்சி சபைகள் விற்பனைக்கட்டடத் தொகுதி, சுற்றுலாத்துறை, சிறிய நகர வசதிகளாக்கப்படும் கருத்திட்டம் உள்ளூராட்சி சபைகளுக்கு வருமானத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்திட்டம் என்பவற்றை உடன் சபையின் முன்மொழிவுகளாகத் தயாரித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களின் சிபார்சுடன் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்திப் பிரிவுக்குச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கருத்திட்ட முன்மொழிவுகளும் முறையான நியாயப்படுத்தல்களை முன்வைக்கும் பட்சத்திலேயே நிதிப் பங்களிப்புத்திட்டத்துக்குள் உள்வாங்கப்படும் என்று உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார். (4-50)

# மாணிக்கப்பிள்ளையார் குளப் பணிகள் நிறைவடைந்தும் நிதி கிடைக்கவில்லை

## கமக்கார அமைப்பினர் கவலை

கிளிநொச்சி,ஜன.29

முகமாலை மாணிக்கப்பிள்ளையார் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்தும் இதுவரை நிதி கிடைக்கவில்லை என கமக்கார அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

குறித்த கமக்கார அமைப்பினர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள கிராமமே முகமாலை ஆகும். குறித்த கிராமத்தில் உள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள விவசாயக் குளமே மாணிக்கப்பிள்ளையார் குளமாகும். குறித்த குளத்தை புனரமைப்புச் செய்வதற்கு கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்ளத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளபோதும் அதற்கான நதி முழுமையாக கிடைக்காத காரணத்தால் வேலைகளை மேற்கொண்டவர்களுக்க வழங்கமுடியாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து நிவர்த்தி செய்து தரவேண்டும் என்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆயகுலனிடம் கேட்டபோது, இந்த வேலைத்திட்டம் எமது தலைமையகத்தால் நேரடியாக வழங்கப்பட்டது. குறித்த வேலைகளை பொறுப்பெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதி வழங்கப்பட்டது. அவர்கள் அந்த காலப்பகுதியில் புனரமைக்காத காரணத்தால் நிதி பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவர்களை அவ்வாறு கைவிடப்போவதில்லை. இந்த வருடத்தில் வேறு திட்டங்கள் மூலம் நிதியை பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (எ-6)

## செயல்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.29

வரணி வடக்கு அரசினர் தமிழ்.கலவன் பாடசாலையின் செயல்பட்டுமகிழ்வோம் நிகழ்வு பாடசாலை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பரடசாலை முதல்வர் ஞ.வசந்தரூபன் தலைமையில் இடம்பெறும் போட்டியில் சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா முதன்மை விருந்தினராக கலந்து கவுள்ளார்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாட சாலைச்சமுகம் தெரிவித்துள்ளது. (எ-122)

## மெய்வன்மை விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நிகழவுள்ள போட்டியில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய கல்வித் திட்டத்தின் துணை இயக்குநர்(திட்டமிடல்) எஸ்.தேவமனோகரன் மற்றும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்வி உதவி இயக்குநர்(உடல்நிலை கல்வி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது. (எ-4)

### முல்லைத்தீவு ஒட்டுசுட்டான்

# மருத்துவமனை வளாகத்தில் காணப்படும் குளவிக்கூட்டால் மக்களுக்கு நெருக்கடி!

முல்லைத்தீவு,ஜன.29



ஒட்டுசுட்டான் மருத்துவமனை வளாகத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதியில் வரிசைக்கணக்கில் பனைமரங்கள் காண்படுகின்றன. பனைமரங்களில் இரண்டு பெரிய குளவிக் கூடுகள் நீண்டகாலமாக காணப்படுகின்றன. இந்தக் குளவிகள் மருத்துவமனைவரும் நோயாளர்கள் சிலரை கடித்ததுண்டு. இன்றும் அகற்றப்படாத நிலையில் இந்த குளவிகூடுகளால் மக்கள் அச்சத்துடன் நடமாட வேண்டியுள்ளது என பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் பிரதேச வாசி ஒருவர் கருத்து தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் இந்தகுளவிகள் குத்தியதில் இரண்டு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மருத்துவமனை நிர்வாகத்திடம் குளவிக்கூட்டை அகற்றுமாறு சொல்லப்பட்டது. எனினும் அவர்கள் குளவியினை எரித்து அகற்ற முடியாது என்று தெரிவித்துள்ளார்கள்.

மருத்துவமனை நிர்வாகம் சுகாதார பணிமனை ஊழியர்களளே இதனை மேற்கொள்ளவேண்டும். குளவிகளைக் கலைப்பதற்குரிய மருந்து உண்டு. அதனை அடித்தால் குளவிகள் பறந்துவிடும் அல்லது இறந்துவிடும் என்று மருத்துவமனையின் மருத்துவர் தெரிவித்துள்ளார். இதற்கமைய நாங்கள் குளவிக்கூட்டுக்கு சுகாதார பரிசோதகரிடம் சென்றோம் அவர் 'குளவிக்கு அடிப்பதற்கு தங்களிடம் மருந்து இல்லை என்றும் தேன் பூச்சி என்றால் அதற்கு அடிக்கலாம் என்றும்' தெரிவித்தார்.

குளவிக்கூட்டுக்கு அருகில் தற்போது கட்டுமாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மருத்துவமனைக்கு நரும் நோயாளர்களுக்கு இந்த குளவிக்கூட்டால் அபத்து உள்ளது. இதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அகற்றவேண்டும் என்றார். (எ-ரி3)

# திருமண வீட்டில் நகை மற்றும் பணம் திருட்டு

அச்சுவேலி.ஜன.29

திருமண வீடொன்றில் தங்க நகைகள் மற்றும் பணம் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் புத்தூர், நிலாவரைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

நேற்று முன்தினம் குறித்த பகுதியில் திருமண நிகழ்வொன்று இடம்பெற்றது.

நேற்று அதிகாலை வீட்டுக்குள் உள் நுழைந்த இனந்தெரியாத சிலர் 12 பவுண் தங்க நகைகள், 14 இலட்சத்துக்கும் அதிகமான பணம் என்பவற்றைத் திருடியதாகத் தெரிவிக்கப்பட்டது. போலி நகைகள் பிறிதாக எடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் சமையலறை யன்னல் உடைக்கப்பட்டே திருடப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2.26)



# கோணேஸ்வரர் ஆலயத்தை தரமுயர்த்த இந்தியாவிலிருந்து முதலீட்டாளர்கள்

திருகோணமலை.ஜன.29

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தை தரமுயர்த்துவது தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியாவிலிருந்து முதலீட்டாளர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் திருகோணமலையை வந்தடைந்தனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் வழிகாட்டலில் ஆசியாவின் தலை சிறந்த இந்து வணக்கஸ்தலமாக திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தை தரமுயர்த்தி யாத்திரிகர்களுக்கான உட்கட்டுமான வசதிகளை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தியா புதுடில்லியைச் சேர்ந்த திரு. உதய தேஷாய் மற்றும் பிரவீன் அக்றவால் உட்பட 14 பேர் கொண்ட குழுவினர் சிறப்பு விமானம் மூலம் திருகோணமலை சீனக்குடா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இக்குழுவினர் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டதோடு ஆலயத்தை உலகளாவிய ரீதியில் வசிக்கும் இந்துக்களின் வணக்கஸ்தலமாக மேம்படுத்துவது குறித்தும் ஆராய்ந்தனர்.

திருகோணமலை சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய பிரதேசங்களை பார்வையிட்டதுடன் மாவட்டத்தின் முதலீடுகளை மேற்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது. இதில் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலக அதிகாரிகள் கிழக்கு மாகாண சுற்றுலாப்பணியக அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ரி2.45)

# பெற்றோரின் கண்காணிப்பின்மையே ஒழுக்கச் சீர்கேடுகளை உருவாக்குகிறது

## வடக்கு முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.29

அன்றைய மக்கள் படிப்பறிவில் வளர்ச்சி அடையாத நிலையிலும் தமது பிள்ளைகள் கல்வி அறிவில் உயர்ந்து ஒழுக்க சீலர்களாக விளங்க வேண்டும், உண்மை பேசுபவர்களாக இருக்க வேண்டும் என எண்ணியதாலேயே அன்றைய குழந்தைகள் சிறப்பாக வளர்ந்தனர். இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பொது நூலக மண்டபத்தில் சாந்திகம் "சிறுவர் உளநலம்"நூல் வெளியீட்டு விழா நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

அந்தக் காலத்தில் பிள்ளைகளின் நடவடிக்கைகள் தாய்மாரினால் தொடர்ந்து அவதானிக்கப்பட்டது. ஒரு சிறிய பென்சில் கூடுதலாக அவரின் புத்தகப் பையில் காணப்பட்டால் அது பற்றி விசாரிப்பார்கள் அதனால் பிள்ளைகள் உண்மை பேசுகின்ற பழக்கத்தைச் சிறு வயதிலிருந்தே கற்றுக்கொண்டார்கள்.

மற்றவர்களின் பொருட்கள் மீது ஆசை வைப்பதைத் தவிர்த்துக் கொண்டார்கள். அந்தக் காலத் தாய்மார்களுக்கு உளவளம் உடலியக்கத் திறன்கள், உறவாடல் திறன்கள் பற்றி *அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால்* சமூக திறன்களை விருத்தி செய்யக்கூடிய அறம் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார்கள அதனால் அவர்களின் குழந்தை வளர்ப்பு சிறப்பாக அமைந்திருந்தது. இன்று குடும்பப் பின்னணிகள் வெகுவாக மாறி விட்டன. தாய் தந்தை இருவரும் சேர்ந்து உழைக்கின்ற குடும்ப அமைப்பு உருவாகி விட்டது. மாலையில் உழைத்துச் சோர்வடைந்த நிலையில் வீட்டுக்குத் திரும்பும் பெற்றோருக்கு தமது பிள்ளைகளுடன் பேச நேரம் கிடைப்பதில்லை. இன்றைய குழந்தைகளோ தாயின் அன்புக்காக ஏங்குகின்றார்கள். இதனால் குழந்தைகள் கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி, மடிக்கணினி, இணையத்தளங்களுடனும் கழிக்கின்றார்கள்.

பிறப்பிலிருந்தே இலத்திரனியல் சாதனங்களுடனும் உணர்வற்ற இயந்திரங்களுடனும் பொழுதைக் கழிக்கின்ற குழந்தைகள் இயல்பாகவே ஏனையவர்களுடன் பழகுகின்ற தன்மை, அன்பைப் பரிமாறுகின்ற தன்மை ஆகியவற்றிலிருந்து ஒதுங்கி தனியராக வளரத் தொடங்குகின்றார்கள் இன்று அன்பு கிடைப்பதில்லை. கண்டிப்புக்கும் இடமில்லா*மல் போய்விட்டது.*

ஆசிரியர்கள் காட்டுகின்ற அன்பானது பிள்ளைகளைப் பாடசாலைக்கு இழுத்து வருவதற்கு ஒரு உந்து சக்தியாக விளங்க வேண்டும். எனவே இக் குழந்தைகள் முறையாக வளர்க்கப்பட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக - என்றார். (ற.ரி2.8)

# கசிப்பு உற்பத்தி ஒருவர் கைது

மட்டக்களப்பு.ஜன.29

மட்டக்களப்பு, கருவப்பங்கேணி பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்டு ஒருவரைக் கைது செய்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் கசிப்பு உற்பத்தி செய்யும் வீட்டை முற்றுகையிட்டனர்.

கசிப்பு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 42 லீற்றர் கோடா மற்றும் 13 அரை லீற்றர் கசிப்பு என்பனவற்றை பொலிஸார் மீட்டதுடன் கசிப்பு காய்ச்சுவதற்காக பயன்படுத்திய உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

இந்த முற்றுகையின் போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நபர் கைது செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

# ஆன்மிகம் போதிக்கத் தவறினால் அடுத்த சந்ததி தொலைந்துவிடும்

## சரவணபவன் எம்.பி.தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.29

இன்றில் இருந்து நாம் ஆன்மிகத்தை போதிக்கத் தவறிவிட்டால் அடுத்த சந்ததி எங்கே என்று தேடும் நிலை உருவாகும் என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

யாழ் மிஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*அவர் தெரிவித்ததாவது,*

"அன்று எமது பாடசாலைகளில் ஒழுக்கத்துடன் ஆன்மிகத்தை முதன்மையாக கொண்டு கல்வியை கற்றுத் தந்தார்கள். அதனால் நாம் ஒழுக்கமானவர்களாக வளர்ந்தோம். ஆனால் இன்று நிலை அவ்வாறு இல்லை.

பெரும்பான்மை இனம் எம்மைப் பார்த்து வியந்த காலமும் உண்டு. ஆனால் நிலை அவ்வாறு இல்லை.

பச்சிளம் குழந்தைகளின். விபத்துக்கள், பேருந்தில் நடக்கும் செயல்கள் என்று பல கொடுமைகளை எதிர் நோக்குகின்றோம். இந்த நிலைகள் மாற வேண்டும் என்றால் இவ்வாறு அற நெறிகளை, ஆன்மிகத்தைப் போதிக்கின்ற நிலையங்கள் தேவை. ஒரு சில நிலையங்கள் தான் இப்போதும் தொடர்ச்சியாக செயற்படுகின்றன. எல்லோரும் ஆரம்பிப்பார்கள் ஆனால் அவை தொடர்ச்சியாக நடைபெறாது. பெற்றோர்கள் நீங்கள் தான் உங்களின் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். படிப்புடன் ஒழுக்கத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

உங்கள் பிள்ளைகளுக்கு ஆன்மிகம் தேவை ஆகவே. நீங்கள் பெற்றோர்கள் சேர்ந்து கதையுங்கள். ஒரு குழுவை உருவாக்கி தனியார் வகுப்பு நடைபெறும் இடங்களில் சென்று கதையுங்கள் அப்போது தான் இந்த நிலை மாறும். நாம் கட்டுக் கோப்பாக வாழ்ந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டும் - என்றார்.

நிகழ்வில் சமயப் பெரியார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற.ரி5.ரி)

# புனித யோசவாஸ் ஆலய திருவிழா


பூநகரி.ஜன.29



பூநகரி செம்மண்குன்று புனித யோசவாஸ் ஆலய திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது. இரண்டு நாட்கள் நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று நேற்றுக் காலை திருவிழாத் திருப்பலியை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அடிகள் மற்றும் அருட்தந்தை அருள்தாசன் அடிகள் இணைந்து ஒப்புக் கொடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து, புனிதரின் திருச்சொரூப பவனியும் இடம்பெற்றது. பள்ளிக்குடா, தம்பிராய், பூநகரி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்தும் மக்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரி-2)







யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் வட திசை - குபேர வாசல் கோபுர கும்பாபிஷேகம் நேற்றுக் காலை விமர்சையாக நடைபெற்றது. (ற)



## ஆப்கானிஸ்தான் தாக்குதலில்

# உயிரிழப்பு 115 ஆனது




காபூல், ஜன. 29
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான் அமைப்பால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 115ஆக அதிகரித்தது.

அந்த நாட்டின் அயலுறவுத்துறையின் பழைய அலுவலகத்துக்கு முன்னாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. 40 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் பலர் உயிரிழந்ததை அடுத்து நேற்றுமுன்தினம் வெளியான இரண்டாம் கட்டத்தகவல் உயிரிழப்பு 95 என்று குறிப்பிட்டது. நேற்றைய மூன்றாம் கட்டத்தகவலின்படி சாவு எண்ணிக்கை 115ஆக அதிகரித்தது. உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது.
இந்தத் தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது. இதைப்போன்ற கோழைத்தனமான, காட்டுமிராண்டித்தனமான தீவிரவாதத் தாக்குதல்களை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இந்தக் கொடூரத்துக்குக் காரணமானவர்களும், அவர்களை ஆதரிப்பவர்களும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்" என்று இந்தியா விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## தென்கொரிய தீ விபத்தில் உயிரிழப்பு 41ஆக உயர்வு

சியோல், ஜன. 29
தென்கொரியாவின் மிர்யாங் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 41ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
இதய நோய் சிகிச்சை அறையில் இருந்து பற்றிய தீயானது மருத்துவமனையின் ஏனைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியது. விபத்து ஏற்பட்ட நேரத்தில் அங்கு 200 பேர் வரை இருந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
33 பேர் உயிரிழந்தனர் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை தற்போது 41ஆக அதிகரித்தது. (ம)




## ம்ம்ம்... இலங்கைக்கும் தேவைதான்

பல்வேறு துறைகளில் அசத்தி வரும் 'ரோபோ'க்கள் தற்போது மனிதர்கள் செய்யும் ஊழலைக் கண்டுபிடிக்கவும் பயன்படுத்தப்படவுள்ளன. அத்தகைய 'ரோபோ'வை ஸ்பெய்ன் நிபுணர்கள் தயாரித்துள்ளனர்.
உலகில் பல்வேறுபட்ட துறைகளில் ரோபோக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டன. மனிதர்களை விஞ்சும் திறமை படைத்தவையாக ரோபோக்கள் செயற்பட்டு வருகின்றன. இதனால் வேலை வாய்ப்புக்கள் பலவும் பறிபோயுள்ளன. இந்த நிலையில் மனிதர்களின் ஊழலைக் கண்டுபிடிக்கவும் ரோபோக்கள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
'இலங்கையில் தற்போதுள்ள சிக்கல்களைப் பார்த்தால் நூற்றுக் கணக்கில் இந்த ரோபோக்கள் தேவைப்படும் போலிருக்கே' என்கின்றனர் எமது இணையத்தள்க் குசும்பர்கள் சிலர்.
'வேண்டவே வேண்டாம் ரோபோக்களை இறக்குமதி செய்வதிலும் பிறகு ஊழல் இடம்பெறும்' என்போரும் இருக்கவே செய்கின்றனர். (ம)

## உலகில் மிகவும் வயதான கொரில்லா தனது 60ஆவது வயதில் உயிரிழந்தது

நியூயோர்க். ஜன. 29
அமெரிக்காவில் உள்ள சான் டைகோ மிருகக்காட்சி சாலையில் வசித்துவந்த உலகின் மிக் வயதான கொரில்லா குரங்கு தனது 60ஆவது வயதில் நேற்று முன்தினம் உயிரிழந்தது.
விலா என்று பெயரிடப்பட்ட குறித்த பெண் குரங்கு கடந்த சில நாள்களாக உடல் நலம் சரியில்லாமல் இருந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்தக் குரங்கு உயிரிழந்தது என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது.
விலாவின் மறைவு தங்களுக்கு பேரிழப்பு என்று அந்த மிருகக்காட்சிச் சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ம)






பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் உள்ள 'மாயாங்' எரிமலை வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)

## இளவரசர் வாலித் விடுதலையானார்

சவூதி அரேபியா அரசின் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் கைதான சவூதி இளவரசர் அல்வாலித் பின் தலால் மூன்று மாதங்களுக்கு பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டார். சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் பின் சல்மான், ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். கடந்த நவம்பர் மாதம் 11 மூத்த இளவரசர்கள் உள்ளிட்ட 350 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஏழு நட்சத்திர விடுதிகளில் சிறையிடப்பட்டனர். கைதானவர்களில் சிலர் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வந்தன. முறைகேடான விதத்தில் சம்பாதித்த பணத்தை அரசுக்கு திரும்பக் கொடுக்கவும் அவர்கள் முன்வந்தனர். இந்த



நிலையில் சவூதி அரேபியா நாட்டின் மிகப் பெரிய செல்வந்தராக கருதப்படும் இளவரசர் அல்வாலித் பின் தலால் மூன்று மாதங்களுக்கு பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)


இந்த அரசாங்கம் அத்தியாவசிய மருந்துகளுக்கான விலையை 90% ஆல் குறைத்தது மட்டுமில்லாமல், மருத்துவத்துறைக்கு செய்த சேவைகள் மிகப்பெரிய உதவி.
இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற உதவிகள் கிடைக்க வேண்டுமானால், நாட்டைப் போலவே, ஊரையும் முன்னேற்றும் UNP அரசாங்கத்தை பலப்படுத்துவது எனது பெரும் பொறுப்பாகும்.
சுரேஷ்குமார
வாடிக்கையாளர்
எமது கதை
தொடரும்...
www.unp.lk
එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மறுபரிசீலனை அவசியமானது

ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு கிடைக்கும் வரைக்கும் நாங்கள் அரசின் பங்காளிகளாக இருக்க மாட்டோம். தொடர்ந்தும் எதிர்க்கட்சிக்குள்தான் இருப்போம் என்று தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான சம்பந்தன்.


பரந்தனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்திருந்தார். புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபங்கு, அது வைத்துள்ள கோரிக்கைகள், அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்கள் கொண்டுள்ள நிலைப்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் கம்பந்தனின் வெளிப்படுத்தல் சரியானதே.

வடக்கு– கிழக்கு இணைப்பு, மீண்டும் பெறப்படாத இறுக்கமான பொறிமுறையூடாக அதிகாரப்பகிர்வு, நிதித்துறைச் சுதந்திரம் ஆகியவற்றையே அரசமைப்பின் உருவாக்கத்தின் மட்டில் தனது மூன்று அம்சக்கோரிக்கையாக கூட்டமைப்பு வைத்துள்ளது. இவற்றில் சிறு விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்றும் அது ஆணித்தரமாக எடுத்தியம்பியுள்ளது.

ஆனால் கூட்டமைப்பின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசமைப்பு உருவாக்கப்படுவது என்பது சாத்தியமானதா என்பதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டிய நிலையே தெற்கில் தற்போது உள்ளது. கூட்டமைப்பின் மூன்று அம்சக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு, முன்னாள் அரசதலைவர் மகிந்த மிகப்பெரும் தடையாக இருப்பார். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் வடக்கு– கிழக்கு இணைப்புக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். பிரித்தாளும் நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் இம்மியளவும் இறங்கி வரவில்லை. ஆக பலமுனைப் போராட்டத்தில் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அகப்பட்டுள்ளன. எனினும் அவற்றின் மட்டில் சிறு விட்டுக்கொடுப்பும் இல்லாமல் அரசமைப்பை நிறைவேற்ற, குறைந்தபட்சம் அரசுக்கு மிகப்பெரும் அழுத்தம் கொடுக்க அரசுடன் ஒட்டு இல்லை என்று சம்பந்தன் எடுத்துள்ள முடிவு சாலச்சிறந்தது.

ஆனால் மைத்திரி– ரணில் கூட்டு அரசுக்கு வெளியே இருந்தாலும் எதிர்க்கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு வலுவான எதிர்ப்பை வழங்கவில்லை என்ற உண்மையையும் ஏற்கத்தான் வேண்டியுள்ளது. அ.அமிர்தலிங்கத்தின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பில் இருந்துவரும் சம்பந்தன் பல விடயங்களில் அரசுக்கு எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியுள்ள போதிலும் அந்த எதிர்ப்புக்கள் அரசை ஆட்டங்காணச் செய்யக்கூடிய வகையில் கனதியானவையாக அமையவில்லை. சம்பந்தனின் பழுத்த அரசியல் ஞானம், கூட்டு அரசை வைத்துச் சாதிக்க வேண்டிய கருமங்கள் ஆகியன அவர் காத்துவந்த பொறுமைக்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன. எனினும் மைத்திரி – ரணில் கூட்டு அரசுக்கு கூட்டமைப்பு வழங்கும் ஆதரவுக்கு தமிழ் மக்கள் ஒருசாராரிடம் எதிர்ப்பு உள்ளது என்பது மலையில் ஏற்றிவைத்த தீபம் போன்று வெளிப்படையானதே.

ஆக, அரசின் பங்காளிகளாக இருப்பது அரசுக்கான ஆதரவு என்றும் அதற்கு வெளியில் இருப்பது அரசுக்கு எதிரான நிலைப்பாடு என்றும் பொருள் கொள்ள முடியாதுள்ளது. அரசுக்கு வெளியில், எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து கொண்டு வழங்கப்படும் ஆதரவுக்கும் அரசுக்குள்ளேயே இருந்துகொண்டு வழங்கும் ஆதரவுக்கும் ஒருசில வரையறுக்கப்பட்ட வேறுபாடுகளே உள்ளன. அரசின் பங்காளியாக மாறுவது என்ற விவாதத்துக்கு முன்னால் அரசுக்குதான் வழங்கிவரும் ஆதரவையும் கூட்டமைப்பு மறுபரிசீலனை செய்யவேண்டும். ஏனெனில் தமிழ் மக்கள் கேட்கும் தீர்வுக்கு கூட்டு அரசிடம் சாத்தியமான நகர்வில்லையென்றால் அதற்கு வழங்கும் ஆதரவால் என்ன பயன்?



# வாக்களிப்பிலிருந்து விலகி வாக்காளர் தவறு இழைத்துவிடக்கூடாது

## இலங்கையிலும் பா.ஜ.க. வராமல் பார்த்துக்கொண்டால் சரி!

செ.அன்புராசா அடிகள்

சோமாலிய நாட்டில் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. கடனாக கைமாற்றாக இந்தியாவில் இருந்து 'வோட்டர் இயந்திரத்தை' (Voter machine) வாங்கி கணினி முறையில் இலகுவாக வாக்குப்பதிவு செய்யவும் வாக்குகளை எண்ணவும், அதிக செலவில்லாமல் தேர்தலை நடத்தவும் சோமாலிய நாட்டு அரசு ஏகமனதாக முடிவு செய்தது.

வாக்குப் பதிவு குறிப்பிட்ட தினத்தில் நடைபெற்றது. தேர்தல் முடிவு அறிவிக்க ப்பட்டதும் சாரி சாரியாக மக்கள் மயங்கி விழுந்தார்கள்! ஏனெனில் அனைத்து இடங்களிலும் பாரதிய ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெற்றிருந்தது!

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டு அவசியமானது

தமிழ் அரசுக் கட்சி, ஈபிஆர்எல்எப், ரெலோ, புளொட், (தமிழர் விடுதலைக் கூட்டணியும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது) ஆகிய நான்கு கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தது. இந்தக் கட்சிகள் நான்கும் தத்தமது கொள்கைகளோடு, தமிழர்களின் விடுதலைக்காக வெவ்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கின்றன அது மட்டுமல்லாது இந்தக் கட்சிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக மாறுவதற்கு முன்பு வெவ்வேறு காலகட்டங்களில் தனித்தனியே தேர்தல்களில் போட்டியிட்டன என்பதும் வரலாறு.

இந்தக் கட்சிகள் நான்கும் சேர்ந்து ஒன்றாக இணைந்தது மட்டுமல்லாது, அரசியலில் பங்கேற்பது, தேர்தலில் நிற்பது போன்றவற்றிலும் கூட்டாக இயங்கியமை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, தேசிய, பன்னாட்டு ரீதியில் ஒரு பெரிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக கருதப்பட்டது; இந்தக் கட்சிகள் ஒன்றாய் நின்றதனால், ஒன்றில் ஒன்று தங்கியிருந்ததினால் இதுவரை காலமும் இந்தக் கட்சிகளின் ஆயுள் ஒரு வகையில் உயிரோட்டத்தோடு நீடித்தது எனலாம்.

### உடைவை ஒட்டாது விட்டால் நலன் கிட்டாது!

ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுள் ஒன்றான தமிழ் அரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகளும், தன்னிச்சையான போக்குகளும் ஏனைய மூன்று பங்காளிக் கட்சிகளுக்கு மட்டுமல்லாது ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் அவ்வப்போது அதிருப்தியை ஏற்படுத்தி வந்தது. இதன் காரணமாக கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பதுபோல ஒரு மாற்றணி தேவை என்ற கருத்து பலதரப்பாரிடத்தில் சில ஆண்டுகளாக நிலவி வந்தது.

இந்த நிலை வலுப்பெற்றதன் காரணமாகவும், தமிழ் அரசுக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும் (வேறுவேறு காரணங்களும் இருக்கக்கூடும்!) ஈபிஆர்எல்எவ் அணியின் செயலாளர் நாயகம் சுரேஸ்பிரேமச்சந்திரனும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரக்குமாரும் சேர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஈடான மாற்றணியாக ஒரு கூட்டமைப்பை உருவாக்க எண்ணினார்கள். ஆனால் இவர்களின் கூட்டணி இருபத்தொரு நாள்களே நீடித்தது! இந்த நிலையில் சுரேஸ்பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி. ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சில கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து உதயசூரியன் சின்னத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணியாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது. தமிழ் காங்கிரஸின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரக்குமார் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் கட்சி தமிழ்த் தேசிய பேரவையின் பெயரில் துவிச்சக்கரவண்டிச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

### இருக்கைகளைப் பார்க்க, கொள்கைகளைப் பாருங்கள்!

புளொட் அணியின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் அரசுக் கட்சியுடனான அதிருப்தியில் தேர்தலைக் காரணமாக வைத்துக்கொண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகாமல் 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கொள்கைக்காகவேனும் தேர்தலில் இருந்து விலகி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இருப்போம்' எனத் தமிழரசுக் கட்சியுடன் அதிருப்திப்பட்ட ஒரு சூழலில் கூறியிருக்கின்றார். மக்களின் நலனையும் நீண்டகால அரசியல் பயணத்தையும் முன்வைத்து சிந்திப்பவர்கள் இவ்வாறுதான் சிந்திக்கவேண்டும்! முரண்பாடுகள், சிக்கல்கள் ஏற்படலாம், எனினும் இவ்வாறான நேரங்களில்தான் விவேகமான தீர்மானங்களை மேற்கொண்டு புத்திக்கூர்மையான செயற்பாடுகளைச் செய்ய முன்வரவேண்டும்.

### தமிழ் மக்கள் பேரவையை 'வில்லன்' போன்று பார்க்கவேண்டியதில்லை!

தமிழ் மக்கள் பேரவை தமிழர்களின் அரசியல் நிலைப்பாடுகளில்; கவனம் செலுத்தி வருகின்ற

நிலையில், தேர்தல்களில் நிற்பதில்லை என்றநிலைப்பாட்டுடன்தொடர்ந்துபயணிக்கின்றது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் போக்குகளும், இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் செயற்பாடுகளிலும் திருப்தியளிக்காதநிலையில்மக்களின்பலதரப்பட்டபிரதிநிதிகளையும்உள்வாங்கிஇனப்பிரச்சினைக்கானதீர்வுத்திட்டத்தைத்தெளிவாக முன்வைத்துள்ளார்கள் தமிழ் மக்கள் பேரவையினர். மிக முக்கியமான, காத்திரமானஒருபெரும்செயலைத்செய்துமுடித்திருக்கின்றார்கள் தமிழ் மக்கள் பேரவையினர். தமிழ் மக்கள் பேரவை ஒரு சிந்தனை வட்டம்(thinktank)ஆக இயங்குவது மிகப் பொருத்தமானதும்காலத்தின்தேவையான ஒரு செயற்பாடாகும் எனக் கொள்ளலாம். அவ்வாறாக மக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து சிந்திப்பதுஅரசியல்வாதிகள்தான்தோன்றித்தனமாகசெயற்படாமல்இருக்கவழிவகுப்பதோடு மக்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு நல்லாலோசனைகளை வழங்கவும் முடியும். ஆயினும்தமிழ்மக்கள்பேரவையின் வரவைதமிழ்த்தேசியக்கூட்டமைப்புமுழு விருப்போடுஏற்றதாகத்தகவல்கள்இல்லை.

### முரண்பாடுகளைக் களைய முற்பட்டிருக்கவேண்டும் முதலமைச்சர்!

வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் இன்றைய சூழலில் கட்சிகளைப் பார்க்காமல் ஊழலற்ற, நேர்மையானவர்களைத் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரியும்படி கேட்டிருக்கின்றார். முதலமைச்சருக்கும் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் அங்கம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவுசுமூகமாகஇல்லைஎன்பதுயாவரும் அறிந்த விடயம். நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சராக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும்தான் என்றாலும் அதில்அங்கம்வகிக்கும்தமிழரசுக்கட்சியே முக்கிய வகிபாகம் வகித்தது என்றே சொல்லப்படுகின்றது. அவ்வாறே தமிழ் அரசுக் கட்சிதான்நீதியரசர்சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சராகநிறுத்துவதில்முன்னிலை வகிப்பதாகவைத்துக்கொண்டாலும்அக்காரணத்திற்காகதமிழ்அரசுக்கட்சியின்தாளத்திற்குத்தான் அவர் ஆடவேண்டும் என்ற அவசியம் கிடையாது! அதேவேளை மக்களின் ஆணையை மீறி முதலமைச்சரோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது கூட்டமைப்பைச் சார்ந்த ஏனைய கட்சிகளோ செயற்படவும் கூடாது.

ஆக, 'பூனைக்குமணிகட்டுவதுயார்?'என்ற பிரச்சினைதான்அடிப்படையில்பெரும்பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது. ஆனால் இருசாராரும் பக்கம்பக்கமாக பத்திரிகைகளுக்குப்பதில்எழுதுவதிலும்விளக்கம்அளிப்பதிலும் காலத்தையும் சக்தியையும் செலவழித்துக்கொண்டுஇருக்கின்றார்கள். இவர்களின் 'தண்டவாளப் போக்குகள்' சாதாரண மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணி இருக்கின்றது என்பதனை எவராலும் மறுக்க முடியாது.




### அடிப்படைகளை ஈடுவைக்காது அரசியல் வலுவைப் பயன்படுத்த வேண்டும்!

பிளவுண்டுபோவதால்ஒருபயனும்கிடைக்கப் போவதில்லை என்பதை தமிழ்த் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் பிரிவுகள் மேலும் மேலும் பிரிவினைகளைத்தான் உருவாக்கும். முப்பது ஆண்டுகாலம் மாபெரும் ஆயுதப் போராட்டத்தை நடத்தி அதன் ஊடாகப் பெற்றிருக்க வேண்டிய உரிமைகளை இழந்த நிலையில் மேலும் நாம் கட்சி கட்சியாகப் பிரிந்து நின்றுகொண்டு நாம் விரும்பும் அரசியல் அபிலாசைகளை அடையமுடியாது என்ற யதார்த்தத்தையும்சிந்தித்துப்பார்க்கவேண்டும். எனவே, அடிப்படை அம்சங்களை ஈடு வைக்காதுஅரசியல்வலுவைப்பயன்படுத்தி கூடுதலான அதிகாரப்பகிர்வைப்பெறுவதே இக்காலத்தில்யதார்த்தபூர்வமானதும்புத்திசாலித்தனமானதும் ஆகும்.

### இடைக்கால அறிக்கை குறித்த குழப்பம்

இடைக்கால அறிக்கை குறித்து எதிரும் புதிருமானகருத்தைதமிழ்த்தேசியகூட்டமைப்பும், முதலமைச்சர் தலைமையிலான அல்லது முதலமைச்சர் சார்பான குழுவும் முன்வைத்து வருகின்றார்கள். இவ்வாறு இவர்கள் இரண்டு பட்டுக் கிடக்கையில் எவருடைய கருத்தை ஏற்றுக்கொள்வது என்று தமிழ் மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றார்கள் என்பது மட்டும் அப்பட்டமான உண்மை! இந்நேரத்தில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் வந்து சேர்ந்திருக்கின்றது.

### விசமத்தனமான பரப்புரை!

இதற்கிடையில் 2015இல் அரச தலைவர் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ச2018இல்நடைபெறஇருக்கும்உள்ளூராட்சிசபைகளுக்கானதேர்தலில்பொதுமக்கள் முன்னணி என்ற கட்சியின் பெயரில் தேர்தலில்குதித்துவிசமத்தனமானதேர்தல் பரப்புரையில் இறங்கியுள்ளார். 'நாட்டைத் துண்டாடுகின்றார்கள்! தமிழிழம் அமைத்துக் கொடுக்கின்றார்கள்!' என்றெல்லாம் இப்போது கூறித் திரிகின்றார்.

சிறுபான்மையின மக்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை தவற விட்டுவிட்டு, இப்போது பெரும்பான்மையின மக்களாக விளங்கும் சிங்கள மக்களின் உணர்வுகளை மீண்டும் உசுப்பிவிட்டுஅதில்உச்சப்பலன்அடையமுனைகிறார் மகிந்த.

### வடக்கில் 726 ஆசனங்களுக்கு 6,744 பேர் போட்டி!

வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு 726 உறுப்பினர்களைத் தெரிவதற்கு 6,744 பேர் போட்டியிடுவதாகத் தகவல்கள்தெரிவிக்கின்றன!இவர்கள்19அரசியல் கட்சிகளையும் 19 சுயேட்சைக் குழுக்களின் சார்பிலும் போட்டியிடுகின்றார்கள். பார்க்கின்றபோது 'கின்னஸ்' தேர்தல் சாதனையாகப் பதியப்படுவதற்கான வாய்ப்புக்கள் தென்படுவதாகவே தெரிகின்றது.

### குற்றவாளிகளை நிராகரிக்க வேண்டும்!

நீதியானதும்நியாயமானதுமானதேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பு நீதிமன்றினால் குற்றவாளிகளாக தண்டனைபெற்ற அறுபதுக்கும் மேற்பட்டவர்களை வேட்பாளர்களாக முதன்மைக் கட்சிகள் நிறுத்தியுள்ளன என குற்றம் சாட்டியுள்ளது. குற்றஞ்சாட்டியது மட்டுமல்லாது இவர்களின் பெயர்ப் பட்டியலையும் பொலிஸ்மா அதிபரிடம் கையளித்துள்ளது.

குற்றவாளிகளை மட்டுமல்ல சமூகத்தோடு எவ்வகையிலும் தொடர்புபடாமல், சமூக வாழ்வில் எவ்வித ஈடுபாடும் காட்டாமல், அரசியலில் ஈடுபட்டுக் கிடைக்கிற சலுகைகளைப்பெறும்நோக்கத்தோடுதேர்தல்களில் போட்டியிடும் பணச் செருக்குக் கொண்ட வேட்பாளர்களை மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும். மேலும், மக்கள் மத்தியில் ஒற்றுமையை,ஒன்றிப்பைஉருவாக்காமல் குழப்பங்களையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தும்வேட்பாளர்களைமக்கள்இனம் கண்டு அவர்கள் எக்கட்சியைச் சார்தவர்களாக இருப்பினும் அவர்களை அரசியல் நீரோட்டத்தில்இருந்துஅகற்றுவதுஅரசியல் இன்னுமின்னும் அழுக்கடையாமல் இருக்கவழிசெய்யும்!

### கிடைத்த பெருவெற்றிகள் இனியும் கிடைக்குமா!

கூடியிருந்த அல்லது கூடியிருந்திருக்க வேண்டிய கட்சிகள் பிளவுபட்டு நிற்கும் ஒரு சூழலிலும் எந்தக்கட்சியை ஆதரிப்பது என்பதும்,எந்தநபருக்குவாக்களிப்பதுஎன்பதும் வடகிழக்குத்தமிழ்மக்களுக்குகுழப்பத்தை ஏற்படுத்தப்போவது உண்மை. இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச்சேர்ந்திருந்தால்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர்கடந்தகாலங்களில்பெற்ற பெரும் வெற்றிகளைப்போல் நடைபெறப் போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அமையாது இருப்பதற்கான ஏதுநிலைகள் உருவாகியிருக்கும். ஏனெனில் வட்டாரத் தேர்தல் முறைமை என்பதால் இந்த நிலை ஏற்பட அதிகவாய்ப்புண்டு. ஆனால்தமிழ்க் தேசியக் கூட்டமைப்பைச் சாராத ஏனைய தமிழ்க்கட்சிகள்வெவ்வேறுகூட்டுக்களாகப் பிரிந்து நிற்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஇலகுவாகமுன்னிலைஅடையவும் வாய்ப்புண்டு. எதிர்பார்க்கப்படும் பெரும் வெற்றி கிடைக்காதுபோனால்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மை ஒருதடவை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்க, சீர் செய்ய இத் தேர்தல் வழிசெய்யும் என நம்பலாம். மாறாக மிகப்பெரும் வெற்றி பெற்றால் இத் தேர்தலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண, நாடாளுமன்ற இருக்கைகளுக்கான அத்திபாரமாகிவிடும்.

### அரசியலை விரும்பாதிருந்தால் எம்மை விரும்பாதவர்கள் ஆள்வார்கள்!

இத்தகையநிலையில்,வாக்களிக்காதுஇருந்துவிடுவோம்' எனப் பலர் நினைக்கலாம். அப்படிச்செய்வதால்தகுதியற்றவர்கள்தலைவர்களாகஆகுவதற்குஅதுவழிசமைத்துவிடும். ஆதலால் மக்கள் தங்கள் வாக்குரிமையைச் சரியாகப் பயன்புடுத்தி தமது பிரதிநிதிகளைத்தெரிந்தெடுப்பதுமிகமிகஅவசியமானது ஆகும். இதனைத்தான் அறிஞர் பிளேற்றோ கூறுகையில், 'அரசியலில் பங்கேற்க நாம் விரும்பாது இருந்துவிட்டால் நம்மை விரும்பாதவர்கள் எம்மை ஆள வேண்டிய நிலை ஆகிவிடும்!' என்கிறார். ஆகவே, வாக்களிப்பது ஒன்றே வாக்காளர்களின் தெரிவாகும் என்பதை மக்கள் கட்டாயமாகமனதில்இருத்திக்கொள்ளவேண்டும்.

### எவ்வாறு தெரிவு செய்வது!

இனிமேலும்பகைமைகளையும்குரோதங்களையும்ஏற்படுத்தநினைப்பவர்களையும், கவிஞர்மாலினியின்'நிழலும்நிஜமும்'என்ற கவிதை நூலில் கூறுவதுபோல, 'பாலை வனத்தில் பயிரிட்டு விளச்சல் அள்ளித் தருவோம், கடலே இல்லாத ஊருக்குக் கப்பல் கட்டித்தருவோம்'எனச்சாத்தியமற்ற, சம்பந்தமே இல்லாத பொய்களையும், புரளிகளையும், புழுகுகளையும் உறுதிமொழிகளாகத் தேர்தல்பரப்புரைகளில்தெரிவிப்பவர்களையும்அரசியலில்இருந்து அப்புறப்படுத்துவது மிகமிக அவசரமானதும் அவசியமானதும் ஆகும். வாடிக்கையாளர்களையும், வேடிக்கையானவர்களையும் விட்டுவிட்டு, தகுதியானோரை இனங்கண்டு வாக்காளர் சிட்டையில் புள்ளடி இடுவதுதான் 'தகுதியும் நீதியுமானது!' இதனை, வாக்காளர்பெருமக்கள் செய்வார்களா? புள்ளடி இடும் வரைதான் மக்கள் 'பெருமக்கள்!', இட்டபின் 'பெருமன்னர்கள்' 'பெருமக்களைக் கவனித்துக்கொண்டால் நலன் பயக்கும். நன்மை கிடைக்கும் அடுத்தடுத்த தேர்தல்களிலும்!

## ஆசிரியருக்கான கடிதம்

# தம்புள்ள சம்பவம் குறித்து அலட்சியம் வேண்டாமே!

"உடம்பினுள் வளரும் புதுமையான புழு" எனுந் தலைப்பில் கடந்த வருடம் செப்டெம்பர் இருபத்தெட்டில் உதயன் ஒருசெய்தியை முதன்மைப்படுத்தியிருந்தான். எத்தனை பேர் இது தொடர்பாக அக்கறை கொண்டார்களோ யாமறியோம். தம்புள்ள பிரதேசத்தில் இவ்வகையான புழுக்கள் மனித உடலில் வளர்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள வைத்தியர்கள் உண்மையிலேயே மிகவும் நுண்மதி கூடிய வர்களே. அதற்கு முதலில் பாராட்டுக்கள்.

தம்புள்ள எனும் பிரதேசம் யாழ் மண்ணுடன் அதிக தொடர்புகளை அண்மைக்காலமாகப் பெற்று வருகிறது. விவசாயம், வியாபாரம், உணவு, நீர், சகவாழ்வு, சகோதரத்துவம், சமய, கலை, கலாசாரம், பராமரிப்பு எனப் பல்வேறு ஈடுபாட்டை எம்மால் அவதானிக்க முடிகிறது. எந்தவொருமாற்றமும்அது சிறிதோ பெரிதோ நொடிப்பொழுதில்வட்டி குட்டிமுட்டைகளோடுமின்னல் வேகத்தில் மிக அழகாகவும் கனதியோடும் எம்மை வந்து சேர்ந்தே விடும். காரணம் யாழ்ப்பாணம், சந்தை வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறக்கிறது. இந்நிலையானது எமது வாழ்வுக்குப் பேறு மட்டுமல்ல, ஊறும் விளைவிக்க வல்லது. எனவே தரப்போகும் செய்தி எம்மை நாம் எச்சரிக்கையாக இருக்குமாறு உணர்த்துவதற்கேயாம். இலங்கைக்கு தற்போதைய முதல் தேவை எதிலும் விழிப்புணர்வேயாம்.

இரு சிறுவர்களின் உடலிலே இவ்வகையான புதுவிதப்புழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ள நிலையில் மேலும் பலருக்கு இந்தப் புழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு உடனடி அறுவைச் சிகிச்சைகள் மூலம் நீக்கப்பட்டுள்ளன.

வெள்ளை நிறம். மூன்றிலிருந்து ஐந்து அங்குலம் வரை நீளம். அதிக முட்டைகள் துரித இனப் பெருக்கம். உடலாலும், உணவாலும் உடலுக்குள் வெகு சீக்கிரத்தில் பரவும் தன்மையது. எனவே யாழ்ப்பாணம் எல்லோரையும் நல்ல நோக்கோடு அரவணைப்பதனால் ஆபத்துக்களும் அதிகமேயுண்டு

இருபத்து நான்கு மணித்தியாலமும் படிப்பிலேயே அதீத கவனம் எம்பால் இருப்பதனால் சுகாதார விடயத்திலும் உணவு விடயத்திலும் நாகரீக மோகம் காரணமாக நாம் பலவீனமாகவே பயணித்து வருகின்றோம். குறிப்பாக காலையில் வீட்டுக்கு வெளியிலிருந்து பெறப்படும் எந்த உணவாகினும் அது சுத்தத்திற்கும், சுகத்திற்கும் உத்தரவாதமளிப்பதாக இல்லாதிருப்பதனால் பெரும்பாலானவர்களுக்கு இப்பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

இரண்டாவது, கழிப்பறைகள், கிணற்றடி, பூனை, பறவைகள், கோழிப்பண்ணை புறா குருவி மிருகக்கழிவுகள், பாதணிகள், வாகன உட்பிரவேசம், கைகால்களின் தொடுநிலைகள் யாவுமே அசுத்தத்தின் இருப்பிடங்களாகவே திகழ்கின்றன. இந்த நிலையில் புதுமையான புழுக்கள் தம்புள்ளையில் மட்டுமல்ல, எங்குமே பரவக்கூடிய வாய்ப்பு அதிகமுண்டு. கரங்கள் துப்பரவாக இல்லாவிட்டால் எவருக்குமே ஆபத்துத்தான்! தம்புள்ள எம்பிள்ளைகளும் உணர வேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா.

# அவமதிப்பு



ஒரு எறும்பு தன்னுடைய சுறுசுறுப்பான நடையை நினைத்து நினைத்து எப்போதும்கர்வத்துடன்சுற்றிவந்தது. ஒருமுறைஅது உணவைத்தேடிச்செல்லும் வழியில் ஒரு புழு நகர முடியாமல் சுருண்டு கிடப்பதைக் கண்டது. அந்தப் புழுவைப் பார்த்து எறும்பு "இதோ பார் புழுவே? நான் எவ்வளவு சுறுசுறுப்பாக நடக்கிறேன். நீ இப்படி நிலத்தில் ஓரிடத்தில் சுருண்டு கிடக்கிறாயே ?" என்று கேலி செய்தது. சில நாள்கள் சென்றன. அதேவழியாகத் திரும்பவும் அந்த எறும்பு வந்தது. அப்போது அந்தப் புழுவைப் பார்த்து மீண்டும் கேலி செய்ய வேண்டும் போல எறும்புக்குத் தோன்றவே அதனை அங்கும் இங்கும் தேடியது. ஆனால் அந்தப் புழுவை அவ்விடத்தில் காணவில்லை.

ஆனால் அவ்விடத்தில் ஓர் அழகிய பட்டாம்பூச்சி அங்கும் இங்கும் படபடவென்று சிறகை அடித்துக் கொண்டுபறந்துகொண்டிருந்தது. புழுவைக்காணாது அங்குமிங்கும்தேடிவிழித்தஎறும்பைஅந்தப் பட்டாம்பூச்சியைக் கவனித்தது. எறும்பு, புழு உருவில் இருந்த தன்னைத்தான் தேடுகிறது என்பதைப் புரிந்துகொண்ட பட்டாம்பூச்சி "எறும்பே நீ யாரைத் தேடுகிறாய் அந்தப் புழுவைத்தானே?" எனக் கேட்டது.

"ஆமாம்நான்சில நாள்கள்முன் இவ்வழியால்செல்லும்போதுஅந்த அற்பப்புழுவைப்பார்த்தேன். அது அசைய முடியாமல் கிடந்தது. ஆனால் இப்போது அதனைக் காணவில்லை. அதனால் இவ்வளவு விரைவில் என்னைப் போல் ஊர்ந்து செல்லவும் முடியாது" என்றது எறும்பு. அப்போது பட்டாம்பூச்சி எறும்பே நீ யாரைத் தேடுகிறாயோ அது நான்தான். நீ எப்போதும் தரையில் ஊர்ந்து கொண்டிருக்கிறாய். நானோ ஒரு சமயம் புழுவாக சுருண்டு கிடந்தாலும் இப்போது முழு வளர்ச்சி பெற்று அழகிய வண்ணப்பட்டாம்பூச்சியாக எங்கும் பறந்து திரிகிறேன். எல்லாம் என் நேரம்தான்" என்று சொல்லிவிட்டு பறந்துபோனது.

**இன்று நாம் ஒருவரை அவமதித்தால் நாளை அவர் மூலமே நாம் அவமதிக்கப்படுவோம்**

# பள்ளிக்கூடம் போவோமா?




விடுமுறையில்வீட்டுச்சூழலில்இருந்தகுழந்தைக்குகுறிப்பாகதரம்1,2,3படிக்கும்பிள்ளைகளுக்கு பாடசாலை ஆரம்பித்ததும் அங்கு செல்வ தென்பது கசப்பான ஒரு விடயமாகத் தோன்றும்.

பெற்றோரைவிட்டுப்பிரிந்துபுது இடத்தில்சில மணிநேரங்களுக்க இருப்பதென் பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. பாடசா லையைப் பற்றி நாம்தான் நல்ல விதமாகக்கூறிபிள்ளையைஅங்குஅனுப்பி வைக்கவேண்டும். "நீவிரும்பும்விடயமெல்லாம், விளையாட்டுக்களெல்லாம் அங்கேயும் இருக்கு. அங்கே இருப்பவர்கள் எல்லாம் உன்னுடைய நண்பர்களே" என்ற ரீதியில் நேர்மறையானதாகப் பேசவேண்டும்.

அம்மா சொல்லும் எந்தவொரு விடயமும் உண்மையாகத்தான் இருக்கும் என்று குழந்தைகள் நினைப்பார்கள். அத்துடன் ஏன் பள்ளிக்குச் செல்ல வேண்டும்போன்றபிள்ளைகளின்வினாக்களுக்குஅவர்களுக்குப்புரியும் வகையில்தெளிவானபதில்கொடுக்கவேண்டும். பாடசாலைசெல்வதற்கு முதல்நாள் இரவுபிள்ளையைநேரத்தோடுதூங்கவைப்பதுடன்மறுநாள் காலை சரியான நேரத்துக்கு எழுப்பி குழந்தையைப் பள்ளிக்குத் தயார் செய்வதைத்தினசரிவேலையாகப்பெற்றோர்கொள்ளவேண்டும். தெய்வ நம்பிக்கை கொண்டவர்களாயின் குழந்தைக்கும் கடவுள் வழிபாடு போன்ற விடயங்களைச் சொல்லிக் கொடுக்கலாம்.

இது அவர்களது தன்னம்பிக்கையை வளர்க்க உதவும்.

குழந்தையைப்பள்ளிக்குஅனுப்பும்போது'முத்தம்'கொடுப்பதுஅணைத்துக் கொள்வது'டாட்டா'காட்டுவதுபோன்றமுறைகளில்அவர்களைவழியனுப்பலாம். ஆனால் 'குட்பை' சொன்னபின் பிள்ளையுடனேயே நின்று கொண்டிராமல் பள்ளியை விட்டு வெளியில் வந்து விடவேண்டும். அப்போதுதான் குழந்தை புதுசூழ்நிலையை சகஜமாக எடுத்துக் கொள்ளும்.





வித்தியாசம் கண்டுபிடிப்போம்


## எழுத்துப் பிழைகள் இன்றி எழுதுவோம்

1. கிளைகளில் பொன்னி........ (ர,ற)மான ப....... (ழ,ல)ங்கள் காணப்பட்டன.
2. ம......(ற,ர)ங்கொத்தி தனது கூரிய சொ.....(ன்,ண்)டால் கொத்தியது.
3. முய.....(ர்,ற்)சி எடுத்தாலும் பயன் கிடைக்காது என இ....(லை,ளை)ஞன் கூறினான்.
4. யா....(ணை, னை)கள் காட்டில் வா....(ளு,ழு)ம்.
5. ப.....(ர,ற) வை பறந்து செ.....(ன்,ண்)றது.




## வெற்றிடத்தை நிரப்புவோம்

1. பசுவின் ஒத்தசொல்
2. பழம் என்பதன் எதிர்ச்சொல்
3. தாயின் எதிர்பாற்சொல்
4. காற்று வீசியது. இதன் பயனிலைச் சொல்
5. ஆடு கத்தும். நாய்.....?
6. வந்தது என்பதன் நிகழ்காலம்
7. துள்ளி, துள்ளி என்பதைச் சேர்த்தெழுதினால்...



## வழிகாட்டுவோம்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

20.01.2018 அன்று விவசாய வீதி
வடக்குப்புன்னாலைக் கட்டுவலில் நடைபெற்ற
**ராஜா பிளாசா மாதிரிக் கிராமம்**
முப்பது வீட்டுத்திட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வின் பொழுது
வீட்டுத்திட்ட பயனாளிகளினால்

## திரு.இ.குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலங்கருதாச் சமூகசேவையினை கௌரவித்து
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
**உயர்திரு. நா.வேதநாயகன்** அவர்கள் முன்னிலையில்

## ஈகைச் செம்மல்

என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை
நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,

**SIVAKANESAN TEXTILES**
41, Grand Bazar, Jaffna.

(cs13276) (13.17)

ஹரி குழும நிறுவனங்களின்
அதிநவீன யாழ்நகர் அலுவலகத் தொகுதி
பிரமாண்ட திறப்பு விழா

HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD
HARI REAL ESTATE - A TRADITION OF TRUST



காலம் :- 29.01.2018
நேரம் :- பிற்பகல் 04.30 -05.00 மணி
முகவரி :- இல. 10A, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்
( வேம்படி சந்திக்கு அண்மையில்)

அனைத்து இனிய நல் உள்ளங்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்

Hari Engineering - "The Symbol of Northern Construction"
Hari Real Estate - "A Tradition of Trust"

(CS/31314)(11.17)

# உலகப் பெருமஞ்சம்

## அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

தைப்பூச மஞ்சத்திருவிழா சிறப்புப் பொங்கல்
பால்குடப் பவனி
31.01.2018 புதன்கிழமை



- காலை: 4.00 மணிக்கு பூசை ஆரம்பம். 5 மணிக்கு (1008) ஆயிரத்து எட்டு பால் குடப்பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்பர் வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பம் காலை 8.00 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு சங்காபிஷேகமும் பால்குட அபிஷேகமும் இடம்பெறும்.
- பால்,குடம் என்பன ஆலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் வீட்டிலிருந்து எந்தப் பொருள்களையும் கொண்டு வரத்தேவையில்லை.
- முற்பகல் 9.00 மணிக்கு 1008 பானைப் பொங்கல் ஆரம்பம் நண்பகல் 12 மணிக்கு நிறைவு. பொங்கல் பொருள்கள் அனைத்தும் தேவையானவர்கள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- நண்பகல் விசேட பூஜை வழிபாடுகளும் பிற்பகல் 1.30 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதி-வலம் வருவார், பாரம்பரிய கலை நிகழ்வு களும் இடம்பெறும்.
- அடியவர்கள் அனைவரும் பால்குடம் எடுக்கவும் பொங்கிப் படையல் செய்யவும் உலகப்பெருமஞ்ச வடம் தொட்டிழுக்கவும் வாரீர்.

**குறிப்பு:**
யாத்திரிகர்களுக்கான அனைத்து
ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

# அண்ணா தொழிலகம்

அண்ணா நிறுவனத்தின் புதியதோர் உற்பத்தி அண்ணா நூடில்ஸ்

உடனடித் தயாரிப்பு உண்ணச் சுவையான உணவு அண்ணா உற்பத்தி விற்பனை நிலையங்கள் எல்லா இடமும் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா மல்லிக் கோப்பி உலகத் தரம் வாய்ந்த பொதிகளில் உங்கள் வசதிக்கேற்ப எமது விற்பனை முகவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

துரை வீதி,
இணுவில்.
021 224 1565

**ANNA INTERNATIONAL (PVT) LTD.**
214 /5,Messenger Street, Colombo - 12.
+ 941 124 36063

# மகுடம் புத்தக நிலையம்

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் இந்தியப் புத்தகங்கள். Pass paper,அன்பளிப்புப் பொருள்கள் யாவும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெறுக்கொள்ளலாம்.

784, 786 கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே. 021 568 5276

(C 31857)(04.17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பிகை சண்முகரத்தினம்



காரைநகர், புதுறோட், சிவன் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் தங்கோடை, வவுனியா, தோணிக்கல் லக்ஸபானா வீதியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை சண்முகரத்தினம் நேற்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மா, சண்முகநாதன் மற்றும் சுவாமிநாதன் (Doctor காரைநகர்), சோதிநாதன் பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் கமலாதேவி, சறோஜினிதேவி, சிவானந்த ராஜா (இலங்கை மின்சாரசபை), மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கலைச்செல்வி (லண்டன்), சிறிதரன் (லண்டன்) ஆகியோரின் தாயும் சுப்பிரமணியம் (லண்டன்), நிறோஜினி (லண்டன்), பத்மராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கேதியன், விகிர்தன், டேனுகா, தக்சிகா, சந்தோஸ், கபிநாத், டிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**024 222 3981, 079 854 92440,**
**077 982 5479 - சிறிரஞ்சினி**

**தகவல்: குடும்பத்தினர்.**

(C31517/15/17)

## இராமசாமி மகேஸ்வரன்
### (மானா அண்ணர்)

(முன்னாள் கமவிதானையார் 4 ஆம் வாய்க்கால்)



**தோற்றம் 28.03.1955 — மறைவு 25.01.2018**

யாழ்.நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் இராமசாமி கமம் 4 ஆம் வாய்க்கால் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது சுவிற்சர்லாந்தினை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இராமசாமி மகேஸ்வரன் 25.01.2018 சுவிற்சர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - கனகம்மா தம்பதிகளின் மகனும் நந்தினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருமதி தேவி நாகராசா, விமலமூர்த்தி(கரைச்சி ப.நோ.கூ.ச முன்னாள் ஊழியர்), இந்திரசித்து(ரெய்லர்), தெய்வேந்திரன்(தொழில் நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத்திணைக்களம் - வவுனியா) மற்றும் பாலச்சந்திரன்(ரேடியோ மாமா - ஜெயந்திநகர் கிளிநொச்சி), திருமதி பராசக்தி சேகர்(ஆஸ்திரேலியா), திருமதி ரேவதி சிறிஸ்கந்தராசா, நந்தகுமார்(கல்வியியற் கல்லூரி - கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நந்திகேஸ்வரன், கேதாகரன், தனுசன் ஆகியோரின் தந்தையும் சுபாஜினி, வினுஜா ஆகியோரின் மாமனும் ஆதிஷின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமசாமி கமம்,**
**4 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி.**

**தகவல்: நந்தகுமார், சகோதரன்**

(CS 133481 (14)

## கந்தையா யோகராஜா

**(ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர், குடிவரவு, குடியகல்வு திணைக்களம்)**



மனோவாசா, பலாலி வீதி, உரும்பிராய் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா யோகராஜா நேற்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, ஜெகராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்புமைத்துனரும் திருமதி ரஞ்சிதமணி சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், வயாவிளான் மத்திய கல்லூரி), திருமதி திருமணி பஞ்சலிங்கம் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைகுந்தன் தேவகி (லண்டன்), முகுந்தன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பேரனும் அனனியா (லண்டன்) அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: திருமதி சோமசுந்தரம்,**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர், வயாவிளான் மத்திய கல்லூரி)**

**077 3725 817**

(AJA 9130/ 8/17)

## 31 ஆம் நாள் நினைவு அழைப்பு



கடந்த 28.12.2017 விண்ணுலகை அடைந்த

### அமரர் வல்லி சபாபதி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினம் இன்று (29.01.2018) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியம் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**

(CS/13388(11/17)

**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அன்னைமடியில் 09.02.1963**

**ஆண்டவன் அடியில் 30.12.2017**

**அமரர்**


### ரஞ்சனாதேவி பேரின்பநாதன்

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ அம்மா
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை அம்மா நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள் அம்மா
அவனியில் எம்மை வாழ வைக்கும் ஆசானும் நீங்கள் அம்மா
நிமிடம் தோறும் நிதானம் தவறுகிறோம் நின் திருமுகம்
காணாமல் ஆறவில்லை எம் துயரம் ஆறுதல் கூற நீருமில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பிரானை
என்றும் தொழுவோம்.

**இல.3, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**உங்கள் ஆசையுள்ள குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## கணபதி செல்லத்துரை

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி செல்லத்துரை நேற்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரமூர்த்தி காலஞ்சென்ற சிவசம்பு, வீரசிங்கம், செல்வலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவமனோகரி (தவம்), பவானா (வவா), ரஜனி (பாப்பா), விஜயகுமார் (லண்டன்), ராசகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை, தெல்லிப்பழை.**
**076 612 8959**

**தகவல்: குடும்பத்தினர்.**

(AJA 9132/15/17)

## தங்குமிடம் வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழக
மாணவர்களுக்கான குறைந்த வாடகையில்
இல.531 பலாலி வீதி திருநெல்வேலியில்
(UNICARE DENTAL CLINIC
NEXT DOOR) உள்ளது.

**நேரில் வரவும் 27.01.2018 - 30.01.2018 வரையும்**

(CS13263 (12-17)

**தொடர்புக்கு :- 077 7769 260**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம் 11.06.1953**

**மறைவு 20.01.2011**

**அமரர்**

### கதிரவேலு குணசேகரம்

உயிருக்கு உயிராக இருந்து
எமைக் காத்த எமது அப்பாவே
ஏழு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்**


உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com,

021 493 1111



ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்




021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# தை மாத ராசி பலன்

## மகரம்

தோல்விகளை வெற்றியின் படிகளாக கருதி எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயல்படும் மன உறுதி கொண்ட மகர ராசிக்காரர்களே இந்த மாதம் பணவரத்துக் கூடும். வாக்குவன்மையால் இலாபம் உண்டாகும். ராசியில் கேது சஞ்சாரம் செய்வதால் வீண் பயணங்களும் அலைச்சலும் உண்டாகும். இடமாற்றம் ஏற்படலாம். கெட்ட கனவுகள் தோன்றும். உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் வந்து நீங்கும். நேரம் தவறி உண்பதைத் தவிர்ப்பது நல்லது.

தொழில், வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். வரவேண்டிய பணம் தாமதமாக வரும். சரக்குகள் வருவதும் புதிய 'ஆர்டர்கள்' கிடைப்பதும் எதிர்பார்த்ததை விடக் குறைவாக இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்களும் ஏற்படும். கவனமாக இருப்பது அவசியம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கடுமையான வேலை இருக்கும். உத்தியோகம் காரணமாக வெளியில் தங்க நேரிடும். அலுவலகத்தில் அனுசரித்துச் செல்வது நல்லது.

கணவன், மனைவிக்கிடையே திடீர் பூசல்கள் ஏற்பட்டுச் சரியாகும். குடும்பச் செலவுகள் கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்களிடம் பேசும்போது நிதானமாகப் பேசுவது நன்மை தரும். ஆயுதங்களைப் பயன்படுத்தும் போது மிகவும் எச்சரிக்கை தேவை.

**பெண்களுக்கு:** வீண் அலைச்சலும் பயணங்களும் ஏற்படலாம். நேரம் தவறி உண்பதைத் தவிர்ப்பது நல்லது. சாமர்த்தியமான பேச்சு இலாபம் தரும்.

**அரசியல்வாதிகளுக்கு:** தொகுதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள். இதனால் தொகுதி மக்களிடம் நற்பெயர் கிட்டும்.

**கலைத்துறையினருக்கு:** வேலைப்பளு அதிகமாக இருக்கும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தூக்க மில்லாமல் வேலை செய்ய வேண்டி வரும்.

**மாணவர்களுக்கு:** கவனம் சிதற விடாமல் பாடங்களைப் படிப்பது நல்லது. விளையாட்டுகளின் போது கவனம் தேவை.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் ஆஞ்சநேயரை வழிபடுவது கஷ்டங்களை போக்கும். மனதில் தைரியம் உண்டாகும்.

# ஆண்களின் சக்தி பெண்கள்

புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி விரதம் என்பது பெண்களுக்கான விரதம் என்றே அனைவரும் சொல்வார்கள். பெண் தெய்வங்களை வழிபடுவதால், அவை பெண்களுக்கான விரதமாக மாறிவிடாது. ஆண்களும் அந்த விரதத்தை கடைப்பிடிக்கலாம். ஏனெனில், எல்லா சக்திகளும் ஆண் தெய்வங்களின் பெண் சக்தியாகவே கருதப்படுகின்றன.

பிராஹ்மணி - பிரம்மா
மகேஸ்வரி - சிவன்
கவுமாரி - குமரன்
வைஷ்ணவி - விஷ்ணு
வராஹி - ஹரி (வராக அவதாரம்)
நரசிம்மி - நரசிம்மர்
இந்திராணி - இந்திரன்.



## நாளை

## 30.01.2018

செவ்வாய்க்கிழமை

**தை - 17**

திதி: சதுர்த்தசி மு.இ. 10.21
நட்சத்திரம்: புநர்பூசம் மு.இ. 08.14 வரை
சுபநேரம்: 11.06–12.36 வரை
ராகுகாலம்: 03.36–05.06 வரை

குழந்தையில்லாத் தம்பதியர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி
தினமும் மாலை 5.00 மணிக்கு
CAPTAIN TV
காணத்தவறாதீர்கள்




எமது சுன்னாகம் கிளை புதிய இடத்திற்கு மாறியுள்ளது

சுன்னாகம் நகரில் தொடர்ச்சியான வெற்றியிலும் அபிவிருத்தியிலும் அக்கறை செலுத்தும் LOLC பினான்ஸ் இப் பிரேதேசத்தைச் சுபீட்சத்தின் சிகரத்திற்குக் கொண்டு செல்வதற்காக தனது கிளையை இல. 131 ஏ, சேர் பொன். இராமநாதன் வீதி, சுன்னாகம் என்ற முகவரியிலுள்ள கட்டடத்திற்கு மாற்றியுள்ளது. இன்றே எம்மிடம் வாருங்கள். குத்தகை, நிலையான வைப்பு, சேமிப்பு என்பன உள்ளிட்ட எமது தரமுயர்ந்த நிதிச் சேவைகளின் நன்மைகளை அனுபவியுங்கள்.

LOLC FINANCE
(An LOLC Group Company)

இல. 131 ஏ,
சேர் பொன். இராமநாதன் வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி : 021-5880860
தொலைநகல் : 021-2240868

www.lolcfinance.com 2001 டிசெம்பர் 13இல் கூட்டிணைக்கப்பட்ட எல் ஓ எல் சி பினான்ஸ் பி எல் சி 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டு, ICRA லங்கா லிமிட்டட்டின் [SL] A (நிலையான) தரப்படுத்தலையும் பெற்ற நிதி நிறுவனமாகும்.



## கொலம்பியாவில் குண்டுவெடிப்பு

# 5 பேர் துயரச் சாவு 45 பேருக்கு காயம்

போகோடா, ஜன. 29
கொலம்பியாவின் கடலோர நகரமான பார்ரன்குய்ல்லாவில் உள்ள பொலிஸ் நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 5 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களைத் தவிர 42 பேர் காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.
அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## அதிபராகத் தொடர்கிறார் மிலோஸ்



பராக், ஜன. 29
ஐரோப்பிய நாடான செக் குடியரசில் நேற்றுமுன்தினம் புதிய அதிபருக்கான தேர்தல் நடைபெற்ற நிலையில், தற்போதைய அதிபர் மிலோஸ் தேர்தலில் வெற்றி பெற்றார். ப்திவான 66 சதவீத வாக்குகளில் 52 வீதமான வாக்குகள் மிலேஸ்க்குப் பதிவான. மிலோஸை எதிர்த்து போட்டியிட்ட த்ராஹோஸ் போதிய அரசியல் அனுபவம் இல்லாதவர் என்பதால் எதிர்ப்பார்த்த வாக்குகளைப் பெறமுடியாமல் போனதாக அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ம)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 08 . 1944

மறைவு 08 . 02 . 2017

### அமரர் கந்தன் கணபதி

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மத்தி,
குமரநகர். குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(New V.M.K ஜுவல்லறி V.M.K.மில்ஸ் உரிமையாளர்)
இல. 15, நவீன சந்தை, கண்டி வீதி, சாவகச்சேரி.



தோற்றம் 04.05.1953 மறைவு 26.01.2018

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை புலேந்திரன் 26.01.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.M. கணபதிப்பிள்ளை - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் நிர்மலராணியின் அன்புக் கணவரும் மாதங்கி, பிரசாந், கோகுலராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோலேந்திரா, சஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வினின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் ஜெயலட்சுமி, சீதாலட்சுமி, ராதாலட்சுமி காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் யோகேஸ்வரன், தினகரன், கால்ஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தர்மேந்திரன், யோகதாசன், வசந்தகுமார், திகழ்மதி, ஆகியோரினதும் புஸ்பராணி, பிரபாநந்தன், சுவர்ணராணி, நித்தியாநந்தன், காலஞ்சென்ற தயானந்தன் ஆகியோரினதும் அன்பு மைத்துனரும் சற்குணநாதன், சாந்தா, சிறிக்குமரன் ஆகியோரின் அன்புச் சகலனும் அகல்யா.கௌசல்யா, லாவண்யா, மீரா, பார்த்தீபன், கல்பனா, ஆதித்தன், மேனகா, ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா, அபராஜிதன், பிரசோதிகா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டி வீதி,
சாவகச்சேரி. (IN 5678) (14.17) தகவல்
குடும்பத்தினர்.

077 105 9399 (மாதங்கி - மகள்)/077 210 7430 (பிரசாந் -மகன் )
077 314 4756 (கோகுலராஜன் - மகன்)

## அழகான வரிகள்

1. அறிமுகம் இல்லாதவர்களின் பார்வையில் நாம் எல்லோரும் சாதாரண மனிதர்கள்
2. பொறாமைக்காரரின் பார்வையில்.. நாம் அனைவரும் அகந்தையாளர்கள்
3. புரிந்து கொண்டோரின் பார்வையில்.. நாம் அற்புதமானவர்கள்
4. நேசிப்போரின் பார்வையில்.. நாம் தனிச்சிறப்பானவர்கள்
5. காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் பார்வையில் நாம் கெட்டவர்கள்

எம்மைப் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு தனியான பார்வை உண்டு.

ஆதலால் பிறரிடம் உங்கள் பிம்பத்தை அழகாக்கிக்காட்ட சிரமப்படாதீர்கள்

இறைவனின் திருப்தியே உங்களுக்குப் போதுமானது.

மனிதர்களை திருப்திப்படுத்துதல் என்பது எட்ட முடியாத இலக்கு...

இறைவனை திருப்திப்படுத்துதல் என்பது அடையக் கூடிய இலக்கு.

எட்ட முடியாததை விட்டு விடுங்கள் அடைய வேண்டியதை விட்டு விடாதீர்கள்

இறப்பதற்குள் எப்படியும் சம்பாதித்து விட வேண்டியவை

உடலைச் சுமக்க நாலுபேர்

உள்ளத்தில் சுமக்க ஒருவரையாவது



## கதாநாயகி முக்கியம்பெறும் கதைகளிலேயே நடிப்பேன்

### தமன்னா தெரிவிப்பு

"கதாநாயகி முக்கியத்துவம் பெறும் நல்ல கதையம்சம் உள்ள படங்களில் மட்டுமே நடிப்பேன்" என்று தெரிவித்தார் நடிகை தமன்னா.

கல்லூரி, படிக்காதவன், அயன், பையா, சிறுத்தை, வீரம், தர்ம துரை என்று தமன்னா நடித்துள்ள சிறந்த படங்களின் பட்டியல் நீள்கிறது. பாகுபலியில் வித்தியாசமான கதாபாத்திரம் ஏற்றார். ஹிந்தியில் வெற்றிகரமாக ஓடிய குயின் படத்தின் தெலுங்கு 'ரீமேக்'கில் தற்போது நடித்து வருகிறார். ஹிந்தி, தெலுங்கு படங்களும் கைவசம் உள்ளன. இந்த நிலையில் கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் நல்ல கதையம்சம் உள்ள படங்களில் மட்டுமே நடிப்பேன் என்று தமன்னா தெரிவித்துள்ளார்.

"நான் சினிமாவில் இவ்வளவு காலம் நீடிப்பது அதிர்ஷ்டம். இது வரை கிடைத்த அனுபவங்களை இனிமேல் நடிக்கப்போகிற படங்களில் காட்டப்போகிறேன். சினிமாவுக்கு வந்த புதிதில் ஒன்றிரண்டு தவறுகள் செய்தாலும் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

ஆனால் இனிமேல் அப்படி முடியாது. எனது பொறுப்பு அதிகமாகியுள்ளன. இத்தனை படங்களில் நடித்து இவ்வளவு அனுபவம் சம்பாதித்த பிறகும் சாதாரண படங்களில் நடித்தால் அதற்கு அர்த்தம் என்ன இருக்கிறது? அர்த்தமே இல்லை. அதனால் நடிப்புக்கு முக்கியத்துவம் இருக்கும் நல்ல கதையம்சம் உள்ள படங்களில் மட்டுமே இனிமேல் நடிப்பேன்" என தமன்னா தெரிவித்தார்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை அதிகரிக்கும். ஆதாயம் உயரும்.

**இடபம்:** பிறர் வாக்குறுதியை நம்பி முக்கிய செயலில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் திடீர் செலவைக் கண்டு திணறுவர்.

**மிதுனம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திப்பர்.

**கடகம்:** பணியில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். இலாபம் சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை அதிரிக்கும். முயற்சிக்குரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். சமூக அந்தஸ்து உயரும்.

**கன்னி:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். குடும்பத் தேவைகள் தாராள செலவில் நிறைவேறும்.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினிடம் பரிசு, பாராட்டு பெறுவர்.

**விருச்சிகம்:** உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறுகளை சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்புடன் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பொறாமை குறையும்.

**கும்பம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் முயற்சியும் உழைப்பும் அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபார நடைமுறையில் குளறுபடி ஏற்பட்டு விலகும். இலாபம் சுமார். பணம் வசூலிக்க இதமான அணுகுமுறை நல்லது.

**நாவடக்கம் தேவைதான் என்பதை திருமணத்துக்குப் பிறகு உணர்ந்தேன்**




மனைவியின் சமையலை சாப்பிட்ட பின்....

**மனைவி** : நீ தான் என்னோட புருஷனா வரப் போறேனு ஸ்கூல்ல படிக்கும் போதே மிஸ் சொல்லிடாங்க....!!!

**கணவன்** : அப்படியா...! ஆச்சரியமா இருக்கே ..!!

**மனைவி** : ஆமா .!! நீயெல்லாம் பெரியவளாகி பண்டி மேய்க்கத்தான் சரி எண்டு சொல்லுவாங்க...!!



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 7 | | | | | | |
| | | | | | 1 | | | |
| | | 1 | | 3 | | 5 | 2 | |
| | | 5 | 1 | | 4 | 3 | | 8 |
| | | | | | | | | |
| 4 | | 9 | 5 | | 7 | 6 | | |
| | 6 | 8 | | 7 | | 4 | | |
| | | | 3 | | | | | |
| | | | | | | 2 | 7 | 5 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 5 | 3 | 2 | 4 | 8 | 6 | 7 |
| 8 | 6 | 7 | 5 | 9 | 1 | 2 | 3 | 4 |
| 3 | 4 | 2 | 6 | 7 | 8 | 5 | 9 | 1 |
| 5 | 3 | 1 | 4 | 6 | 2 | 7 | 8 | 9 |
| 2 | 9 | 6 | 7 | 8 | 5 | 4 | 1 | 3 |
| 7 | 8 | 4 | 1 | 3 | 9 | 6 | 2 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 4 | 3 | 1 | 5 | 2 |
| 4 | 5 | 9 | 2 | 1 | 6 | 3 | 7 | 8 |
| 1 | 2 | 3 | 8 | 5 | 7 | 9 | 4 | 6 |

## இது புதுசு



ஆண்களுக்கான சப்பாத்து வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# உடலில் கொழுப்பு அளவு குறைய உதவும் சூரிய முத்திரை



**செய்முறை**

இடது கை மோதிர விரலை மடித்து இடதுகை கட்டைவிரலின் அடிப்பாகத்தை தொட்டவாறு வைக்கவும். எல்லா விரல்களும் நேராக இருக்கட்டும். கையை மாற்றி செய்யவும். நாற்காலியில் அமர்ந்து கொண்டோ தரையில் அமர்ந்து கொண்டோ இந்த முத்திரையை செய்யலாம். தினமும் காலை, மாலை 15 முதல் 30 நிமிடங்கள் வரை செய்யலாம்.

**பயன்**

தைரொய்டு சுரப்பி தூண்டப்படும். உடல் சூட்டினால் கொழுப்பு கரையும். உடலில் கொழுப்பைக் கரைத்து நிறையைச் சீர் படுத்த உதவும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா செல்லர்



யாழ்.உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா செல்லர் 24.01.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மூத்தார் குஞ்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லரின் அன்பு மனைவியும் சறோஜா (உரும்பிராய்), மலர்றோஜா (லண்டன்), பத்மறோஜா(ஜேர்மனி), ரவீந்திரன்(இத்தாலி), விமலறோஜா (கனடா), ரகுகுமார்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சின்னராசா, ஆசைப்பிள்ளை, பராசக்தி மற்றும் இரத்தினம்(உரும்பிராய்), செல்வராணி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குணரத்தினம்(உரும்பிராய்) மற்றும் சிவா (லண்டன்), அரியராசா(ஜேர்மனி), யசோதா(இத்தாலி), தவனேஷன்(கனடா), கௌரி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூறதன், சுகர்ணா, நிஜாழினி, கனிஸ்ரன், நதியா, நிரோஜினி, நயோமி, அஜந்தன், அனுசா, ஸ்ரேபி, றொபின்சன், நிறோசன், நிறோ, சுஜனி, ஜதுர்ஷன், சோபி மற்றும் சிவசந்திரகுமார், றீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிறித்திகா, மாதுஜா, பபிஷா, ஷாதுர்ஜன், ஜதூர்ஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2018) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

(CS 13385) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி செல்லம்மா சரவணமுத்து



யாழ். சாவகச்சேரி, மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சரவணமுத்து கடந்த (27.01.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக் குட்டியர் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றசரவணமுத்துஅவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புச் சகோதரியும், இந்திராதேவி, கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), கெங்காதரம், காலஞ்சென்ற கமலாதேவி, பரமநாதன் (ஜேர்மனி), யோகராசா(பிரான்ஸ்), தங்கராசா, வைகுந்தராசா (சுவிஸ்), லோகேஸ்வரன் (லண்டன்), தயாநிதி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற நடேசபிள்ளை, புஸ்பராணி (பிரான்ஸ்), கலாராணி, சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சொர்ணறஞ்சி (ஜேர்மனி), ஆனந்தி (பிரான்ஸ்), மதிவதனி, சங்கநிதி (சுவிஸ்), அனேஜா (லண்டன்), விம்லறஞ்சன் ஆகியோரின் அன்புமாமியாரும், பிரியா, பிரிகதேவன் (பிரான்ஸ்), குகபிரியா (லண்டன்), குகநந்தி, நர்மதன், மேதா (லண்டன்), கிருஷந்தன் (பிரான்ஸ்), மதுரா (லண்டன்), ஜெயராஜ் (பிரான்ஸ்), சுஜேந்தினி (பிரான்ஸ்), கஜேந்தினி (பிரான்ஸ்), நிந்துஜா (ஜேர்மனி), நிதுலா (ஜேர்மனி), ஜவாகர் (ஜேர்மனி), சசிகலா (சுவிஸ்), சசிரேகா (பிரான்ஸ்), சசிப்பிரியா (லண்டன்), கஜேந்திரன் (பிரான்ஸ்), சசிக்கா (பிரான்ஸ்), வைஷ்ணன் (சுவிஸ்), நிதுஷ் (சுவிஸ்), மதுரன் (பிரான்ஸ்), பிரவின், சஞ்சயன், ஷயான் (லண்டன்), டிலக்சி (லண்டன்), விணுக்ஷி (லண்டன்), தனுஷன், லதுசன், கனுசன், கஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிசாந், நதிசா, நமிசா (லண்டன்), திவ்வியன் (சுவிஸ்), திவ்வியா (சுவிஸ்), தாகித்தியன் (சுவிஸ்), பிரதீப் (பிரான்ஸ்), அக்ஷயன்(லண்டன்), கனுஷ்கா(பிரான்ஸ்), கஸ்மிரா(லண்டன்), சவ்வியா (பிரான்ஸ்), ஜெய்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை நண்பகல் 12.15 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்திராணி - இலங்கை +94766181302
கிருஷ்ணமூர்த்தி - பிரான்ஸ் +33646319490
கெங்காதரம் - இலங்கை +94773446386
பரமநாதன் - ஜேர்மனி +492043939035
யோகராசா - பிரான்ஸ் +33695115035
சுபந்தன் — பிரான்ஸ் +33626378064, இலங்கை 077 454 2530

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(C 5681/ 15/17)

# வேர்க்கடலை வடை



**தேவையான பொருள்கள் :**

பச்சை வேர்க்கடலை - ஒரு கோப்பை
பச்சை மிளகாய் - 3
பெருஞ்சீரகம் - அரைக் கரண்டி
இஞ்சி - சிறிய துண்டு
புதினா, கொத்தமல்லி - சிறிதளவு
பெரிய வெங்காயம் - ஒன்று
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

வேர்க்கடலையை ஒரு மணி நேரம் ஊறவிடவும். வெங்காயம், புதினா, கொத்தமல்லியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வேர்க்கடலை நன்றாக ஊறியதும் சிறிதளவு வேர்க்கட லையை தனியாக எடுத்து வைத்து மீதமுள்ள வேர்கடலையுடன் தோல் சீவிய இஞ்சி, பச்சை மிளகாய், பெருஞ்சீரகம், உப்பு சேர்த்து தண்ணீர் சேர்க்காமல் அரைத்துக் கொள்ளவும்.

அரைத்த மாவுடன் நறுக்கிய வேர்க்கடலை, வெங்காயம், புதினா, கொத்தமல்லி சேர்த்துக் நன்றாக கலந்து கொள்ளவும். சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் அதில் மாவை வ்டைகளாகத் தட்டி, எண்ணெயில் போட்டு பொரித்தெடுக்கவும்.
அருமையான வேர்க்கடலை வடை தயார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1939.05.09 மறைவு 2017.12.30

அமரர்

**வேலுப்பிள்ளை சண்முகதேவன்**

குடும்பத்தின் குலவிளக்காய்
குறைவிலாது பார்த்தீரே !
குவலயத்தில் குறைவின்றி
புண்ணியஞ் செய்தீரே !
குறைகளின்றி வாழ்ந்தீரே !
குதூகலமாய் இருந்தீரே !
கும்பிட்ட குலதெய்வம்
குறையிலே அழைத்ததேன் ?

கடந்த 30.12.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று நடைபெறுவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை எதிர்வரும் 02.02.2018 காலை 11 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச்சிவன் மண்டபத்தில் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(31523)(8)

**நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி ,**
**சுன்னாகம்.**

**பிரிவால் துயருறும் :**
**குடும்பத்தினர்.**

# குழந்தைகளை பாதிக்கும் பழக்கங்கள்

குழந்தைகளை எவ்வித குறையுமின்றி, நற்பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுத்து, ஆரோக்கியமாக அவர்களை வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். குழந்தை களை சில பழக்கங்கள் பெரிதும் பாதிக்கின்றன.

அவற்றை நீங்கள் அறிந்திருந்தும், அதனை நீங்கள் கண்டு கொள்வதில்லை; அவற்றை சரிசெய்ய பெரிதாய் அக்கறை காட்டுவதில்லை. அப்படிப்பட்ட குழந்தைகளின் சில மோசமான பழக்கங்கள் பற்றி பார்க்கலாம். குறிப்பாக, குழந்தைகள் குறட்டை விடுவது சரியா தவறா எனப் பார்க்கலாம்.

குறட்டை என்பது சுற்றியிருப்பவர்களை தொந்தரவு செய்யக்கூடியது என்று மட்டுமே நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்; ஆனால் குறட்டையால் உடலின் ஆரோக்கியத்திற்குக் கெடுதல் ஏற்படுகின்றது என்பதை நாம் அறிவதில்லை. குழந்தைகள் குறட்டை விட்டால், முதலாவதாக அவர்களின் கற்றல் திறன் பாதிப்படைகின்றது என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

11 வயதுக்கு உட்பட்ட சுமார் ஆயிரத்து 300 குழந்தைகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அந்தக்குழந்தைகள் அதிக அளவில் குறட்டை விடுகின்றனர் என்றும்,



தொடர்ச்சியாக குறட்டைவிடும் குழந்தைகள் பகலில் மிகவும் களைப்படைந்தவர்கள் போல் உள்ளனர். படுக்கையிலேயே சிறுநீர் கழிப்பவர்களாகவும், அவதானிக்கும் திறன் குறைந்த வர்களாகவும், மந்த வளர்ச்சி நிலை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர் எனக் கண்டறியப் பட்டுள்ளது.

இன்றைய கால குழந்தைகள் நொறுக்குத் தீனிகள் போன்ற உப்பு அதிகம் சேர்க்கப் பட்ட உண்வுகளையே உண்ணுகிறார்கள். இது பெற்றோர்களுக்கு சர்வ சாதாரணமாக தோன்றினாலும், குழந்தைகள் வளர வளர உப்பு அதிகமுள்ள உணவுகளுக்கு அடிமையாகி, இது ஒரு பெரும் பிரச்சினையாக மாற வாய்ப்புள்ளது. அதிக உப்பு சேர்த்த உணவுகளை உண்பதால், குழந்தைப் பருவத்திலேயே உடல் பருமன், குருதி அழுத்தம், சிறுநீரகக் கோளாறுகள், இதயக் கோளாறுகள், வாதம் போன்ற உடல் பாதிப்புகள் ஏற்படலாம்.

இந்நோய்'பாதிப்புகளைத் தடுக்க, குழந்தைகள் பதப்படுத்தப்பட்ட மற்றும் அதிகம் உப்பு சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதைத்தவிர்க்க வேண்டும்; மேலும் இளம்வயதிலேயே, அதாவது குழந்தைப் பருவத்திலேயே ஆரோக்கியமான உணவுமுறை குறித்து கற்றுக்கொடுத்து வளர்க்க வேண்டும். காய்கறிகள், கீரைகள், பழங்கள் போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொள்ளுமாறு குழந்தைகளைப் பழக்கப்படுத்த வேண்டும்.

உங்கள் குழந்தைகள் நாள் ஒன்றுக்கு சராசரியாக ஆயிரம் முதல் ஆயிரத்து 500 மில்லி கிராம் வரை உப்பைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் இன்றைய குழந்தைகள் இருமடங்கு உப்பை உண்கிறார்கள் என்பது தான் உண்மை. இந்த மோசமான உண்மையை, உணர்ந்து பெற்றோர்கள் ஆரோக்கியமான உணவு முறையை குழந்தைகளுக்கு பழக்க முயற்சிக்க வேண்டும்.


ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.01.2018 | 2243 | ஊதா |

மிதுனம்

வெற்றி இலக்கங்கள்: 27 29 32 33

செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி: ரூ. 9, 301, 336/=

2018.01.30 ம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது நரித அழைப்பு 1919


## கண்ணீர் அஞ்சலி

### சீவரத்தினம் பாலதயாகரன்

(ஆசிரியர் - யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.
வெளிக்கள நிலைய வளவாளரும் பரீட்சைக்குழு அங்கத்தவரும்)

அன்னாரின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**வெளிக்கள நிலையத்தினர், தொண்டைமானாறு.**

(L9134/ 15/17)

## முதலாம் ஆண்டின் சுகிர்தமான நினைவுகளுடனே

மண்ணில் 09 04 1959

விண்ணில் 09 02 2017



### திருமதி சுகிர்தா அழகரத்தினம்

திதி தினம் : 29.01.2018

மனை மகளாய் மண்ணில் மறைந்து
ஓராண்டும் ஓடி மறைந்ததுவே...
வினை வந்து விதி வழியே...
உனை அழைத்துச் சென்றதுவே...
நினை வழியாத நெஞ்சமுடனே — உன்
உறவுகள் ஏங்கி நினைத்திடவே
நனைகின்ற ஈர விழியிடையே — உன்
முகமும் மலர்ந்திடுமே சுகிர்தமாக...!

15/3. புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். 077 064 6080

என்றென்றுமுன் நினைவுடனே
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி மங்களேஸ்வரி மாணிக்கவாசகர்



சரசாலை வடக்கு, நுணாவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி மாணிக்கவாசகர் நேற்று (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் பிரியதர்சினி, பிரியலோஜினி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தாயும் நவரத்தினம், பார்த்தீபன், சுஜாதா ஆகியோரின் அன்பு மாமியும் அபிஷா, அஜய், கேசிகன், சயந்திகா, சதுர்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

(C 31518/ 15/ 17)

ஓம் சக்தி

## ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

**30.01.2018 இரதோற்சவம் காலை 9.00 மணி**
**31.01.2018 தீர்த்தோற்சவம் காலை 9.00 மணி**

30.01.2018 இரதோற்சவ நிகழ்வுகள் காலை 9.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை . ஓம் T.V மூலம் நேரலையாக காண்பிக்கப்படும்.

(cs.13389) 13.17)

**தேவஸ்தானம்.**

## வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கான கேள்வி முடிவு திகதி நீடிப்பு - யாழ்ப்பாணம் மாநகரசபை

24.01.2018 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு கால நீடிப்பு செய்யப் படுகின்றது.

உ. (2) மூடிய கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 08.02.2018 ஆகும்.

(3) கேள்வி திறக்கப்படும் திகதி 08.02.2018 ஆகும்.

(IN 5687) (04.17)


SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ 760

சீட்டிழுப்பு திகதி ▶ 2018.01.27 சனிக்கிழமை

T 19 34 36 52

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 53,531,864/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்


## பாராட்டி வாழ்துகின்றோம்



எமது கல்லூரியில் ஆசிரியப் பணியில்
வெள்ளிவிழாவினைப் பூர்த்தி செய்து நேற்று
28.01.2018 சேவையிலிருந்து
ஓய்வுபெற்றுள்ள
ஆங்கில பாட ஆசிரியை

**திருமதி தேவமனோகரி சிவராமச்சந்திரன்**
(SLTS- I, Special Trained Eng,
Dip.in.Eng.

அவர்கள் தனது ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவையாளர் சங்கம் - யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

(in.5688) (13.17)

## UDUVIL GIRLS' COLLEGE

**Invites**

The Parents and the Well Wishers to its
Annual Inter - Clan Athletic Meet
**on Tuesday, January 30, 2018, at 1.30 p.m**

**The Chief Guest**

**Dr.Muthusamy Malaravan**
MBBS, MD Ophthalmology
(Consultant Eye Surgeon, Teaching Hospital Jaffna)

You are cordially invited.

**- Principal, Staff & Students -**

(C/31513)(11,17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 19.09.1929
இறப்பு 30.12.2017

கடந்த (30.12.2017) சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### சிவசம்பு கணபதிப்பிள்ளை

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.01.2018) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுத் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**டச்சு வீதி,
மண்டுவில், சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
**(அருள் விநாயகர் மோட்டோர்ஸ்)**
**(அருள்நிலா நகைமாடம்)**

# சென்னை சுப்பர் கிங்ஸில் வேகப்பந்துவீச்சு இல்லை




நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் நடைபெற்று முடிந்துள்ளது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சென்னை அணி ஓரளவு சிறந்த அணியைக் கட்டமைத்துள்ள போதிலும், வேகப்பந்து வீச்சாளர்கள் என்ற வரிசையில் அந்த அணி கூடுதல் கவனம் செலுத்தத் தவறிவிட்டது என்பதை அணித்தெரிவு புலப்படுத்துகிறது.

**இலக்குக் காப்பாளர்கள்:** டோனி, ராயிடு, பில்லிங்ஸ், ஜெகதீசன், துடுப்பாட்ட வீரர்கள் முரளி விஜய், பிளாசிஸ்.

**சகலதுறை வீரர்கள்:** ரெய்னா, ஜடேயா, கேதர் யாதவ், வெய்ன் பிராவோ, வற்சன், சேத், சோரே, பிரணாய், தீபக்சாகர், சான்நெர், சிட்டிஸ் சர்மா.

**பந்துவீச்சாளர்கள்:** கரண் சர்மா, நரேந்திர தாகூர், ஹர்பஜன் சிங், மார்க் வூட், தாகிர், லுங்கி நிகிடி, ஆசிப், மோனு சிங்.

சென்னை சுப்பர் கிங்ஸின் அணித் தெரிவில் ஒட்டு மொத்தமாகக் கவனம் செலுத்தினால் அந்த அணியின் நிர்வாகம் வேகப்பந்து வீச்சைப் பொறுத்த மட்டில் பெரியளவில் கவனம் செலுத்தவில்லை என்பது புலனாகிறது. பன்னாட்டு அரங்கில் மிகவும் அறியப்பட்டவராக எந்தவொரு வேகப்பந்துவீச்சாளரும் சென்னை அணியில் இல்லை. அதேநேரம் சுழல் பந்துவீச்சுடன் கூடிய சகலதுறை வீரர்களை சென்னை அதிகளவில் வாங்கிக் குவித்துள்ளது. (ம)

# மகாஜனாவுக்கு மூன்றாமிடம்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

கம்பளை சாயிரா கல்லூரி மைதானத்தில் நேற்று மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கம்பகா பண்டாரநாயக்க வித்தியாலய அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீரர் கனுஜனின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் கம்பகா பண்டார நாயக்கா வித்தியாலய அணி தடுமாறியது. அவர் ஆட்டத்தின் 5ஆவது மற்றும் 10ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார்.


இரண்டாவது பாதியாட்டத்திலும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிஅணியின் ஆதிக்கம் தொடர்ந்தது. 9ஆவது நிமிடத்தில் தஜீபன் ஒரு கோலைப் பதிவுசெய்ய ஆட்ட நேர முடிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிஅணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-422)




# ஆஸி. தொடரில் வோஸ்னியாக்கி மகுடம் சூடினார்

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான ஆஸ்திரேலியத் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் கரோலின் வோஸ்னியாக்கி.

டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கியை எதிர்த்து உரோமானிய வீராங்கனை கேலப் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வோஸ்னியாக்கி. அவர் இரண்டாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார். முதல் இரண்டு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஒரு வெற்றியுடன் இருந்தனர். மூன்றாவது செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றார் வோஸ்னியாக்கி. (ம)



# மகாஜனா சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கம்பளை சாயிரா கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட அணிகளான தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை அணி வீராங்கனைகள் ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடத்தில் இரண்டு கோல்களைப் பதிவு செய்து மகாஜனக் கல்லூரியை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர். இதில் முதலாவது கோலை ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் நிரோசிகாவும், இரண்டாவது கோலை ஐந்தாவது நிமிடத்தில் அலன்ரீனாவும் பெற்றனர். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல்பாதி.



இரண்டாவது பாதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீராங்கனை சாணு தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 15ஆவது, 20ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவு செய்து பதிலடி கொடுத்து கோல்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக்கட்டத்தை எட்டியது. இதன் பின்னர் இரு அணிகளும் பலமுறை முயற்சித்த போதும் மேலதிக கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது மகாஜனா.

ஆட்ட நாயகியாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீராங்கனை சாணு, சிறந்த கோல் காப்பாளராக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வீராங்கனை லக்சிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-23-422)

# கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து அணி



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதி ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று 4:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து அணி.

ஆஷஸ் தொடரைத் தொடர்ந்து இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வந்தது. முன்னதாக முடிவடைந்த நான்கு ஆட்டங்களில் மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை ஏற்கனவே உறுதி செய்திருந்தது இங்கிலாந்து அணி. இந்த நிலையில் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 47.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 259 ஓட்டங்களைச் சேர்த்தது. அதிகபட்சமாக ரூட் 62 ஓட்டங்களையும், றோய் 49 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 44 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் டை 5 இலக்குகளையும், மிச்செல் மார்ஷ் 2 இலக்குகளையும், ஸ்ராக், சாம்பா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 247 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 12 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இங்கிலாந்து அணி. அதிகபட்சமாக ஸ்ரொய்னிஸ் 87 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 34 ஓட்டங்களையும், பெய்ன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கரன் 5 இலக்குகளையும், மொயின் அலி 3 இலக்குகளையும், ரசிட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கரன், தொடராட்ட நாயகனாக ரூட் ஆகியோர் தெரிவாகினர். (ம)

# அரியாலை ஐக்கியம் கிண்ணம் வென்றது

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் அரியாலை ஐக்கிய அணி கிண்ணம் வென்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கபடித் திடலில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. முடிவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 48:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)


# பெற்றது இமாலய வெற்றியே என்கிறார் விராட் கோக்லி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் கிடைத்த வெற்றி இமாலய வெற்றி என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 187 ஓட்டங்களுக்குச் சுருண்டது. அதிகபட்சமாக கோக்லி 54 ஓட்டங்களையும், புஜாரா 50 ஓட்டங்களையும், புவனேஸ்வர் குமார் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளையும், மோர்கல், பிளன்டர், பிளுக்வையோ ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 194 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அம்லா 61 ஓட்டங்களையும், பிளன்டர் 35 ஓட்டங்களையும் ரபாடா 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பும்ரா 5 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார் 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 247 ஓட்டங்களைக் குவித்தது. ரகானே 48 ஓட்டங்களையும், கோக்லி 41 ஓட்டங்களையும், புவனேஸ்வர் குமார் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிளன்டர், ரபாடா, மோர்கல் மூவரும் தலா 3 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். 241 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 177 ஓட்டங்களுக்கு சகல இலக்கையும் இழந்ததை அடுத்து 63 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றியைப் பதிவுசெய்தது இந்தியா. புவனேஸ்வர் குமார் ஆட்டநாயகனானார்.




ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

“முதல் இரு டெஸ்ட் ஆட்டங்களில் வெற்றிக்கு அருகே வந்து அதைத் தவறவிட்டோம் என்பதை நினைத்து வருத்தப் பட்டோம். ஆனால், இந்த ஆட்டத்தில் வெற்றியை அடைந்துவிட்டோம். இந்த ஆட்டத்தில் பந்துவீச்சாளர்கள் அனைவரும் மிகச் சிறப்பாகப் பந்துவீசினார்கள், 20 இலக்குகளையும் வீழ்த்தியுள்ள அவர்களின் பணி சிறப்பானது. இந்த வெற்றி எங்கள் அணிக்கு மிகப்பெரிய மைல்கல்லாக அமையும். நாங்கள் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறுவோம் என நம்பினோம், அதேபோல் வெற்றியும் கிடைத்துள்ளது. இந்த வெற்றி, எந்தச் சூழலில் இருக்கும் ஆடுகளத்திலும், எங்களால் தாக்குப் பிடித்து, திறமையை வெளிப்படுத்தி விளையாட முடியும் என்ற மனவலிமையை கொடுத்துள்ளது. நாங்கள் தோல்விகளை முதலில் அடைந்தாலும், வெற்றி யுடன் முடித்து இருக்கி றோம். இந்த வெற்றியை எங்களால் நீண்ட காலத்துக்கு மறக்க முடியாது. நான் மட்டுமல்ல, அணி வீரர்கள் அனைவரும் இதை நம்புகிறார்கள். ஓய்வு அறையில், ஒட்டுமொத்த அணியின் மனிநிலையை மாற்றி, மகிழ்ச்சியான சூழலுக்கு இந்த வெற்றி வித்திட்டு விட்டது” என கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)



## அணியில் ரெய்னா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி-20 தொடருக்கான இந்திய அணியில் அதிரடி வீரர் ரெய்னா இடம்பிடித்துள்ளார்.

இந்தஇரண்டுஅணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் முடிவடைந்துள்ளது. அடுத்ததாக ஆறு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. நீண்டகாலமாக அணியில் புறக்கணிக்கப் பட்டிருந்த ரெய்னா மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

**இந்திய அணி விவரம்:** விராட் கோக்லி, ரோகித் சர்மா, தவான், கே.எல். ராகுல், ரெய்னா, டோனி, தினேஷ் கார்த்திக், ஹர்திக் பாண்டியா, பாண்டே, பட்டேல், சாகல், குல்தீப் யாதவ், புவனேஷ்வர் குமார், பும்ரா, உனாட்கட், ஷர்துல் தாக்கூர்.

(ம)


# நியூசிலாந்தை வீழ்த்தி பாகிஸ்தான் சம்பியன்


நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று 2:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது பாகிஸ்தான் அணி.

முதலிரு ஆட்டங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தன. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சமன் 46 ஓட்டங்களையும், அகமட் 29 ஓட்டங்களையும், அமீன் 21 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் சொகைல், சான்நெர் இருவரும் தலா 2 இலக்குகளையும், போல்ட், கிரான்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதையடுத்து 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான். அதிகபட்சமாக கப்ரில் 59 ஓட்டங்களையும், ரெய்லர் 25 ஓட்டங்களையும், சான்நெர் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சடப்கான் 2 இலக்குகளையும், யமீன், ரயீஸ், அமீன், அஸ்ரப் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)



# அஸ்வினிடம் திறனில்லை

## பிளெமிங் வெளிப்படை


நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அஸ்வினைப் புறக்கணித்திருந்த நிலையில், “மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் சிறப்பாக வீசக்கூடிய திறன் அஸ்வினிடம் தற்போது இல்லை” என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் பிளெமிங்.

சென்னை அணி அஸ்வினை நிச்சயம் ஏலத்தில் எடுக்கும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இதன்படி சென்னை அணியும் அஸ்வினை எடுப்பதற்கு போட்டியிட்டது. 4 கோடி ரூபா வரை அஸ்வினுக்காகக் கொடுக்க முன்வந்தது. பின்னர் சென்னை பின்வாங்கியது. ராஜஸ்தானுடன் போட்டியிட்டு அஸ்வினைத் தன தாக்கியது பஞ்சாப். இதையடுத்தே பிளெமிங் இவ்வாறு தெரிவித்தார்.

“சென்னை அணி ஏலத்தில் எடுத்துள்ள அனைத்து வீரர்களும் கூடுதல் மதிப்புக் கொண்டவர்களே. அயல் நாட்டு வீரர்களைப் பொறுத்தவரை நாங்கள் சகலதுறை வீரர்களையே பெரிதும் விரும்புகிறோம். அவர்கள் மீது முதலீடு செய்த பணத்துக்கான மதிப்பை அளிப்பார்கள் பிராவோ, வற்சன் ஆகியோரை அதனால் தான் தெரிவு செய்தோம். பன்முகத் திறமை கொண்ட அணியைத் தேர்வு செய்துள்ளோம். அஸ்வினுக்குப் பதிலாக ஹர்பஜனை எடுத்தமை மகிழ்ச்சியே” என பிளெமிங் மேலும் தெரிவித்தார்.

(ம)

# ஆஸ்திரேலியத் தொடரில் பெடரர் சம்பியன்



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடரில் கிண்ணம் வென்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ளவரான பெடரரை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஆறாவது இடத்தில் உள்ளவரான குரோசிய வீரர் மரின் சிலிச் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். இரண்டாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் சிலிச். மூன்றாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றார் பெடரர். நான்காவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி மீண்டும் பதிலடி கொடுத்தார் சிலிச். இறுதி செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். இதனால் அவர் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரிலும் பெடரர் சம்பியனாகியிருந்தார். நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய அவர் தனது அந்தஸ்தைத் தக்க வைத்தார். (ம)



## மும்பையில் தனஞ்சய

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சாளர் தனஞ்சய மும்பை இந்தியன்ஸ் அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் நேற்றும், நேற்றுமுன்தினமும் பெங்களூரில் நடைபெற்றது. இரண்டாவது நாளான நேற்றைய தினமே தனஞ்சய மும்பை இந்தியன்ஸ் அணியால் ஏலத்தில் வாங்கப்பட்டார். 50 லட்சம் ரூபா கொடுத்து அவர் ஏலத்தில் எடுக்கப்பட்டார். (ம)





## பஞ்சாப்பில் கெய்ல்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் அதிரடி வீரர் கெய்ல்.

நேற்றுமுன்தின முதலாம் சுற்று ஏலத்தில் கெய்ல் எந்தவொரு அணியாலும் ஏலத்தில் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார். நேற்றுக் காலை நடைபெற்ற இரண்டாவது சுற்றிலும் கெய்ல் புறக்கணிக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்றுமாலை நடைபெற்ற மூன்றாவது சுற்றில் பஞ்சாப் அணி அவரை வசமாக்கியது. (ம)

யாழ் பாடியில்
தினமும் முற்பகல் 11 மணி முதல்
ஒடியல் கூழ்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800 (C/58237) (11.17)

தவறிவிட்டது
பலாலி கிழக்கு, வசாவிளானைச் சேர்ந்த குலத்துங்கம் வில்வராசா ஆகிய எனது மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கிய கை பேஸ் சித்தங்கேணிக்கும், சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. எனவே கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு மிகவும் தயவாக கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். தொ.பே - 077 755 2947
(9131)(17.8) 021 205 8154

CHEMISTRY COURT
80, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
2019 A/L
அசேதன இரசாயனம்
TAMIL & ENGLISH MEDIUM
ஆரம்பம் : 30.01.2018
SAT, SUN, TUE, FRI
(6.00 - 7.30) P.M
RAJAH B.Sc.(Chem.Spl),P.G.D.E

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111

விசேட நுண்ணறிவு வகுப்புக்கள்
இலங்கை நிர்வாக சேவை
இலங்கை கணக்காய்வாளர் சேவை
காலம் - 31.01.2018 புதன்கிழமை
நேரம் - மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி வரை
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.
077 4696 695

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வட மாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
[illegible] CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
[illegible] படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் இணையமுடியும்.
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 03.02.2018
பிரிவு1. காலை 08-10 பிரிவு3. பி.பகல் 01-03
பிரிவு2. காலை 10-12 பிரிவு4. மாலை 03-05
வாரநாள் (திங்கள், புதன்) வகுப்புகள் : 07.02.2018
1.காலை 08-10 2.காலை 10-12
[illegible]
SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29 .01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.